The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

EDITED BY
Vidwan A. VADIVELAN,
Honorary Secretary,
T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXIX Nos. 1, 2 & 3

PUBLISHED ON BEHALF OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1977 Saka 1899

Annual Subscription Rs. 6.

Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

ADMINISTRATIVE COMMITTEE

Thiru S. A. SUBRAMANI, I. A. S.,
District Collector & President,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru N. PALANIAPPAN, B. A., B. L.,
District Judge & Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru RY. THULAJENDRA RAJA SAHEB,
Prince & Life Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Thiru R. JAYARAMAN, B. A., B. L.,
Advocate & Member,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

Vidwan Thiru A. VADIVELAN,
Member & Honorary Secretary,
T. M. S. S. M. Library Committee,
Thanjavur.

The Journal of
The Tanjore Maharaja Serfoji's
Sarasvati Mahal Library

EDITED BY

Vidwan A. VADIVELAN,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXIX **Nos. 1, 2 & 3**

PUBLISHED ON BEHALF OF

THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1977 Śaka 1899

Annual Subscription Rs. 6.

CONTENTS

			Pages
1.	Editorial	...	i-ii
2.	வலைவீச புராணம் —V. Chockalingam, Vidwan, Tamil Pandit, Sarasvati Mahal Library.	...	41-70
3.	தன்வந்தரி வைத்தியம் — மூன்றும் பாகம் —Dr. S. Venkatarajan, L. I. M,	...	401-424
4.	மகாலின் ரிக்வேதப் பிரிவிலுள்ள காகிதச் சுவடிகளின் படத்தொகுப்புக் கதை —M. Seeralan, B. A., Assistant Librarian, Sarasvati Mahal Library.	...	1-20
5.	युद्धकाण्डचम्पूः (Completed) —P. M. Padmanabha Sarma, Siromani, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.	...	49-73
6.	दशावतारस्तुतिः —K. E. Govindan, Siromani, Vidya Varidhi, Siksa Sastri, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.	...	9-16
7.	पारदविज्ञानम् Title page & Contents: Text (Completed) —N. V. Venkatasubramania Sastri, Siromani, Sanskrit Pandit, Sarasvati Mahal Library.	...	9-16 i-ii
8.	बारामासवर्णन Introduction in English —T. R. Bhima Rao, Marathi Pandit, Sarasvati Mahal, Library.	...	1-8 i
9.	रसिककर्णामृत (स्त्रीलक्षण प्रबन्ध) —N. Viswanathan, Telugu Pandit, Sarasvati Mahal Library.	...	9-16
10.	From Our Visitors' Book.	...	i-vii

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XXIX A. D. 1977 Śaka 1899 Nos. 1, 2 & 3

EDITORIAL

The twenty-nineth volume of the Literary Bulletin of our Library is being released as a combined issue before our readers and subscribers.

In this issue the Tamil Section begins with the serial "*Valai Veesu Puranam*" for literary taste and '*Dhanvantari Vaidyam*" for Indegenious medical system. The new article on "*The short accounts of the Rig Veda illustrations*" is a collection of available informations in the Sanskrit section. The stories are pictorially depicted with natural colours in each cover page of the paper manuscripts. It is quite sure that it will induce the readers to observe the beauties of the paintings preserved in this Library. The Library is also having a plan to publish this coloured illustrations as "*Prestige Publication*" of this institution with the Government of India's financial assistance.

The Sanskrit serial article "*Uddha Kanda Campu*" of Ganasyama Kavi concludes with this number. We are planning to publish the other works of the same poet in the ensuing issues also. The Ayurvedic article "*Paradavignanam*" ends with this issue. The Serial "*Dasavathara Stutih*" is being continued.

In Marathi section the serial "*Rasika Karnamrta Prabhanda*" will be followed up in the next issues. The new article "*Bara Masa Varnana*" reveals the feelings of the heroine during the twelve months in a year in her desparate mode.

The concluding article of this issue "*From our Visitor's Book*" will delight the readers while reading the impressions and feelings of the recent distinguished visitors about this library.

Further it becomes the duty of every literal brain to bestow their respect on this happy event of the 200th Birth-day of Maharaja Serfoji, the founder of the world famous Sarasvathi Mahal. The memorable Birth-day is 24th September 1977. The Library has proposed to release the next issue of the Journal as Maharaja Serfoji's commemoration volume.

Thanks to our readers till we meet again through our next issue.

Thanjavur }
11—9—77 }

EDITOR

அறிவு, நிறைவு, ஒப்புரவு, கடைப்பிடி என்று சொல்கின்ற [1] புருட லட்சணம் நான்கும் தனக்கு ஆபரணமாகக் கொண்டு ஞான பரிபூரணனு யிருக்கின்ற பரதனும், அவன் மனைவி 'கற்புக்கு அருந்ததி' என்று சொல்லத்தக்க பதிவிரதை பாவகமுடையாளாகி, ஆதுலர்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்கு உண்டி, பசுவுக்கு வாயுறை, கண்ணடி. அஞ்சனம், கண்மருந்து, தலைக்கு எண்ணெய், பெண்போகம், கன்னிகாதானம், தண்ணீர்ப்பந்தல், [2] இட்டுரை, தடாகம், கா, ஆவுரிஞ்சி, விலங்கிற்குணவு, மூடவர்க்களித்தல், விலைகொடுத்துயிர் விடு(த்)தல், சிறைச்சோறு, தின்பண்டம் (நல்கல்), மறை ஓதுவித்தல், மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் (வார்த்தல்), அறவைச் சோறு, பிணஞ்சுடுவித்தல், வண்ணன் கூலி, நாவிதன் கூலி, நோய் மருந்து, ஐயமிடுதல், வறியோர்க்குத் துயில் அளித்தல், அறவைத்தூரியம் என்று சொல்கின்ற [3] முப்பத்திரண்டு அறமும் திறமாக நடத்திப்போது கின்ற வருணவல்லியும் ஒரு புத்திர உற்பத்தி வேண்டுமென்று கருதி, நம்மை நோக்கித் தவஞ் செய்து நின்றார்கள். ஆதலால் நீ அவர்களுக்கு மகளாகச் செனிக்கக்கடவை. நீ பிறந்து வளர்ந்து உனக்குப் பருவம் வந்த காலத்து, நாம் ஒரு மானிட [4] வடிவம் கொண்டு வந்து, வலைவீசி உன் புத்திரனுகிய மகரத்தைப் பிடித்து, உன்னையும் திருமணம் செய்து கொள்ளக் கடவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

தொல்லைநில மறியும்வண்ணம் தோன்றுகின்றோம் நாம்வந்து
மெல்லியலே இப்பொழுதே போகென்று விடைகொடுத்தார். (74)

---

52. பரகாயப்பிரவேசம். 53 அதிரிசயம். 54. இந்திரஞாலம். 55. மகேந்திர ஞாலம். 56, அக்கினித்தம்பம். 57. சலத்தம்பம். 58. வாயுத்தம்பம் 59. திட்டித் தம்பம். 60. வாக்குத்தம்பம். 61. சுக்கிலத்தம்பம். 62. கன்னத்தம்பம். 63. கட்கத் தம்பம். 64. அவத்தைப்பிரயோகம்.

1. அறிவு, ஓர்ப்பு, கடைப்பிடி, நிறைவு.

2. மடம் போலும்

3. 1. ஆதுலர்சாலை. 2. ஓதுவார்க்குணவு. 3. அறுசமயத்தார்க்குண்டி. 4. பசுவுக்கு வாயுறை. 5. சிறைச்சோறு. 6. ஐயம். 7. தின்பண்டம் நல்கல். 8. அறவைச் சோறு. 9. மகப்பெறுவித்தல். 10. மகவுவளர்த்தல். 11. மகப்பால் வார்த்தல். 12. அறவைப்பிணஞ்சுடுதல். 13. அறவைத்தூரியம். 14. சுண்ணம் 15. நோய்க்குமருந்து 16. வண்ணார்கூலி. 17. நாவிதர்கூலி. 18. கண்ணடி 19. காதோலை. 20. கண்மருந்து. 21. தலைக்கு எண்ணெய். 22. பெண்போகம். 23. பிறர்துயர்காத்தல். 24. தண்ணீர்ப்பந்தல். 25. மடம். 26. தடம். 27. சோலை. 28. ஆவுரிஞ்சுதறி. 29. விலங்கிற்குணவு. 30. ஏருவிடுதல். 31. விலைகொடுத் துயிர்விடுதல். 32. கன்னிகாதானம்.

4. விக்கிரகத்தைக் கொண்டுவந்து என்றுள்ளது.

விருத்தம்

மறைபயிலும் வியாதன்றன் மரபில்வந் தவர்துங்கன்
பறைகுளிர்வெங் களிற்றுக்குப் பரதவர்தங் குலதீபன்
அறைகடல்சூழ் பார்புகழும் அதியரையன் றனக்குநீ
பிறைநுதலாய்! பிள்ளையாய்ப் பிறவென்றார் பிறவாதார், (75)

வேறு

பிறந்து வளர்ந்து பேதையாய்ப்
பேசு மடனுணம் பிறப்பச்சம்
நிறைந்து நம்மே லாதரவு
நெஞ்சி னூறுங் காலத்துச்
சிறந்த வேட மதுபுனைந்து
தென்மங்கை தனில்நாம் வருகின்றோம்
குறைந்து வருந்துந் தனிமருங்கில்
கொடியே போகென் றருள்செய்தார். (76)

வகுப்பு

காமத மலைசெற் றுரிகொண்டவர்
கதிர்முடி மதனைச் சுடுமம்பகர்
கனல்வர வதனைப் புனைசெங்கையர்
கலைபயில் தமிழைத் தெரிநன்றியர்
இரவினில் நடமிட் டருள்கின்றவர்
விரிமறை மகிழ்பொற் பாதபங்கையர்
அணிவளை யேரளிமைக் குழல்வஞ்சியை
அறுமுக வரசைத் தருமங்கையை
அருள்புனை பிடியைத் தொழிலொன்றிய
பரிபுர மயிலைத் தொழுதண்டர்கள்
பரவிடு குயிலைத் தாயையன்பொடு
பரதவர் மரபில் பிறவென்றார். (77)

வேறு

புதுமதன் மெய்ப்பொடி கண்டார்
புரமெரி யச்சிலை கொண்டார்
புரையற நிறத நினைந்தார்
புனல்விழி மெத்தி யிருந்தார்

விதிதலை கத்த வரிந்தார்
விரகறு மெச்சி லுகந்தார்
விறநம னுடலை யுதைத்தார்
விதுவர கக்கோ டணிந்தார்
அதிதிரை யிற்கடு வுண்டார்
அவனிய னைத்தும் நிறைந்தார்
அலைபுனை அத்தி புனைந்தார்
அடியவர் பத்தியில் நின்றார்
பதமத வெற்பை முனிந்தார்
பரிபுர மிட்டு நடந்தார்
பரதவர் குலந்தனில் வந்தார்
பணிமொழி யைப்பிற வென்றார். (78)

உரை

இவ்வண்ணமே தம்பிரான் அருளிச்செய்யக்கேட்டுத் தம்பிராட்டி மிகவும் பயந்து, எழுந்திருந்து வணங்கி, "தம்பிரானே! பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, வேளாளர், என்னும் நான்கு சாதியிருக்க அவை ஒழிந்து, பரதவர் வமிசத்தில் அடியேன் பிறக்கக்கடவது ஏன்?" என்று விண்ணப்பம் செய்யத்தம்பிரானும் பார்வதியை நோக்கி "கேளாய் கௌரி! பரதவராய் நின்றவர் கேவலரல்லர்காண். சமுத்திரம் [1] முற்றுமே பெருகிப் பூமியைக் கொள்ளாதபடி சமுத்திர மத்தியத்திலே குதிரை முகமாகி நின்று எரிகின்ற, புனலைச் [2] சுவறுவிக்கின்ற வடவாமுகாக்கினியை நாம் வாங்குதலாலே, பிரளையம் கோத்துப் பூமியைக் கொள்ளாநின்ற காலத்து நாம் கற்பித்த ஆகமத்தின்படியே பக்தர்கள் நம்மைப் பூசிப்பதாக இருந்த உருவத்தினை ஒரு தோணியிலே வைத்துக்கொண்டிருந்து, நம்மைப் பூசித்து நம் ஊரான சீர்காழி நகருக்குத் 'தோணிபுரம்' என்று ஒரு பெயரை முன்பு உலகில் வழங்கிய புகழையுடைய மரபினர்காண் உமையே பரதவர்!" எனத் திருவாய்மலர்ந்தருளினார்.

தோணி புரமென் றொருநாமம்
தொல்லை யுலகில் வழங்குவித்துப்
பூணும் புகழா மரபினர்காண்
உமையே பரதவ ரென்றுரைத்தார். (79)

---

1. முற்றுலே என்றுளது. 2. வற்றச் செய்கின்ற.

விருத்தம்

துள்ளு மகர நெடுங்கடலில்
சொலிக்கும் மடைவைக் கனலவித்து
வெள்ள மிகுந்து கிளர்ந்தோங்கி
விண்ணு மண்ணும் பரந்தெழுநாள்
உள்ள மகிழ்ந்து தோணிநமக்
குதவி யுடனே யீந்துபுகழ்
கொள்ளும் பெருமை படைத்துடைய
குலங்காண் பரதவர் குலமென்றார். (80)

உரை

"சோழனுக்குச் சரீரத்திலே [1] துவறதோடமுண்டாகி, தோடம் தீர உவரிக்கடல் நடுவில் மாமாங்கம் என்கிற தீர்த்தம் ஆட மாறும் என்று மகாவிருடிகள் சொல்ல, வீரசோழவேதியரைய னென்பான் ஒரு பரதவன். சோழனை ஒரு தோணியில் கொண்டுசென்று சோழனைத் தீர்த்த மாடுவித்துத் துவறதோடம் மாற்றுவித்து, அக்கங்கையை நோக்கிப் பன்னிரண்டு வருடத்துக்கு ஒருநாள், சோழ மண்டலத்துப் பேராற்றங் கரையிலே நின்றதொரு [2] வாசிலே உதிக்கும்படி கற்பித்தது. ஆதலால் ஆற்றங்கரையில் நின்ற வளரரசுதன்னில் மாமாங்கம் தோன்றும்படி முன் சொன்னவர்காண் தோகாய் பரதவர்" எனப் புகன்றார்.

விருத்தம்

ஆர வளைகள் பலமுழங்க
வம்பொற் றேணி தனின்மீது
சேர பதியை யுடன்வைத்துத்
திரைவா ருதியில் நடுச்சென்று
சார வரிய மாமாங்கம்
காட்டிச் சடநோய் தவிர்ப்பித்த
வார முடைய மரபுகா
ணுமையே பரதவர் மரபென்றார். (81)

உரை

"அதுவன்றியும் பாண்டியனுக்கு, ஆகாத நாளையிலே பிள்ளை பிறக்க, அப்பிள்ளை இருந்தால் ஆறு ஆண்டுகள் மழை பெய்யாது பிராணிகள் நாசமாகுமென்றும், அதனைக் கடலிலே போடுகிறதுதான் தன்மமென்றும்

1. —? 2. கும்பகோணம் மகாமகக்குளம் போலும்,

சோதிடர்கள் சொல்லப் பாண்டியன், தேவேந்திர வல்லவதரையன் என்பானொரு பரதவனை அழைத்து "நீ இப்பிள்ளையைக் கடலிலே போட்டு வருவாய்!" என்ன, அதற்குத் தேவேந்திர வல்லவதரையன் 'நாம் இந்தப் பிள்ளையைக் கொல்லுவது சரியல்ல' வென்று கருதிப் பிள்ளையைத் தன் மனைவி கையிற் கொடுத்துத் தன் பிள்ளையைக் கடலிலே போட்டுச் சில காலம் சென்ற பின்பு பாண்டியனுக்கு இராசயோகம் பிறந்த காலத்துத் தான் வளர்த்த பிள்ளையைக் கொண்டு சென்று காட்டி, அப்பிள்ளைக்குப் பட்டாபிடேகம் செய்தார். ஆதலால் [1] நின் பவம் நீங்கத் தென்னவர்தம் குலந்தான் உலகில் நிலைநிற்கப் பைம்பொன் மகுடம் புனைவித்த குலங்காண் பரதவர் குலம்" என்றார்.

விருத்தம்

கோல முடைய மைந்தனிவன்
பிறந்த நாளிற் கொடுமையினால்
ஞாலந் தன்னில் மழைபெயர
நடுவே கொடுபோய் நீயிவனை
வேலை தனிற்போக் கெனமொழிய
வேந்தன் மகனை வளர்த்துத்தன்
பாலன் தனைவே லையிற்போக்குங்
குலங்காண் பரதவர் குலமென்றார். (82)

உரை

"அதுவன்றியும் இராக்கதர் [2] மீன் வடிவுகொண்டு பூமியை அழித்து மீண்டும் மீன் வடிவாகிச் சமுத்திரத்திலே திரிகின்ற செயற்பாடறிந்து வீர சோழவதியரையன் என்பான் ஒரு பரதவன், சோழனைத் தோணியிற் கொண்டுசென்று, வீரராட்சதராகி சமுத்திரத்தைப் பெரு வலையாலே வளைத்து, மீன்களைப் பிடித்துச் சோழனைக்கொண்டு கொல்லுவித்தும், அக்கடலில் நிற்பதொரு பனை, ஆதித்த உதையத்தை மறைக்கப் பூமியில் உள்ளார்க்கு ஆதித்த உதையம் காணும்படியாகச் சோழனை ஒரு தோணியில் கொண்டு சென்று, பின் முதுமகாவாரி எழும் கதிர் மறைத்த அந்தப் பனையை வெட்டி வீழ்த்திய வீரர்காண், உமையே பரதவர்" எனப் புகன்றார்.

விருத்தம்

சோழர் பதியைத் தோணிதனிற்
கொண்டு சென்று சுடர்வாளால்

---

1. நின்பவலங்க என்றுளது. 2. மஷத்தின் என்றுளது.

ஆழி தன்னில் மீன்வடிவ
வசுர ருடலைத் துணிப்பித்து
வாழு மிரவி யுதையத்தை
மறைக்கும் பனையைத் தறிப்பித்து
ஏழு புவியுங் காத்தவர்காண்
உமையே பரதவர் எனமொழிந்தார் (83)

உரை

" அதுவன்றியும் இருடி கெற்பமாகி, இரண்டு பிள்ளைகள் மீன் வயிற்றிலே பிறக்க, கங்கா தீர்த்தமாகிய பரதாபுரியில் வந்து சேரக்கண்டு வண்டுவரீசன் என்கின்ற பரதவன், அந்த மீனைப் பிடித்துக்கொல்ல, அதன் வயிற்றிலிருந்த பிள்ளைகளிருவரையும் வாங்கி வளர்த்து, மீனின் வயிற்றிலே தோன்றியதால் 'மச்சேந்திரையன்' என்றும், [1] 'மச்சேந்தி' என்றும் பெயரிட்டு வளர்க்கின்ற செயல்கேட்டு, விராடன் தனக்குப் பிள்ளை யில்லாமையால் பரதாபுரியிலே வந்து வண்டுவரீசனைக்கண்டு " உனக்குப் பிள்ளையாயுள்ள மச்சேந்திரையனை எனக்குப் பிள்ளையாய்த் தரவேணு மென்று (கேட்க, அவனும் தர) வாங்கிக்கொண்டு போய்த் தன் நகர் புகுந்து, 'தன்வமிசத்துப் பிள்ளையாகுக மச்சேந்திரையன்' என்று முழுக் காட்டி, (விராடன் தன் பெயராலுள்ள) விராடவர்கள் நாட்டுக்கு (மச்சேந்திரையன் பெயரால்) மச்சவள நாடென்று பெயர் வழங்கு வித்தான்.

பின்பு, பராசரப் பிரம்ம விருடி நிமித்தமாக மச்சேந்தி மாறிப் பரிமளகந்தியாகி [2] வேதவியாசரைப் பயந்தெடுத்த கெந்தவதியைக் குருகுலவமிசத்துச் [3] சந்தனராசனுக்குத் திருமணம் செய்து கொடுத்து, அவன் [4] புத்திரனாலே குருகுல வமிசம் [5] பரிபாலித்தவர் பெருமைதன்னை அளந் தொருவர் ஓதலாமளவோதான் உமையே!' என்று உரைத்தார்.

விருத்தம்

பெருநீர் தனக்கு தோணிநமக்
களித்து சொன்ன பிணிக்குதவி

---

1. மச்சகந்தி. 2. பராசரர் ஒரு நாள் கடலில் படகில் செல்லுங்கால் நல்ல நேரமாக இருந்தது. இந்த நேரத்தில் பிள்ளை பிறந்தால் பேரறிவுள்ளதாக இருக்கும் எனக்கண்ட அவர், அருகில் இருந்த மச்சகந்தியைப் பரிமளகந்தியாக்கிச் சத்தியவதி எனும் பெயரால் அணைந்து, வேத வியாசரைப் பெற்றார். வேத வியாசரின் தாயான மச்சகந்தி சந்தனு மன்னனை மணந்ததால் சந்தனுமா மன்னனின் மைந்தரான வீட்டுமரும், வேதவியாசரும் உடன் பிறந்தாராவர். 3. சந்தனு. 4. பரதன். 5. பரிபாத்தவர் என்றுளது.

திருவ ழுங்கித் தென்னவன்றன்
மகனை வளர்த்து மீண்டுதவி
அருமா மறைசேர் வியாசனைமுன்
பயந்த வணங்கு தனையீந்து
குருமா மரபை நிலையிட்ட
குலங்காண் பரதவர் குலமென்றார். (84)

உரை

"அன்றியும், இராமன் இராவணனை வென்று கந்தமலைச் சாரலில், தேவநகரிலே நம்மைப் பூசித்து, அந்நகரிலே [1]ஐந்நூற் றொருபத்திரண்டு அந்தணரை அகரமேற்றிப் பின்பு கங்கைக் கரையிலும் பரதவரைக் கொண்டு வந்து சமுத்திரக் கரைதொறும் குடியேற்றுதலால் 'கரையூர்வர்' என்ற நாமமும் பெற்றுப் பவளமலையும், கெங்கையாறும், கோடிநாடும், உம்பர்மா நகரும், மாருதப் புரவியும், வெள்ளை யானையும், [2]கண்டந்தாரும், மகரக் கொடியும், கடல் முரசும், வீரகற்றகர் என்கின்றவர் தேசாங்கமாகப் பெற்றவர்காண்.

மேலும், சத்தியத்துக்கு அரிச்சந்திரனும், பிரமாணத்துக்குக் கண்ணகி நிமித்தமாகத் தன்னுயிர் இழந்த பாண்டியனும், நடுவுக்குக் குழக்கன்றுக்குக் குலக்கன்றை ஊர்ந்த மனுச்சக்ரவர்த்தியும், கொடைக்கு ஒரு புலவன் ஒருவனது சரீரத்திலே வலது பாரிசம் வேண்ட அவன் ஈர்வாளால் அரிந்து கொடுக்கின்ற காலத்து இடப்பாரிசத்தில் கண்ணீர் ததும்பக்கண்டு, "மிகவும் அச்சமுற்றாய்; ஆதலால் நான் வாங்கேன்!" என்றவன் சொல்ல "வலப் பாரிசம் உனக்குப் பயன்பட்டது; இடப்பாரிசம் ஒருவருக்கும் பயன்படப் பெற்றிலதே! என்று கருதிக் காண் கண்ணீர் ததும்பியது!" என்று சொன்ன [3]பரிசையும், கல்விக்கு நம்பிரான் முருகனையும், அருளுக்குப் புருடோத்தமனையும், பொறைக்குப் பூமி தேவியையும், பொருளுக்கு நம்மையும், அறத்துக்கு உன்னையும் ஒப்பவர்களாதலால்,

நண்பு மருளும் (நல்லருளும்)
பொறையும் கொடையும் நல்லறமும்
பண்பு முடைய மரபுகா
ணுமையே பரதவர் மர" பென்றார்! (85)

விருத்தம்

[4]பவள மலைவெங் களிறேறும் [5]பரிமா
மகரக் கொடிகோடி நாடும் வெள்ளைத்

---

1. 512. 2. =? 3. =? 4. இப்பாடல் தெளிவாக இல்லை. 5, பனிமா என்றுளது.

தவள [1] மலைவா நகர்கங்கை யாறும்
    கடல்முரசுங் கண்டந்தார் தேசாங்கம் நல்கித்
திவள மணித்திரை வாரிக் கரைகடோறும்
    திருமால்முன் வைத்தவர்காண் செப்புங் காலை
குவளை விழிமயில் செய்தொழில் வேறன்றிக்
    குலமுண்டோ சுக்கிலங் காண்குல மெலாமே. (86)

உரை

இவ்வண்ணமே தம்பிரான் அருளிச்செய்யப் பார்வதியும் கேட்டருளி வணங்கித் "தம்பிரானே! பிறவாதிருப்பதொரு பெருமை அடியேனுக்கு அருளிச்செய்தீரென்றால் [2] எண்பத்தெட்டு கோடி உரோமத் துவாரமும், தினவு எழுந்து சொரியப் புண்ணாகி, ஈ மொய்த்து தீ நாற்றம் நாறுகின்ற தோலும், தோளிலும் கையிலும் [3] நூறு மாமிசக் கற்றையும், கழுத்துக்குக் கீழ் [4] நானூற்றறுபது மாமிசக்கற்றையும், கழுத்துக்குமேல் [5] நாற்பது மாமிசக் கற்றையும், ஆக [6] அறுநூறு மாமிசக்கற்றையும்; கழுத்துக்குமேல் [7] ஐம்பத்தாறு பெரு நரம்பும், கழுத்துக்குக்கீழ் [8] தொள்ளாயிரம் பெரு நரம்பும், கையிலும் காலிலும் [9] ஆயிரத்து ஒருநூற்று முப்பது பெரு நரம்பும் ஆக [10] இரண்டாயிரத் தெண்பத்தாறு பெரு நரம்பும்; கையிலும் காலிலும் [11] நூற்று நாற்பது எலும்பும், கழுத்துக்குக் கீழ் [12] நூற்று இருபது எலும்பும், கழுத்துக்கு மேல் [13] நூறு எலும்பும், ஆக [14] முன்னூற்றறுபது எலும்பும்; கையிலும் காலிலும் [15] நூறு சிறு நரம்பும், கழுத்துக்குக்கீழ் [16] எழுநூற்றுமுப்பது சிறு நரம்பும், கழுத்துக்குமேல் [17] எழுபது சிறு நரம்பும், ஆகத் [18] தொள்ளாயிரம் சிறு நரம்பும்; கழுத்துக்குமேல் [19] எண்பத்தாறு சந்தும், கழுத்துக்குக்கீழ் [20] எண்பத்துமூன்று சந்தும், கையிலும் காலிலும் [21] அறுபத்தெட்டு சந்தும், ஆக [22] இருநூற்று முப்பத்தேழு சந்தும்; நரம்பில் [23] நாற்பத்தொரு மருவும், எலும்பில் [24] எட்டு மருவும் மாமிசக் கற்றையில் [25] பதினொரு மருவும், சந்தில் [26] இருபத்தேழு மருவும், ஆக [27] எண்பத்தேழு மருவும்;

---

1. ' மலைவீரவீர கற்பகாரமாணை ' என்றுளது. 2. 88,0000000.

3.	100	7.	56	11.	140	15.	100	19.	86	23.	41
4.	460	8.	900	12.	120	16.	730	20.	83	24.	8
5.	40	9.	1130	13.	100	17.	70	21.	68	25.	11
	——		——		——		——		——	26.	27
6.	600	10.	2086	14.	360	18.	900	22.	237		——
	——		——		——		——		——	27.	87
											——

மூலத்தில் எண்பத்தாறு என்றுளது

[1] முப்பத்திரண்டு சாண் குடலும்; [2] ஒன்பது துவாரமும்; நாளொன்றுக்கு [3] இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசமும் கூடிப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் [4] பஞ்சபூதப் பரிணாமமாகிய காயத்தை எடுத்து, அதற்குள்ளீடாகிய சோத்திரம், தொக்கு, சட்சு சிங்குவை, ஆக்கிராணம் என்கின்ற [5] இந்திரியங்கள் ஐந்தும்; சத்த பரிச ரூப ரச கந்தம் என்னும் [6] புலன்கள் ஐந்தும்; வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்கின்ற [7] கன்மேந்திரியங்கள் ஐந்தும்; வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்கின்ற [8] விடயங்கள் ஐந்தும்; மனம் புத்தி ஆங்காரம் சித்தம் என்கின்ற [9] கரணங்கள் நான்கும்; இவை இருபத்துநான்குக்கும் ஆதாரமான [10] அறிவு ஒன்றும், ஆக [11] இருபத்தைந்தும்; இரசம், உதிரம், மாமிசம், மேதை, அத்தி, மச்சை, சுக்கிலம் என்கின்ற தாதுக்கள் ஏழும்; அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம, ஆனந்தமயம் என்கிற [12] கோசங்கள் ஐந்தும்; இடை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்(புடை), புருடன், *சங்கினி, †நிகுதம் என்கின்ற [13] நாடிகள் பத்தும்; பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்கின்ற [14] வாயுக்கள் பத்தும்; சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம் துரியாதீதம் என்கின்ற [15] அவத்தைகள் ஐந்தும்; அக்கினி மண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம் என்கின்ற [16] மண்டலம் மூன்றும்; இராசத, தாமத, சாத்துவிகம் என்கின்ற [17] குணங்கள் மூன்றும்; காமக்குரோத லோப மோக மத மாற்சரியம் இடும்பை ஆங்காரம் என்கின்ற [18] விகாரங்கள் எட்டும்; மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை என்கின்ற [19] ஆதாரங்கள் ஆறும்; ஆணவம், மாய்கை, கன்மம், என்கின்ற [20] மலங்கள் மூன்றும்; அத்திவேடணை, புத்திரேடணை, உலகேடணை எனகின்ற [21] ஏடணை மூன்றும்; தூல சூக்குமம் என்கின்ற [22] சரீரம் இரண்டும்; புண்ணியம் பாவம் என்கின்ற [23] வினை இரண்டும் ஆகிய இவை இத்தனையும் அறிகின்ற [24] அறிவு ஒன்றும் ஆகத்

---

1. 32. 2. 9. 3. 21600.

4.	பூதங்கள்	5	12.	கோசங்கள்	5		முன் கூறியது 44
5.	பொறிகள்	5	13.	நாடிகள்	10	19. ஆதாரங்கள்	6
6.	புலன்கள்	5	14.	வாயுக்கள்	10	20. மலங்கள்	3
7.	கன்மேந்திரியர்கள்	5	15.	அவத்தைகள்	5	21. ஏடணை	3
8.	கன்மவிடயம்	5	16.	மண்டலங்கள்	3	22. சரீரம்	2
9.	கரணங்கள்	4	17.	குணங்கள்	3	23. வினை	2
10.	அறிவு	1	18.	விகாரங்கள்	8	24. அறிவு	1
	ஆக	30		ஆக	44		61

11. பஞ்சபூதப் பரிணாமத்தை நீக்கி 25 என்று கூறியுள்ளார். பூதங்கள் 5உம் சேர்ந்து முதற்றத்துவம் 30 என்பர்.

* சங்கு என்றுள்ளது. † குகு.

தத்துவம் * தொண்ணூறும் ; மாமாசயம், பக்குவாசயம், மலாசயம், கெற்பாசயம், முத்திருசயம், சுக்கிலாசயம், என்கின்ற [1] ஆசைகள் ஆறுக்கும், [2] இடவாதி வந்து அபகரித்துப் பத்து வயதிலே வாலிபம் போய், இருபது வயதிலே வளர்ச்சி போய், முப்பது வயதிலே அழகு போய், நாற்பது வயதிலே ஞானம் போய், ஐம்பது வயதிலே தோல் திரங்கி, அறுபது வயதிலே [3] தாது கீழே விழுந்து, எழுபது வயதிலே கண்ணின் பார்வை போய், எண்பது வயதிலே செவி மந்தமாய், தொண்ணூறு வயதிலே இந்திரியங்களெல்லாம் [4] ஒடுங்குகின்ற மானிடப் பிறவியிலே மாதாவினுதர மாகிய மலக்குழியிலே இன்னமும் போய் அடியேன் பிறக்கக் கடவேனோ! என்ன செய்யக் கடவேன்!! தம்பிரானே!!! என்று,

பொருதிகிரித் திருநெடுமால் புவியிடந்துங் காணாத
விருகமலத் தாள்பணிந்தாள் எவ்வுலகு மீன்றளித்தாள். (86)

விருத்தம்

ஐயும் தோலுஞ் சொரிமலமும்
அலமுங் குடருந் தசையெலும்பும்
கையும் காலும் நெடுவளையும்
கட்டு நரம்புங் கருந்தசையும்
பொய்யும் புனைந்த பொதியுடலைப்
புவிமே லெடுக்கக் கடவேனோ
செய்யும் வகையொன் றருள்புரியாய்ச்
சிவனே யின்றென் றுமைபணிந்தாள். (87)

உரை

இவ்வண்ணம் தம்பிராட்டி விண்ணப்பம் செய்யக்கேட்டுத் திருவுளம் பற்றித் தம்பிரான், "வாராய்! கௌரி!! [5] வெட்ட வெளியன் ஒருவன் ஒரு [6] கிருமியைப்பிடித்து, அதன் உயிரை எடுத்துக்கொண்டு சென்று, ஒரு குகையில்

---

* தொண்ணூற்றாறு எனல் வேண்டும்.

முன்கூறிய முப்பதும், பின்னர் கூறிய அறுபத்தொன்றில் அறிவு இரட்டித்தலால் அறுபதும் ஆகத் 'தொண்ணூறும்' என்றும். தத்துவங்கள் தொண்ணூற்றாறின் விளக்கம் கடைசிப்பக்கம் காண்க.

1. இதனைச் சயம் 5 என்பர். அவையாவன :— அமர்வாசயம், பகிர்வாசயம், சலவாசயம், மலவாசயம், சுக்கிலவாசயம். நூலில் முத்திராசயம் சேர்ந்து 6 ஆக உள்ளது.

2. இச்சொல் தெளிவில்லை. 3. தாது கீழேவைத்து என்றுள்ளது.

4. கஷெமிக்கின்ற என்றுள்ளது.

5. வெட்டு வெளியன் என்றுளது. பெருந்தவத்தோன் போலும்.

6. சிற்றுயிர்; அல்லது நுண்ணுயிர்.

இட்டு, மந்திரோபதேசம் பண்ணிக் குகையைத் திறந்து நாடோறும் தரிசிக்க, அக்கிருமி குருவின் சொரூபம் பெற்ற தன்மை போல, நீ இனி மாமிசக் கற்றையான சரீரத்தை எடுக்கக் கடவையல்லை. பசுமண்கலம் முன்பு நீராலே ஈடுபட்டு, தீயினாலே சூடுபட்டுப் பின்பு நீரை முகந்திருந்த தன்மை போலச் சகளமாகிய காயத்தை உபதேசத்தாலே நிஷ்களமாகப் பெற்றது போல, நீ காயத்துடனே போய், உன் பக்கல் உண்டாகிய [1] காமிகத் துரோகமும் குருத்துரோகமும் தீரும்படிக் கன்மபூமியிலே போய்க் கன்மம் அனுபவித்து வரக்கடவை'' என்று அருளிச் செய்து, பின்பு ஒரு வெள்ளித் திருத்தொட்டில் நியமித்து, அத்தொட்டிலின்கண்ணே ஒரு குழவியாக (உமையை) நியமித்து, அணைத்தருளிக்

கோலக் குழலாரைக் குழவியாக்கி நியமித்தார்
குழவித் திங்கள் சடைமுடியார்.

வருப்பு

உழையைச் செற்றொளிர் வாள்விழி மங்கையை
உலகத் துக்குயி ரான மடந்தையை
இழையொத் துத்தெரி யாவிடை வஞ்சியை
இதழிப் பொற்றொடை சேர்குழல் மங்கையை
அழகுக் குப்புக லாகிய மங்கையை
அமுதச் சொற்பயில் பாவையை யன்பொடு
குழவிப் பச்சைநன் மானை முனிந்தொரு
குழவிப் பக்குவ மாக முனிந்தனர். (88)

உரை

இவ்வண்ணம் தம்பிரான், ஒரு குழவியாக நியமித்தருளித் தம்பிராட்டியும் தாமும் முன்பு அணைந்ததால் தம்பிரானுடைய திருமார்பில் இலச்சினை இட்டுவைத்த திருமலைச் செப்பும், எல்லா உலகங்களுக்கும் உயிர்க்குயிராய் நின்று விளங்காநின்ற தாலிக்கயறும், பிறருக்குத் தோன்றுதபடி நியமித்தருளி, ஒரு மரகத முறியைச் சிற்பத் தொழில் வல்லான் ஒருவன் ஒரு குழவி வடிவாய் வகுத்தாற்போல் விளங்குகின்ற திருமேனியொளியுடனே, அத்திருத்தொட்டிலின்கண்ணே பள்ளிகொள்ள வருளுகின்ற காலத்து,

தோலா வென்றிப் புனைசூரன்
தொல்லைப் பொருப்பைத் தொலைத்ததிறல்
வேலா யுதனைப் பயந்தெடுத்தாள்,
வேலை வலையந் தனின்மிதந்தாள். (89)

---

1. காமித்துரோகமும் என்றுளது.

வருப்பு

அருணக் கருளக் கயல்விழி மங்கையை
அருவிக் கடலிட கரியில் வருந்திரு
அமுதத் தொடுசொற் பொருவு கருங்குழல்
அழகுக் கழகொத் தொழில்பொழில் மங்கையை
சுருதித் தொழிலில் எழுஞ்சுடர் தோகையை
தொழில்மெய்த் தவர்சித் துயிலுறை சுந்தரி
தொழில்விட் டிடுமத் துறவில் விளங்கொளி
துரிசற் றுருகிப் பாவி லெழுஞ்சுக
மிருகைக் கமலத் தருள விளங்கொடி
யிதழித் தொடை யிற் சுரிகுழல் பிங்கலை
யிசைவிட் டசைபொற் றொடைபுனை யந்தரி
யெழுபோய்ப் பிறவித் துயர்களை பைங்கிளி
செருவிற் புருவத் திருநுத லிந்திரி
சிவனைத் துருகித் தழுவுந றுங்கொடி
திகிரிப் புவியில் பரதவர் தம்புகழ்
திகழப் பரவைத் திரையில் மிதந்தனள். (90)

விருத்தம்

எம்மை யாளும் பெருமானார்
இமைய வரையில்வந் தவதரித்து
அம்மை யாகிய பூதங்கள்
அனைத்து மீன்ற குழலிதன்னை
[1] தெள்ளுந் திரைபாற் கடற்கிடக்குந்
தெய்வ மரகதப் பாவையென
வெள்ளித் திருத்தொட் டிலிற்கிடத்தி
வேலா வலையத்தில் விட்டனராம். (91)

(உ)ள்ளத் தெழுந்த விருவினையா
லூருங் கருவில் விழுந்தழுந்து
மள்ளப் பிறவித் துயர்தீர
அதியரையன் மரபு சிறந்தோங்க,
வள்ளிக் கொடிசேர் பெருமானை
வாவிக் கமலந் தனிற்பயந்தாள்
வெள்ளித் திருத்தொட் டிலின்மீது
வேலா வலையந் தனின்மிதந்தாள். (92)

---

1. எதுகை மாற்றம்.

வெள்ளி கொண்டு வகுத்தபணி
முத்தே விளங்கு மரகதத்தால்
துள்ளிக் கொண்டோர் குழவியாகத்
தொழில்செய் சமைத்த வதுபோல
நள்ளிக் கொண்ட திரைக்கடலில்
நடுவே வெள்ளித் தொட்டிலின்மேல்
பள்ளி கொண்டாள் திரைக்கடலில்
பரமனிடப் பாகங்கொள் பசுந்தோகை. (93)

உரை

இவ்வாறு தம்பிராட்டி பள்ளிகொண்டருளுகின்ற திருத்தொட்டில் தெற்குத் திக்கு நோக்கிப் போகக் கண்டு, (முன்பு) தாம் முனிந்து பார்வதி கையி (னின்றும்) அன்று வாங்கிப் போட்டருளின கோசத்தை விழுங்கிக் கொண்டு, வடவாமுகாக்கினி மத்தியத்திலே நின்று விளையாடு கின்ற மகரத்தைத் திருக்கண் பார்த்தருளி "நீயும் தெற்குத் திக்கு நோக்கி உன்னுடைய மாதாவுடனே போய், அவளுக்குண்டாகிய சாபத்தை நீக்கிப் பின்பு பதினறு பிறவி எடுப்பாயாக!" என்று அருளிச்செய்ய

கையில் எரியக் கனலேந்துங்
கங்கா தரனைத் தொழுதிறைஞ்சி
வெய்ய வடவைப் பெருங்கனலை
விட்டு மகரம் போந்ததுவாம். (94)

விருத்தம்

பங்கப் பிறையார் படர்சடையார்
படவி லேறிப் பரதவர்முன்
செங்கைத் தலங்கள் வருந்திடவே
திரைவா ருதியில் வலைவீசத்
துங்கப் [1] படகு பாறுகப்பல்
சொங்கு நாவாய் [2] தலைவிளங்கு
மங்கைத் துறையை நின்றழிக்க
வரைபோல் மகரம் வந்ததுவாம். (95)

உரை

இப்படியே மகரம், மேரு மலையே ஒரு வடிவுகொண்டு கடலூடே வருவதுபோல, (முன்னாள்) வானவரை இரட்சிப்பது காரணமாகத் தம்மைச்

1. படவு என்றுளது 2. தலை விழுங்கு என்றுளது.

சரவணைப் பொய்கைச் சரோருகப் பொகுட்டில் பெற்றருளிய திருத்தாயார் பள்ளிகொண்டருளுகின்ற திருத்தொட்டிலைப் பீலியின்கண்ணே ஒடுக்கித் தெற்குத்திக்கு நோக்கி (சென்று)

மங்கைப் பதியைக் குருகிப் பங்கயச்
செங்கண் மானைப் பரதவர் தவஞ்செய்கின்ற
[1] மங்கைத் துறையில் வைத்து வந்தது மகரராசன். (96)

வகுப்பு

அம்மைப் பொருகளை யைத்திரு நயனியை
யன்பர்க் கருள்புரி பொற்பத வரிவையை
யின்பச் சிறுவத னச்சிலை நுதலியை
வென்றிக் கரிமுக னை(ப்)பெறு தெரிவையை
உம்பர்க்கருள்முக வர்க்கருள் குமரியை
(உ)ந்திக் கொடிநிகர் சிற்றிடை யம்மையை
வம்புற் றிருள்சுரி மைக்குழல் விமலையை
மங்கைத் துறை(யில்) (விடுத்தது) மகரமே. (97)

விருத்தம்

முதிய திரைவா ருதிதனக்கு
முதல்வ னாகி யரசாளும்
மதியி னியல்சே ரதியரையன்
அரிய தவஞ்செய் [2] திடுந்துறையில்
விதியில் விதியாம் பெருமானார்
மேனி பங்கின் மென்குயிலை
மதிய மனைய நுதல்மானை
வைத்து மகரம் நின்(ற)துவாம். (98)

உரை

இவ்வண்ணம் தம்மைக் கொண்டுவந்து வைத்த மகரத்தின் பெருமையாலே, கடல் வெள்ளம் கிளர்ந்து, தன் சரீரம் முழுகும்படி பார்க்கவும், அறியானாகி இருந்த, தமக்குப் பிதாவாகிய, புண்ணியஞ் செய்து தவஞ் செய்கின்ற அதியரையன் தவத்தின் பெருமைத் திருவுளத்தடைத் தருளித் திரையுடன் மிதந்து சென்று, தம்முடைய பிதா இருக்கின்ற துறையைச் சேர்ந்தருளி, அவன் கொண்டிருக்கின்ற சமாதி புகுந்து, புத்திர சிநேகத்தாலே குலையும்படி அழுதருளியதைக் கேட்டுச் சிறிதே

1. மங்கையைத் என்றுளது. 2. திடத்துறையில்.

விழித்து நோக்கித் திருமகளார் பள்ளி கொண்டிருக்கின்ற திருத்தொட்டிலை எடுத்துத் 'தம்பிரானுடைய திருவுளம் இப்படி இருப்பதோ!'' என்று மிகவும் மகிழ்ச்சியுற்று, வறியவன் (பெரு)நிதியம் பெற்றாற்போல [1] கிறகத் தணுகித் திருத்தொட்டிலினின்றும் மகளாரை எடுத்துக்கொண்டு செய்வதேது மறியாமல், சிந்தைமகிழ்ந்து, கூத்தாடித் திருப்பாடகச்சீரடியையும், தம்பிரான் வைத்த இருநாழி நெல்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்த திருச்சூடகத் திருக்கை மலரையும் தன் கண்களிலும் முகத்திலும் ஒற்றிக்கொண்டு, தன் பிறவித்துக்கம் தீரும்படியாக உச்சியையும், அகில உலகங்களையும், ஈன்றளித்த திருவயற்றையும், மோந்துகொண்டு, தன் மகளாரைத் தன் மார்புடன் அணைத்துக்கொண்டு, திருமேனி யலையா வண்ணம் மெல்ல நடந்து சென்று, தன் மனைவி வருணவல்லி கையில் கொடுப்ப, அவள் மிகவும் பிரியப்பட்டுத் தன்னுடைய திருமகளார் திருவழகைக்கண்டு கொண்டாடி, ஆனந்தக்களிப் பெய்தி, அதனாலே எல்லா அங்கங்களும் துரிசற உருகித் தன் முலைப்பால் சுரக்கக் கண்டு உச்சியை மோந்து கொண்டு முலைப்பால் அமுது செய்யப் பண்ணி நிற்கக்

கண்ணீரா றுடையானுங் கரிமுகனு மின்றளவு
முண்ணாத முலையம்மை உண்ணுமுலைப் பாலுண்டாள். (99)

விருத்தம்

தருண வல்லி நிகர்மருங்கிற்
சங்கைச் செங்கைத் திங்கணுதல்
வருண வல்லி யெனுமடவா
ளன்பாற் புகழ்ந்து பாராட்டுங்
கருணை வல்லி பரதவர்கோன்
காதல் வல்லி கடல்வல்லி
வருண வல்லி வனமுலைப்பா
லுண்டாள் வரைமா தவவல்லி. (100)

அகவல்

பரதவர் தங்கள் மரபிற்
பாவை யுமையாள் பிறக்கவும்
வரைவுடன் வாழை நடுவார்
வேரிக் கமுகு நிறைப்பார்
புன்னை யசோகம் நிறைப்பார்
பூஞ்செருந் தெங்கு நடுவார்

1. — ?

கன்னிக் கமுகுடன் சூதங்
 காரகி லாரம் நடுவார்
வஞ்சியு ளுளி கோபம்
 மந்தார மெங்கும் திரைப்பார்
கிஞ்சுகம் பாதிரி நாகங்
 கேதகை யெங்கும் நடுவார்
கன்னலு மிஞ்சி மஞ்சள்
 கதலி கமுகின் குலேகள்
சென்னெல் கொழுந்திரு வேலித்
 தெருவெங்கும் பாலித்து வைப்பார்
ஈரப் பலாவும் [1] மாவும்
 இருமருங்குஞ் சோலே செய்தார்
நாரத் துடனெலு மிச்சை
 நற்குள விஞ்சி நடுவார்
கரகமும் பாளேயும் வைப்பார்
 கைவிளக் கெங்கும் நிரைப்பார்
விளாகமும் மாலேகள் தூக்கி
 மேற்கட்டி யானவி தானிப்பார்
முத்தும் பவளமும் பொன்னும்
 முகந்து தெருவில் விரிப்பார்
பத்தி படவெத் திசையும்
 பவளப் பலகை நடுவார்
தோரண மெங்கும் நடுவார்
 தூபமும் தீபமும் வைப்பார்
பூரண பொற்குடம் வைப்பார்
 பொருந்தச் சுருள்கள் நிரைப்பார்
மத்தளி பேரிகை தாளம்
 வழங்கிய வீர முரசு
வெத்தி சையும் நின்றதிர
 வினமணிச் சங்கு குறிப்பார்
மாட கூடங் களுமன்றும்
 மகரக் கொடிகள் நிரைப்பார்
நீட ரங்கும் பொன்முகப்பும்
 நித்தம் மாலே நிரைப்பார்

1. பலாவும் என்றுளது.

கடல்முர செங்கு மதிரக்
கண்டல் நறுந்தார் புனைவார்
அடல்புனை வெள்ளானை நிற்க
வாடக வண்டை எடுப்பார்
[1] கொம்புந் துத்தியுங் கொண்டு
குளிர்புனல் வாரி எறிவார்
புழுகு முகந்து மடவார்
பூங்குழல் மீது சொரிவார்
எழுத வரிய மருங்கு
லினைக்கு [2] விசிறி விடுவார்
மதவெற் பனைய விளையோர்
மலர்வி சிரிப்பு னல்விட்டு
நுதலிற் றிலதம் வைத்து
நுண்ணிடைக் குத்துணை யாவார்
குன்றி லருவிக ளென்னக்
கொங்கையின் மீது குதிக்க
நின்று விசிறி விடுவார்
நீல விழிபட் டயர்வார்
கங்குலு மீனு மெனவே
கயல்விழி மாதர் குழல்மேல்
செங்கை மலர்கள் வருந்த
சிவிறித் திவலை யிடுவார்
காண்டகு மென்முலை மாதர்
கள்ளக் கலக விழியில்
தூண்டிலுங் கெண்டையு மென்ன
துருத்திப் புனல்விட்டு நிற்பார்
மாதுமை யம்மை பரதவர்
மரபிற் பிறந்த பெருமை
பூதல மெங்கும் அறிய
புரிந்துநெய் யாடல் புரிந்தார். (101)

வெண்பா

சித்தம் நினைந்து சிவமுனைக்க வேபரதர்
பத்தி மனவயலிற் பாய்ந்ததே-கைத்தலங்கள்

1. இவ்வரிக்கு எதுகைவரி இல்லை, 2. சிவிசிறிவிடுவார் என்றுளது,

செய்யாள் கரியாள் திருமஞ் சனமாட
நெய்யாட லாடியநன் னீர். (102)

உரை

இத்தன்மையாய் உலக மாதாவுக்கு உலக மாதர் முலைப்பால் அமுது செய்வித்து, நெய்யாடல் புரிவித்துப் பின்பு தங்கள் வமிசத்திலுள்ள பரதவரும் மடவாரும் வந்து சோபனங் கூறப் பசு, பூமி, சொர்ணம், வத்திரம், அடிமை, தானியம், எள்ளு, வெண்கலம், கன்னிகை, அன்னம், என்று சொல்லுகின்ற பத்துத் தானமும் மறையவர்க்கும் வறியோர்க்கும் கொடுத்து சிவபூசை, குருபூசை, மகேசுரபூசை, யாவும் செய்து, தெய்வர் விஷயங்களுக்கும் வேண்டுவன கொடுத்து மருவும் புகழான அதியரையன் வந்து, பரதவர் புடைசூழத் திருமஞ்சன நீராட்டுவித்துச் செல்வமகளார்தனை எடுத்து,

மைநாண் கூந்தல் மயி(ல)னையார்
வந்து பரிவுடன் பாராட்டி
ஐநாண் மருங்குல் தனிலணிந்து
அன்பு டன்தச தானங்களும்
மறையோர் தமக்கும் வறியோர்க்கும்
வருவோர் தமக்கும் மிகவழங்கி
வெறியுஞ் சக்கரஞ் சங்குதண்டு
இலங்கு சிலைவா ளென்றுசொலும்
பஞ்சா யுதமும் திருத்தாளிற்
பைம்பொன் றிருத்தண்டை யுடன்புனைந்து
கொஞ்சா நின்ற சதங்கையுடன்
கோலமா ணிக்கச் சிலம்பணிந்து
எக்காப் புந்தன் காப்பாக
இறைவ னிடங்கரந் தருளும்
பொற்கொடிக் குக்கைக் காப்பணிந்து
(கால்காப் போடு) மைக்காப்புங்
கருணை பொழிவிழி தனிலெழுதிக்
(கோல நுதற்குத் திலதமிட்டு)
அன்பி னுடனே ஆபரணம்
எல்லா மாகந்தனி லலங்கரித்து
(கேளுங் கிளையும் இனிதிருக்கச்)
சதுமா மறையோ ரினிதிருந்து
நாளுங் கோளும் பக்கங்களும்

நன்று யிட்ட முழுத்தத்திலே
அஞ்சி வானவர் முறையிடவே
அம்மை பாகர் கேட்டிரங்கி
நஞ்சுவாய் வைத்த மணிமிடற்றில்
நளினக் கரம்வைத்த நாயகிக்குச்
சங்குவாய் வைத்துப் பரதவரும்
தானு மாக வினிதிருந்து
திரைமேல் மிதந்து வருதலினால்
சிவனு ருடம்பில் பாதிக்குத்
திரைசேர் மடந்தை யெனக்கருதி
யிட்டா ருமைக்குத் திருநாமம். (103)

விருத்தம்

குரைசேர் கடற்பா ரயன்சேவைக்
குலைய வெள்ளங் கொதித்தெழுந்தாள்
துரைசேர் புகலிப் பரமனுடன்
தோணி தனிலன் றினிதிருந்தோர்
வரைசேர் மடந்தை யனைத்துயிர்க்கும்
மாதர் தமக்கும் மகளாகத்
திரைசேர் மடந்தை யெனக்கருதி
யிட்டா ருமைக்குத் திருநாமம். (104)

உரை

இவ்வாறுய் பரமேசு வரிக்குத் '**திரைசேர் மடைந்தையார்**' என்று திருநாமம் சாற்றி, மூப்பிமார், தாதிமார், எடுப்பிமார் என்கின்ற பரிசனத்தார் வளர்க்க வளர்ந்தருளிச் சிற்றில், கழங்கு, பந்து, அம்மானை, உந்தி, பொன்னூசல் என்று சொல்லுகின்ற விளையாட்டுகளைத் தாம் அறியாள்போல, தோழிமாரான வால கன்னியர்கள் காட்ட வளர்ந்து அருளுவதாகக் கற்று விளையாடி வருகின்ற காலத்துப் பரமேசுவரன் திருநாமங்களும், திருவஞ்செழுத்தும் அல்லது வேறொன்றும் சொல்லாராய்த் தமக்குப் பிதாவாகிய அதியரையன் பேறும், வருணவல்லி புண்ணியமும், பரதவர் வமிசமும், பரமேசுவரன் திருநாமம் உள்ளளவும் வளருவதாக வளர்ந்தருளி,

அயனெடுமால் சந்திரர்சூ ரியர்அமரர் வயறுபுக
வயதுபுகா வுருவுடையாள் வயதிரண் டாறுபுக்காள். (105)

விருத்தம்

காரினிற் சிறந்த மாலுங்
கமலனுங் காணு மெய்யர்
பாரினிற் பலரும் காணப்
பரதவ ளுகித் தோன்றப்
போரினிற் சுடர்போல் வென்றிப்
புதல்வ னுமக ரத்தொடும்
வாரியிற் றிரையில் வந்தாள்
வயதுபனி ரெண்டு புக்காள். (106)

உரை

இத்தகைமையாய் வளர்ந்து வருகின்ற தம்பிராட்டி எழுந்தருளி வந்த அன்று முதலாக மகரம் குடகடலினின்றும், குணகடலில் பாய்ந்தும், குணகடலிலிருந்தும் குடகடலில் பாய்ந்தும், குடகடலிலிருந்து வடகடலில் பாய்ந்தும், வடகடலினின்றும் தென்கடலில் பாய்ந்தும், தென்கடலிலிருந்து மேல் கடலில் பாய்ந்தும், மேலுள்ள ஏழு [1] உலகங்களும் ஊடுருவித் தாவி ஏழுகடல்களின்கண்ணியங்குகின்ற பாறு, படவு, கப்பல், சொங்கு, நாவாய் எனப்படும் மரக்கலன்களையும், தோணி முதலிய சிற்றுருக்களையும் தன் வாலினுலேயடித்து, உழக்கி, ஒரு சமுத்திரத்தினின்றும் ஒரு சமுத்திரத்திலே பாயும் அளவுக்கு எழுந்திருந்து, பாய்ந்தெழுந்த சமுத்திரம் வற்றியும், சென்று புகுந்த சமுத்திரம் பெருகியும், ஆனையை விழுங்கும் திமிங்கிலமும், அதனை விழுங்கும் திமிங்கிலமும் என்று பெயருடைய மச்சங்கள் எல்லாம் மகரத்தின் வாலாலே அடியுண்டு சமுத்திரங்கள் தோறும் செத்து மிதப்பச் சமுத்திரங்களைக் குறுக்கறுத்துப் புடைபோதில் திசைக்குத்திசை நூற்றுக் காத வழி வெள்ளம் பெருகாநின்றது.

இவ்வாறு மகரம் விளையாடுதல் காரணமாகச் சமுத்திரத்தில் வலையிரக்கி மீன் பிடிக்கவும், முத்துக் குளிக்கவும், சங்கு குளிக்கவும், பாறுபடவு ஓட்டவும் ஒண்ணுதாகி, பரதவரெல்லாரும் வறுமையெய்தி, அனைவருங் குவிந்து, தங்களுக்குத் தலைவராயிருக்கின்ற அதியரையனிடம் தங்கள் வறுமைகளையும், செயற்பாடுகளையும் சொல்ல, அதனைக்கேட்ட அதியரையனும் மிகவும் துயரமுற்றுப் பரமேசுவரன் திருவடித் தாமரைகளை நினைந்து 'தம்பிரானே! இப்படி ஒரு மகரம் நின்று துன்பம் செய்கிறது. இதற்குமேல் என்ன செய்யக் கடவேன்' என்று பிதற்றிப் பரதவர் அனைவரையும் பார்த்து "வாரீர்! பரதவரே!! யாவன் ஒருவன் இம்

1. மேகங்களும் எனல் பொருந்தும்,

மகரத்தை, யாதொரு சூழ்ச்சியால் பிடித்தவனுக்கு என் மகள் திரைசேர் மடந்தையைத் திருமணம் செய்துகொடுக்கக் கடவேன்!!!" என்று முரசறைவித்துத் தங்கள் வறுமையுரைத்த பரதவர்க்கும் வேண்டுவன கொடுத்து, மற்றும் தங்கள் மரபிலுள்ளாரெல்லாம் வந்து வறுமை சொல்ல, வேண்டுமிருநிதியம் நல்கியிருந்தான்; பரதவர்கோன்.

விருத்தம்

புகவெஞ் சினைவெங் களியானை
 புலவற் கருளும் பரதவர்கோன்
பகருங் கிளைஞர் மொழிகேட்டுப்
 பகர்ந்து நெஞ்சால் மிகவிரங்கிச்
சிகரம் புனையும் பருவரைபோற்
 றிரைவா ருதியிற் றிரிகின்ற
மகரம் பிடிக்க வ(ல்லவர்க்)கென்
 மகளைத் தருவே னெனமொழிந்தார். (107)

உரை

இத்தன்மைத்தாய் அதியரையன் சொல்லக் கேட்டு, பரதவர் எல்லோரும் (கூடி) "கேளாய்! சமுத்திரராசனே!! பூமியில் பிறந்தவர் ஒருவ(ரால்) இம்மகரத்தைப் பிடிக்க வொண்ணுது, நமக்குப் பூருவமாயுள்ள நேயநி(யமங்கள்) கடவுளாகி இப்பரதவர் வமிசத்தினைக் காக்கக் கடவதான வருணராசன், நமது வறுமை கண்டு சற்றும் மனமிரங்கவில்லை என்றால் இத் தேயத்தினின்றும் வேறொரு தேசம் போமல்லது மற்றிதற்கு ஒரு தீர்வும் இல்லை" என்று சொல்லக்கேட்டுப் பரதவராசனும் "வாரீர்! பரதவரே!! சரீரமும் செல்வமும் நிலையுள்ளதல்ல!!! யானையேறித் தவளச் சக்கரம் நிழற்றச் சக்கரவர்த்தியாகி இருந்தவர்கள் இரணபூமியிலே புரண்டு, தலை வேறு உடல் வேறாகி வீழினும் வீழ்வர்.

அது எப்படியெனில் முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத் தெண்ணாயிரம் இருடிகளும் தன்னேவல் செய்யத்தக்க வென்றியையும், பரமேசுவரனுக்குச் சிவாலயமாயிருந்துள்ள திருக்கயிலாயத் திருமலையை எடுக்கத்தக்க (வாகு) பெலத்தினையுமுடைய இராவணன் தன்னுடைய தலைபத்தும் துணிபட்டுச் சமரபூமிலே கிடந்தான்.

மேலும் (பெரியதொரு மாளிகையில்) [1] பஞ்ச சயனத்திற்கிடந்த (வர்கள் இறக்க) ஈ மொய்த்துத் துற்கெந்தம் நாறுமுடம்பை ஈமத்தீக் கொளுத்தி எரிய(விட மரக்)கட்டைச் சயனத்திற் கிடத்துவார்கள்.

1. ஐந்தாலாகிய மெத்தை. அவை: அன்னத்தூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயிற்றூவி, வெண்பஞ்சு.

அல்லாமலும், தக்கோலம், சாதிக்காய், ஏலம், இலவங்கம், கற்பூரம் (ஆகிய) பஞ்ச வாசங்களும், கத்தூரி, புனுகு, சவ்வாது, சாந்து, பன்னீர், குங்குமம் என்கின்ற களபம் பூசி, மற்றுமுள்ள கெந்த வர்க்கங்களும், இதழித்தொடையும் (அணிந்து, எண்ணெய், தைலம் முதலியவைகளை) அரம்பை, திலோத்தமை, உருப்பசி என்கின்ற (தேவ மகளிரால் பூசி வகிர்ந்து பின்னித் தாது மணங்களால் பொருந்திய மயிரையுடைய தலையை நாயும், நரியும் கவ்விக் கிடக்கினும் கிடக்கும்.

அதுவன்றியும், பலகைக்கருவி, [1] கஞ்சக்கருவி, தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி என்கின்ற [2] பஞ்சவாத்தியங்களும், முழங்க மணக் கோலம் செய்கின்ற சரீரம், மீண்டும் அந்தக் [3] காவணத்தின் கீழேயே, அந்தப் பல்லியமும் [4] நீங்கிப் பிணப்பறையறையத் தன் மனைவியுடைய மந்திரக்கோடியே கோடியாகினும் ஆகும். இது கேள்வியல்ல; யாவரும் கண்டதாயிற்று.

மேலும், பூமி, அந்தரம், சுவர்க்கம் (என்னும்) மூன்றும், தன் ஆணை நடக்கவிருக்கும் பெருமையை உடையவர்கள், நினைவு அற்று, ஒரு [5] நிமை மாத்திரைப் பொழுதில் இறந்துவிடுவார்கள்.

அது எவ்வண்ணமோவெனில், சுரர், நரர், விலங்கு, பறவை முதலானவைகளாலும், ஆயுதங்களாலும் வதைபடாத வரத்தினையும், பூமியினும், ஆகாயத்தினும் படாததொரு நியமத்தினையும் உடைய இரணியன், ஒரு சிறு மாத்திரையளவில் சரீரம் பிளப்புண்டு வேறுபடக் கிடந்தான் என்றால், இந்த வழுக்குடல்தான் எடுத்தார் தம்மில்லிருந்த (பெருங்)குன்றாய் நின்ற பொருளை நினைந்து உள்ளத்துண்டென்றிருமென்றார்.

விருத்தம்

[6] அளவிடு மளவோ தோன்றி
யழிந்ததம் புவியின் மாக்கள்
அளவிடு மளவோ தோன்றி
யழிந்தமால் பிரம ரென்றால்
அளவிடு மளவோ விந்த
வாக்கையி னளவே யென்றார். (108)

---

1. தாளம் முதலிய வெண்கல வாத்தியம். 2. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி. 3. பந்தல். 4. முழங்க என்றுளது. 5. இமை. 6. இவ் விருத்தத்தில் 3 வரிகளே உள்ளன.

நாட்டை முழுதும் புரந்தாலும்
நாவாய் கப்பல் விட்டாலும்
வீட்டை யிரவு [1] முடித்தாலும்
வேட்கை சிறிதும் விடாதிருந்தால்
ஓட்டை தனிலே யோரேற்று
ஒழிவ தல்லா லுயிர்விடுநாள்
கோட்டை யுளதோ நாங்கட்டிக்
கொண்டு போவ தெனமொழிந்தார். (109)

உரை

இத்தன்மையாய் அதியரையன் மீண்டும் பரதவரை நோக்கி "வாரீர்! பரதவரே!! கல்லுக்குட் புகுந்திருக்கின்ற தேரைக்குச் சென்று சிலர் உணவளித்தாருளரோ? அதுவன்றியும், அன்றொருநாள் ஒரு தவசி பிச்சைக்குச் சென்றவிடத்து, வீட்டில் அம்மை, 'காலமல்ல' என்று சொல்லக் கேட்டுத் திட்டைக் குடியிலே திருக்கோயில் உள்ளே புகுந்து சமாதி அடைந்திருக்கின்ற காலத்து, மண்மாரி பெய்து வண்டலிட்டுத் திருக்கோயில் மறைந்துபோய் எண்ணுயிரத்தாண்டு சென்ற பின்பு, (ஒரு நாள்) சோழன் ஏறிச்சென்ற யானை, தவசியிருப்பதை (தனது ஆற்றலால்) கண்டு, அந்தத் தெய்வத் தலத்தின் (வழிச்) செல்லாமல் பின்பறியக்கண்டு, சோழன் ஐயமுற்று நின்று, அவ்விடத்தை வெட்டுவித்து, மண்ணை அகற்றித் திருக்கோயில்கண்டு, திருக்காப்பு (நீ)க்கிப் பார்க்கின்ற காலத்துத் தவசியைக் கண்டு சொற்களாலே வணங்கி (அடிபணிந்து நிற்கச்) சிறிதே விழித்து நோக்கி "அப்பா! காலமானதோ?" என்ற தவசிக்குச்சென்று உணவளித்தார் உளரோ?

அல்லாமலும், தாய்வயற்றில் நாம் இருக்கின்ற நாள், நமக்குச்சிலர் உணவளித்தார் உளரோ? ஆகையால் தம்பிரான் திருவுளம் இப்படிக் காண்" என்று சொன்னான்.

அகவல்

அம்மையு மப்பனு மாகி யிருந்து
நன்மையு மனமும் தனித்தனி யிருந்து
மோகப் பெருங்கடல் முகந்தெழுந் தலமர
வேகப் பெருங்கடல் விந்துவை வருட
வீரமுந் திமிர்ப்பு மென்றெழு குணத்தால்
சார வந்து தண்டுளி யதனல்

1. முறித்தாலும் என்றுளது.

இன்புறச் சேர மண்ணிருஞ் சோருக்கி
அன்புறந் திரட்டி அடிமண் குறித்துக்
கால மறிந்து கால்கள் நாட்டி
மேலொரு நெடுவளை விளங்கிட வைத்துக்
கையது நிறுத்தி மெய்யுற முட்டித்
துய்யவெள் ளெலும்புந் தொழிலகம் பரப்பி
நரம்பெனுங் கயிற்று லுரம்பெறக் கட்டி
நிரம்பிய சொரிமலம் நிலைபெறத் தோய்த்து
புன்மணக் கற்றை பொருந்தமெய் மேய்ந்து
மணம்பெற வன்றேல் வன்சாந் திட்டுக்
காணும் வாசலும் கேட்கும் வாசலும்
பூணும் வாசலும் புனைந்தறி வாசலும்
இன்ப வாசலும் இரத வாசலும்
[1] சோரி வாசலும் தொகைபட வகுத்து
பிறிழ யின்பம் பிணிமூப்பு சாக்காடு
கூறிய வாறுங் குணத்தள வமைத்து
முக்கொண் டுடம்பியக் கின்றிக் கொளுத்தி
கோளொன் பது(வு) மனுபவிக் கும்படி
சீயவ ளுகிய வாயுவை யியக்கி
மேவிய பறிகெட வேண்டுவ தருந்தி
ஒன்பது மாதம் அன்புடன் வளர்த்து
துன்பமும் பயமும் தொடரமெய் வருந்தி
அன்னைநோ வொழிந்து (அன்புடன்) நம்மை
பயந்து விட்ட மின்னரு
ளிறைவ ளுருக் கிலையோ வென்ருன். (110)

விருத்தம்

மாதா வுதரந் தனிலிருத்தி
அளந்தங் கன்ன மருத்தியது
நாதா வெனவே யறிவுபெற்ற
நன்மை யருந்தா திருக்குமதோ!
தாதார் கொன்றை மணம்வீசுந்
தழல்வா யரவு புரிந்தாடத்
தேதா வெனவண் டிசைபாடுஞ்
செம்பொற் சடையார் திருவுள்மே! (111)

1. = இதுமுதல் 4 வரிகள், எதுகை, சொற்பொருள் சரியில்லை.

உரை

இப்படியாக அதியரையன் பரதவரை நோக்கிப் பின்னும் சொல்லுவான் :

அகவல்

பரதவிக் கின்றதென் பரதவ ரேநீர்
பரதவித் தால்வரும் பயன்சில வுளதோ
வருந்தினும் வாராது வாராது (காணும்)
வருந்தா திருப்பினும் வருமது வந்துறும்
வறுமையுற் றிருந்து வருந்தித் திரிபவர்
அறைகடற் புவியை ஆளினும் ஆள்வர்
பொற்றுள் புனைந்து பொருகரி யூர்ந்தவர்
நற்றுள் வருந்த நடப்பினும் நடப்பர்
கதிர்மறி வீரக் கழல்புனை காலிற்
புதுமுது விலங்கு புனையினும் புனைவர்
பஞ்ச சயனத்து வாழ்ந்திருந் (தவர்கள்)
பஞ்ச நீர்க்கூழ் பருகினும் பருகுவர்
பாக்கிலை [1] பளிதம் பலர்க்கு மிட்டவர்
வாய்க்கிலை யின்றி வருந்தினும் வருந்துவர்
சேவைகள் பிறர்தாம் செய்யவீற் றிருந்தவர்
சேவைகள் பிறர்க்குச் செய்யினும் செய்குவர்
எனக்கிடு மென்றுவந் திரந்தவர்க் கீந்தார்
எனக்கிடு மென்றுசென் றிரப்பினு மிரப்பர்
எல்லா வாடையும் புனைந்துவீற் றிருந்தவர்
பொல்லாச் சீலை புனைகிலும் புனைவர்
அளிமொய்த் திடுமல ரணையிற் கிடந்தவர்
கிளர்கற் (ற)றையினில் கிடப்பினும் கிடப்பர்
மாநக ருறைந்(தவர்) வரிபுலி யுறையும்
கானக மெய்திக் கழியினும் கழிப்பர்
கானகங் கன்னலுஞ் செந்நெலும் விளையும்
மாநக ராகி வழங்கிலும் வழங்கும். (112)

ஆதலாற் செல்வம் ஆற்றிற்
பெருக்கு நிலைமை யன்றோ
ஆழி சூழ்ந்த நீதிமா
நிலத்திற்கு நிலைநின்ற தெனமொழிந்தார். (113)

1. பளிதம்—பாளிதம்—சோறு.

விருத்தம்

இருநிதி தேடி வருந்தா திருந்தவர்
இற்றைக் கென்செய்வோ மென்றிரப்பினு மிரப்பர்
ஒருபொரு ளில்லாம லிரப்பவர் வேலை
யுல(கெலா)முடையா ராயினு மாவார்
பொருகரி யேறி வருபவ ரிருதாள்
போத நடந்து திரிகினும் திரிவர்
திருவளர் பாதம் மாறிநின் றுடும்
செல்வனுர் திருவுளச் செயல்தெரி யாதோ! (114)

[1] ஓட மிட்டடம் அடிச்சுடி லாகில்பின்
னோட மோடினு மோடும்
மாட மண்டப மிடிந்துபா ழாகிப்பின்
மாட மாகிலு மாகும்
நாடும் வாவியு மழிந்துபா ழாகிப்பின்
நாட தாகிலு மாகும்
தேடி மாலயன் வருந்தநின் றுடுஞ்செல்வன்
திருவுளச் செயல்தெரி யாதோ! (115)

அய்ய மேற்பவர் அறப்பெருஞ் செல்வராய்
அவனி யாளினு மாள்வர்
வைய்ய மாள்பவர் வறிஞராய்ப் பிறர்மனை
வந்து நிற்கினும் நிற்பர்
வெய்ய [2] வீரர்தான் எளியருக் கெளியராய்
வினையில் வீழினும் வீழ்வர்
செய்ய மேனி வெண்ணீ றணிந்த
வேடர்திரு வுளந்தெரி யாதோ! (116)

உரை

இவ்வாறே அதியரையன் காரியம் சொல்லிப் பரதவரை நோக்கி "வாரீர்! பரதவரே!! நாம் முன்னைச் சென்மத்தில் செய்த புண்ணிய பாவங்களுக் கீடாய் பிரமன் நமக்குப் [3] பேரிழி, இன்பம், பிணி, மூப்பு சாக்காடு என்று சொல்லுகின்ற [4] ஆறும் கோபம் கொள்ளும்போது நியமித்துவிட்டதாய் இருக்கும். நாம் வேறொரு தேசத்தில் போனுல்

1. இவ்வரி தெளிவில்லை. 2. 'வீரர் முன்' என்றுளது. 3 –?
4. ஐந்துதான் உளது.

அந்நிய(ம)ம் நம்மைக் கைவிட்டு இங்கே நிற்குமோ? அது வொழிந்து இப்படியே நம்மை விரோதிப்பதாக வந்த மகரம், நாம் போகின்ற தேசத்தில் வாராதொழிந்திடுமோ?

கொன்றை மணக்குஞ் சடாமகுடக்
கோதை பாக ரல்லாது
நன்று தனக்கும் தீதுக்கும்
நாமே கடவோ" மெனமொழிந்தார். (117)

விருத்தம்

மதியா லுண்டாம் வாழ்வென்றும்
மதியி லாதார்க் கிலையென்றும்
விதியா கமத்தும் புராணத்து
மில்லை காணும் பரதவரே
கதியா மானை யிரப்பித்துங்
கரிய மானைக் கானில்விட்டும்
விதியால் வந்த வல்வினையை
வெல்ல லாமோ வெனமொழிந்தார். (118)

போற்றிப் பணிவார் பிறப்பறுக்கும்
பூவைப் பாகர் திருவருளால்
தோற்றிப் பயன்கொண் டிருநாளுந்
தோற்ற நாளும் தோன்றுகிலீர்
ஆற்றுப் பெருக்கின் செய(ல)ன்றோ
ஆர்க்கு நிலைநின் றதுசெல்வம்
[1]காற்றைக் கா(க்)கற் றிடிலன்றோ
காக்க லாவ தெனமொழிந்தார். (119)

உரை

இத்தன்மைத்தாய் அதியரையன் பரதவர்களைப் பார்த்து "வாரீர்! பரதவரே!! சரீரம் எடுத்தார் ஒருவருக்குப் பிரம்மப் படைப்பைத் தப்பவொண்ணாது. பரமேசுவரனுடைய அருளுடையவர்க்கே தப்ப இயலும்.

அது எவ்வண்ணமோவெனில் மார்க்கண்டேயனுக்குப் பதினாறு வயது என்று பிரம்மா விதித்துப் படைத்தார். அப்படியே பதினாறு வயது சென்றவுடன் அவனது உயிரைக் (கொடுபோகக்) காலன் வந்து குருகக்

1. இவ்வரி தெளிவிலது.

கண்டு, பயந்து, ஓடிச்சென்று, பரமசிவனுடைய திருப்பூக்குடலையில் ஒதுங்கக்கண்டு, தம்பிரான் காலனைக் காலால் உதைக்க, ஒரு காலத்திலும் [1] இலையமில்லாத பெருமையைப் பெற்று, (என்றும் பதினாறு வயது உடையவனாய்) அகத்தியன், புலத்தியன், அங்கிஷன், கவுதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயன் என்று எண்ணுகின்ற [2] ஏழு இருடிகளில் ஒருவனாயிருந்து (சிறந்தான்).

அன்றியும் யாகத்தின் மிக்கதொரு புண்ணியமில்லை. அது பாவமாக விளைந்தது எவ்வண்ணமோவெனில், மரீசி, வசிட்டன், அகத்தியன், ஆங்கீரசன், புலத்தியன், புலகன், கிருது, பிருகு, தட்சன், நாரதன் என்கின்ற [3] பத்துப் [4] பிரசாபதிகளில் தட்சப் பிரசாபதி என்கின்ற மகாவிருடி பிரம்ம பதத்தினைப் பெற வானோரைக் கருதிப் பரமேசுவரனைக் கருதாமல் யாகம் செய்யத் தன்னுடைய தலையிழந்து ஆட்டுத்தலையினைப் பெற்றான்.

அல்லாமலும் பிரம்மகத்தியில் மிக்கதொரு பாவமில்லை. அது புண்ணியமாய் விளைந்தது. அது எவ்வாறெனில் [5] கெசபட்டன் புத்திரன் [6] தண்டேசுரன் மணலை சிவலிங்கமாக்குவித்து கைபலமாகப் பசுவின் பாலைக் கறந்து (சிவலிங்கத்தை) ஆடியருளப்பண்ணக் கண்டு, அவன் தந்தையாகிய கெசபட்டன் கோபித்துக்கொண்டு தன் கால்களால் (அச் சிவலிங்கத்தினை) அழிக்கக் கண்டு, (வாளெடுத்துத்) தந்தையின் கால்களைத் துணிய, (அதனால்) கீழே விழுந்த (கெசபட்டன்) "இது ஏன் மகனே?" என்று கேட்ட வாயிலும் வெட்டத் தம்பிரானுடைய

---

1. அழிவில்லாத

2. சத்தவிருடிகள்: அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன் என்பர் ஒரு சாரார். அகத்தியன், ஆங்கீரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்கண்டேயன், வசிட்டன் என்பர் மற்றொரு சாரார். மரீசி, ஆங்கீரசன், புலவகன், வசிட்டன், அத்திரி, புலத்தியன், கிருது என்பர் வேறொரு சர்ரார். காசிபன், அத்திரி, பரத்துவாசன், விசுவாமித்திரன், கௌதமன், சமதக்கினி, வசிட்டன் என்பர் மேலுமொரு சாரார். இவற்றுள் இரண்டாம் குழுவைச் சேர்ந்தது இவ்வேழு இருடிகள் எனும் குழு.

3. தேசப்பிரதேசங்களில் என்றுளது. (தசப் பிரஜாபதிகளில் போலும்)

4. மக்களைப் பெற்றுப் பெருக்குகின்றவர்கள்.

5. வேறு பெயர் எச்சதத்தன்.

6. தண்டேசுரன் சோழமண்டலத்தில் திருச்சேய்ஞலூரில் அந்தணர் குலத்தில் இற்றைக்கு 4500 ஆண்டுகட்குமுன் எச்சதத்தனுக்கும் பவித்திரைக்கும் மகனாகப் பிறந்து, விசாரசருமர் என்னும் பெயர் பூண்டவர். பின்னர் சிவபெருமானால் "அனைத்து நாம் உண்ட கலனும், உடுப்பனவும், சூடுவனவும், உனக்காகச் சண்டீசனுமாம் பதந் தந்தோம்" எனச் சண்டீசப்பதம் பெற்றவர். இதனைப் பெரியபுராணத்துட் காண்க.

அருள் பெற்று உருத்திரபதம் பெற்ருன். ஆதலால் நாம் பாவம் செய்தோமாகிலும் சிவனருள் உண்டாஞல் புண்ணியமாய் விளையும்.

மருவும் நீறும் அஞ்செழுத்தும்
மறவா திருந்தால் பரதவரே
பரவை யால முண்டவர்தாம்
பாழில் தள்ளா ரெனமொழிந்தார். (120)

விருத்தம்

நினைத்த தொன்ருய் முடிவதுதான்
நினையா தொன்ரு மன்றியே
நினைத்த தொன்ரு யினுமாகும்
நினைத்தே யிரும்நீர் பரதவரே
நினைத்த வடியா ருடல்குளிர
நினையார் (த)ாங்கள் நீருக
நினைத்து [1] நகையார் நினையொருவர்
நினைத்த தளவோ வெனமொழிந்தார். (121)

பாரா தெங்கும் நீறணிந்து
பாத கமலந் தனைப்பார்த்துப்
பேரா வகையஞ் செழுத்தோதிப்
பேசா திரும்நீர் பரதவரே
வாரார் கால விடமுண்டு
வானேர்க் கமுத மளித்தவர்தாம்
தீரா ராகி வித்துயரம்
தீர்ப்பா ருளரோ சிலரென்ருர். (122)

காற்கடல்நீர் காசினியில் கலந்தெழுநாள் காழிநகர்
சேற்றிருந்த தோணிதனிற் சிலரிருக்க உடனிருந்தோம்
போற்கடலில் செங்கனகப் [2] புது(மீனுல்) பூசித்தோம்
பாற்றிருநீர் சிவன்கருணைப் பரதவரே யெனமொழிந்தார். (123)

சுருக்க மாட்டேன் புலனைந்தும்
சொல்ல மாட்டே னெழுத்தஞ்சும்
பெருக்க மாட்டேன் சிவஞானம்
பேச மாட்டேன் திருவேடம்

---

1. நகைப்பார் எனலும் பொருந்தும்.
2. அதிபத்த நாயனுர் வரலாறு. 17-ம் பக்கம் காண்க.

உருக்க மாட்டேன் வன்னெஞ்சு
உள்ள படியே யுளதென்று
இருக்க மாட்டேன் சிவனேயிங்
கேதுக் கடியேன் பிறந்தேனே ! (124)

உரை

இப்பால் தம்பிரான் திருக்கயிலாயத் திருமலையில் திருவோலக்கம் [1] கொண்டு இனிது எழுந்தருளியிருக்கின்ற காலத்து, திருநந்திதேவரைத் திருக்கண் சாத்தியருளி "வாராய்! நந்தி!! நம்முடைய இடப்பாகமான மரகத நிற ஒளி போய் ஒரு நிறமானபடியினாலே மிகவும் வறியதாய் இரா நின்றது. (அவ்விடப்பாகப்) பார்வதி நம்முடைய [2] சாபத்தினாலே போய் அதியரையனுக்கு மகளாகி, வளர்ந்து, பக்குவதையாகியிருக்கிறாள். அவளைத் திருமணம் செய்துகொள்ளுவதாகப் போகின்றோம். நீயும் நம்முடனே போதுவாயாக!" என்று திருவாய்மலர்ந்தருளி

மருக்கொண்ட குழலாளை மணஞ்செய்ய மண்மீது
திருத்தொண்டர் வேடமாகிச் செல்குவ மெனமொழிந்தார். (125)

விருத்தம்

சூடும் பிறையுங் கரந்தளித்துங்
கமழு மழுமான் கரந்தருளி
ஆடும் பணியுங் கரந்த(ரு)ளி
ஆறுஞ் சடையுங் கரந்தருளி
நீடுஞ் சிலைவேள் தனையெரித்த
நெற்றி நயனங் கரந்தருளி
வேடம் புனையத் தொடங்கினராம்
[3] வேடர் தொழவீ டருளசெய்வார். (126)

உரை

பகீரதன் தன் தவபலத்தால் [4] சன்னதிப்பட்ட [5] கங்கைதன்னைப் பரமேசுவரன் 'தரிக்கின்றே' னென்ற சொற்கேட்டுக் காலாக்கினிபோலக் கோபித்து மிக்க [6] வேகத்துடனே [7] அறுபது நூல்வட்டம் ஒரு தாரையாகக் கொண்டு, அப்படி ஆயிரமுகமாக வகுத்துப் பாதலத்துண்டாகிய சத்த லோகங்களும் ஊடுருவும்படிக் கறுத்துக்கொண்டு குதித்துச் செல்லத் தம்பிரா(ன் தன்) னுடைய எட்டுத் திருச்சடையிலொரு திருச்சடை(யை)

1. குலைந்து என்றுளது. 2. ஏவலினாலே என்றுளது. 3. வேடந்தொழ என்றுளது. 4. எதிர்ப்பட்ட. 5. சிறிதேவை என்றுளது. 6. கேபத்துடனே என்றுளது. 6. ஒருபல என்றுளது.

சொல்லில் நாத்தடித்துக்காணிற் சொல்தடு மாற்றமாகி
மெல்லநா வறட்சிக்காணில் வீய்வது மாதமொன்றில்
மெல்லென வுரைக்கினுந்தான் மந்தமாய் மயக்கமாகி
வல்லவங் குழலாயன்றே யடைந்திடு மரணமாமே. (25)

(இ-ள்) நாக்குத் தடித்துச் சொற்கள் தடுமாறி, நாவறட்சியும் உண்டாகும். அப்போது சாவு 1 மாதத்திலேற்படும். வார்த்தைகளை மந்தமாக உச்சரித்து அடிக்கடி மயக்கமும் ஏற்பட்டால் அன்றே மரணமடைவான்.

தேகக்குறி

மேனியு மிகப்பருத்து விம்மியே சுழித்து மின்னி
ஊனில்லாச் சோகமாகி லொருவரு டத்திற்சாவாம்
பான நீருடம்பிற் ருவி பறவையினுடற் போற்காணி
லானியாம் மாதம்பத்தி லாத்துமா வென்று கூறே. (26)

(இ-ள்) உடல் மிகவும் பெருத்து, உப்பிச் சுழித்து மினுமினுப்பு உண்டாகி வருந்தினுல் சாவு 1 வருடத்திலேற்படும். பறவையினுடற்போல் தலைபெருத்துக் கால்சூம்பிக்காணப்படில் 10 மாதத்தில் உயிருக்கு இறுதி யுண்டாகும்.

மெய்யெல்லாம் பசுமையாகில் விரைத்திடு மபயமாகிற்
கையடி சுருங்கிக் காணில் கருதுமென் மாத மஞ்சாம்
நெயமலம் வியர்வைகாணில் நெஞ்சுயர்ந்திருபால் வற்றித்
துல்ய தோருருவமாறித் துஞ்சுவர் மாதமாறே. (27)

(இ-ள்) உடம்பு முழுமையும் பசுமை நிறமடையும். இரு அடிக்கைகளும் சுருங்கிவிட்டாலும் 5 மாதத்தில் உயிர் நீங்கும். வியர்வையுடன், நெஞ்சு உயர்ந்து மார்பின் இருபக்கங்களும் குழிந்து விட்டாலும், உருவம் மாறினுலும் 5 மாதத்தில் இறந்து போவார்கள்.

2 மாதத்தில் மரண லக்ஷணம்

மேலெல்லாம் வெளுவெளுத்து விலாவிருபுறமும் வற்றி
சாலவே பசுநரம்புத் தாரைபோல் மாறிக்காணிற்
காலிருமுட் டெலும்புங் கழன்றபோல் மேலேயுன்னில்
வேலினை வென்ற கண்ணுய்! வீய்குவர் மாதம் நாலே. (28)

(இ-ள்) உடலெல்லாம் வெளுத்து, விலாப்புறங்கள் வற்றிப்போய் நரம்புகள் பசுமையாக எழும்பிப் புடைத்துக் காணப்பட்டாலும், இரு

முட்டெலும்புகளும் கழன்றுவிட்டதுபோல் வலவலத்துப் போனாலும், நோயாளி 2 மாதத்தில் இறப்பான்.

(இதுவுமது)

இருவிலா மேலெழும்பி ரண்டுமே யுன்னிக்காணில்
உரைசெய்வர் மாதமூன்றி லுயிரது மரணமென்ன
மருவிய கண்டம்நீண்டு வத்தியே மிடருந்தாழ்ந்து
திரையெனத் தோல்சுருங்கில் செப்புவர் மாதம் ரண்டே. (29)

(இ-ள்) இரு விலாப்புறங்கள் மேலேயெழும்பி புடைத்துக் காணப் பட்டாலும் 3 மாதங்களில் உயிரையிழப்பான். கழுத்து நீண்டு, மெலிந்து, முகவாய் தாழ்ந்து, தோலில் சுருக்கங்கள் காணப்பட்டால் 2 மாதத்தில் மரணம் சம்பவிக்கும்.

1 மாதம், 20 நாட்களிலுண்டாகும் மரணக் குறிகள்

பொருத்தெல்லா நெகிழ்ந்து வற்றிபொற் பகன்றிருக்குமாகிற்
றுரத்தல் போலேய்ப்புக்காணிற் றுஞ்சுவார் மாதமொன்றிற்
றிருத்தலில் நடத்தல்தன்னி லெழும்பலி லசதிகாணில்
விருத்தமாய் துயரமாகில் மரணம்பத்திரு நாளெண்ணே. (30)

(இ-ள்) விலாப்பக்கங்கள் நெகிழ்ந்து வற்றி, அழகு குன்றி மூச்சு விடும்போது அதிகமாக விரிந்து சுருங்கினாலும் 1 மாதத்தில் மரணமுண் டாகும். இருக்கும்போதும், நடக்குபோதும், குதிக்கும்போதும் அசதியதிகம் ஏற்பட்டு, மனக்லேசம் உண்டானால் 20 நாட்களில் மரணம் சம்பவிக்கும் என்றுமறிந்து கொள்ளவும்.

10 நாட்கள் 5 நாட்களிலுண்டாகும் மரணக்குறிகள்.

காயத்தின் மயிர் சுருண்டு கருத்துத் தோல் சுருங்கலாகிப்
பேயொத்த நிறமுமானுற் பிரியும் நாட்பத்திற் சீவன்
நோயற்றோ ரெனினு மேனி நுடங்கியே மார்புதாழ்ந்து
மோயொத்துப் பத்திக் காணி லுயிர் விடு மஞ்சுநாளில் (31)

(இ-ள்) உடலிலுள்ள ரோமங்கள் சுருண்டு, தோல் கருநிறமடைந்து சுருங்கிப்போம். அப்போது 10 நாட்களுக்குள் சீவன் பிரியும்

மேலும், வியாதியில்லாமல் ஸ்வஸ்தனாக இருந்தாலும், உடம்பு குன்றி மார்பு தாழ்ந்துபோய் காணப்பட்டாலும் 5 நாட்களுள் உயிர்போம்.

3 நாட்கள், 2 நாட்களுள் ஏற்படும் மரணக்குறிகள்.

கண்டத்தினரம்பு ரெண்டுங் கரிக்கவே விரைக்குமாகில்
பிண்டத்தைச் சீவன் விட்டுப் பிரியும் நாள் மூன்றுமென்கத்
தண்டொத்துக் காரை யென்பு தடித்தது முயர்ந்து காட்டில்
வண்டொத்த வளவற்றனும் புகரிரு நாளில் வீய்வார். (32)

(இ-ள்) கழுத்து நரம்புகள் இரண்டும் தடித்து விரைத்து நின்றால் 3 நாட்களில் ஜீவன் பிரியும். காரையெலும்பும் தடித்து உயர்ந்தாலும் 2 நாட்களில் மரணமடைவான்.

1 நாள், அல்லது 5 நாழிகையில் ஏற்படும் மரண லக்ஷணம்

உடம்பெல்லாம் பதறிக்காணி லுன்னிடிலுன்னல் தாழில்
நடந்திட(க்கணுக்) கால்சாயில் நாளொன்றில் சாவர்திண்ணந்
திடம்பட விருக்கில் செய்யத் தேகமேமுறுக்கிக் காணில்
விடம்பயில் கண்ணினளே! வீழ்குவர் கடிகையஞ்சில். (33)

(இ-ள்) உடல் முழுவதும் நடுக்கம் ஏற்படும். எழுந்திருக்க இயலாது. கஷ்டப்பட்டு நடந்தாலும், கணுக்கால்கள் பலமின்றி சாயும். அப்போது அந்நோயாளி 1 நாளில் இறப்பார் என்று கண்டுகொள்ளவும்.

உடம்பு முழுவதும் முறுக்கிக்கொண்டாலும் 5 நாழிகையில் மரணம் அடைவார் என்று சொல்லவும்.

மலக்குறியிலிருந்து மரண லக்ஷணம்

மலத்துடன் நெய்தேன்போல நிணம்நீலம்போல வீழ்ந்தா
லுலத்தியே சடத்தைவிட்டே வுயிர்நீங்கு மாதமாறிற்
குலக்கொடி யணங்குநல்லாய்! குழக்கெனச் சேரவீழில்
சொலத்தகு மாதமஞ்சிற் றுஞ்சுவர் உண்மையாமே. (34)

(இ-ள்) மலத்துடன் நெய், தேன் போல் சீதம் விழுந்தாலும் மலம் நீல நிறமாகக் காணப்பட்டாலும், 6 மாதங்களுள் உயிர் துறப்பான், மலம் போகும்போது 'குழக்' என்று ஒரே தடவையில் வீழ்ந்தால் 5 மாதங்களில் இறப்பானென்று சொல்லவும்.

4 மாதம், 3 மாதங்களிலேற்படும் மரணக் குறிகள்

அறைத்த சோறன்னவீழில் லவுஷதஞ் செய்யிற்றீரா
திரைத்திடில் திங்கள் நான்கிலே கிடு மரணமென்கக்

கரைத்த கூழ்போன்று வீழ்ந்துகலங்கியே பொருமுமாகி
லுரைப்பது மாதமூன்றி லொடுங்கிடு முயிருந்தானே. (35)

(இ-ள்) மலம் இளகி அறைத்த சோற்றைப் போலவே வீழ்ந்தாலும், மருந்துகளின் உபயோகத்தினல் தீராமலிருந்தாலும் 4 மாதங்களில் உயிர் நீங்கும். வயிற்றுப் பொருமலுடன் மலம் கூழைப்போல் வீழ்ந்தாலும் 3 மாதங்களில் உயிர் நீங்கும்.

2 மாதத்தில் ஏற்படும் மரணக்குறிகள்.

வெள்ளையாயிரைந்து வீழ்ந்து விலாவுள்ளே சொருகிக்குத்தித்
துள்ளென நெஞ்சிற் ருவித் துஞ்சுவார் மாதம் ரெண்டில்
கள்ளென நுரைத்துக் கம்பங் கஞ்சி போல் கழியு மாகில்
வெள்ளிடு மரணமாமந்த மார்க்கத்திலென்ன சொல்வார். (36)

(இ-ள்) மலம் வெள்ளையாகி, இரைச்சலுடன் வெளியாகும். விலாவில் குத்து வலியுண்டாகும். நெஞ்சிலும் அடிக்கடி வலிஏற்படும். அப்போது அந்நோயாளி 2 மாதங்களுள் இறப்பான். கம்பங் கஞ்சியைப் போல விடாமல் நுரைத்துப் பேதியானலும் 2 மாதங்களில் உயிர் நீப்பான்.

20 நாட்களில், 16 நாட்களிலேற்படும் மரணக் குறிகள்.

நினைக்குமுன் கழியுமாகில் நீர்தனில் கரியைப்போலத்
தினப்படிக் கழியுமாகில் செப்பும் நாளிருபதென்கப்
பனிச்சல மென்ன வீழ்ந்து பன்றிநெய் படர்ந்த தொத்தால்
மனத்தினி லெண்ண வேண்டாம் மரணம் நாட் பதினறென்றே (37)

(இ-ள்) மலம் கழிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டானவுடன் மலம் வெளியாகும். மூத்திரம் கரியைக்கழுவின தண்ணீர் போல் இறங்கும் இம்மாதிரி தினமும் ஏற்படில் 20 நாட்களுள் மரணம் சம்பவிக்கும் எனத் தெரிந்து கொள்ளவும்.

10 அல்லது 7 நாட்களுள் ஏற்படும் மரணக்குறிகள்.

குக்குடத் தெச்சம் போன்றும் குறுந்தினை யரிசி போன்று
மொக்கவே இரத்தஞ் சீயு மோடிடில் நாட்பத்தாகுந்
தொக்குள்ளே சொறுகிக் கொண்டு துருத்தி நீ ரென்னவீழ்ந்து
மிக்கதோர் மயக்கமாகில் வீயும்நாளேழாமன்னே ! (38)

(இ-ள்) கோழியின் மலம் போன்றும், தினையரிசி போலவும் மலம் வீழ்ந்து இரத்தமும் சீழும் கலந்திருந்தால் அந்த நோயாளி 10 நாட்களில் இறப்பான். குடல் சொருகிக்கொண்டு மலம் துருத்தியிலிருந்து பீச்சும் நீரைப்போல அதிவேகத்துடனே கழிந்து, மயக்கம் அதிகமானால் 7 நாட்களுள் மரணம் நிச்சயம்.

5 நாட்கள், 3 நாட்களில் சம்பவிக்கும் மரணக்குறிகள்

எடுத்திடுங் கழிச்சலத்து யிறுகிப்பின் கழிந்துள்ளாவி
நடுங்கியே மயக்கமாகிக் காணில் நவில்வர்நா ளஞ்சாமென்ன
உடைத்தகூழ் முட்டைபோல வூன்வெடி நாற்றம் நாறி
லடிக்கடிக் கழியிற்றனே யாவிபோம்மூன்று நாளில். (39)

(இ-ள்) மலம் சிலதடவை இறுகும். சிலதடவை நீர்போன்று கழியும். உடலில் நடுக்கம் ஏற்பட்டு மயக்கம் உண்டானால், 5 நாட்களில் பிராணன் போகும், என்றறியவும்.

மலம் கோழிமுட்டையின் வெள்ளைக் கருவைப்போன்றும், மிக்க நாற்றத்துடனும், அடிக்கடியும் போனால் 3 நாட்களில் ஆவி பிரியும்

2 நாட்கள் ஒரு நாளிலேற்படும் மரணக்குறிகள்

பச்சிலை யரைத்தாப்போலப் பலபல நிறங்களாக
நெய்ச்செடிநாற்றம் போலக் கழியில் நாள் நிசமிரண்டே
வெச்சென வெதும்பிக்கொண்டு மிகமலஞ் சுபாவம் போல
மிச்சமாய் விகற்பமாகில் வீயும் நாளன்று தானே, (40)

(இ-ள்) பச்சிலையை அரைத்தாப்போல் பற்பல நிறங்களாக மலம் போய், மலத்தில் நெய்செடி நிண நாற்றமும் இருந்தால் 2 நாட்களுள் மரணம் ஏற்படும்.

மூத்திரக்குறி

மூத்திரம் பெய்கும் போது முறுக்கன்றி வீழ்தலாலுஞ்
சூத்திரமான வஞ்சு மாதத்தில் துலையுமென்கச்
சாத்திய உஷ்ணமத்துத் தானெனக் குளிர்ந்துவீழில்
காத்திரமங்கே வீயுங் கருதுநான்கு திங்கடன்னில். (41)

(இ-ள்) மூத்திரம் பெய்கையில் அந்ததாரை முறுக்கிக் கொண்டு விழாவிட்டால் 5 மாதத்தில் மரணம் சம்பவிக்கும் எனத் தெரிந்து கொள்ளவும். உஷ்ணமின்றிக் குளிர்ந்து சிறுநீர் கழிந்தால் 4 மாதத்தில் ஜீவனை இழப்பான்.

(2 மாதம், ஒரு மாதத்திலேற்படும் மரணக் குறிகள்)

மண்டிபோல் சலம் போல் வீழில் மதுவென நீர்தான் வீழில்
தண்டுள்ளே யடைத்து வீழில் சாகுவார் மாதம் ரெண்டில்
கெண்டியின் நீர்போல் வீழ்ந்து இளர் நுரையத்தக்காலே
கண்டுகொள் மாதமொன்றிற் கழன்றிடு மரணமென்றே. (42)

(இ-ள்) சிறுநீர் தடிப்பாகவோ அல்லது தண்ணீரைப் போன்ரோ தேனைப் போன்ரோ ஆகி, ஆண்குறியில் அடைத்துக்கொண்டு, சிறுகச் சிறுக வீழில் 2 மாதங்களில் உயிர் நீங்கும், கிண்டியின் வழியாக நீர் விழுவது போன்று மெல்லியதாக விழுந்து நுரையும் உண்டாகவில்லை யென்ருல் அந்நோயாளி 1 மாதத்தில் இறப்பான்.

அப்போதேயேற்படும் மரணத்தின் குறிகள்

குறியடி யயர்ந்து நீருங் குளிர்ந்து தானறியாதாக
வறிவிலாதோடுமாகி லாத்துமா வன்றிறக்கும்
வெறி கமழ் மலர் பூங்கோதாய்! விளம்பிய பலகுணத்தால்
செறியுயிர் மாளுமென்று செப்பினு ரொப்புள்ளாரே. (43)

(இ-ள்) குறியின் அடி வீங்கி அயர்ச்சியுற்று, நீரும் குளிர்ந்து அறியாமல் வெளியாகில் அன்றே இறப்பான். இம்மாதிரியான குறிகள் உண்டாகித் தக்க வைத்தியமும் செய்யாவிடில் உயிர் நீங்கும் என்றுந் தெரிந்து கொள்ளவும்.

தேகத்தில் நோயுண்டாகும் பொதுக் குறிகள்

இருப்பினில் மலர்ந்து சாய்ந்து யெழில் முகங் கவிழ்ந்து கொண்டு
ஒரு புறஞ்சாய்ந்து கால்கள் ஊன்றியே மடக்கிக் கொண்டு
வருப்பொடு கபால மூக்கில் விரைந்து கை வைத்துக்கொண்டு
திருப்பியே திரும்பிக் கொண்டு மிருந்திடில் சேர்வார் நோயில். (44)

(இ-ள்) இருக்கையில் இருக்கும் போது சாய்ந்து உட்கார்ந்து முகத்தையும் கவிழ்த்துக் கொண்டு, கால், கைகளை ஊன்றிக் குத்திட்டு வைத்துக் கொண்டும், தலையில், மூக்கில் கையை வைத்துக் கொண்டு தாங்கிக்கொள்வதில் விருப்பம் உண்டாளுல் அவர்கள் விரைவில் நோய்க்கு இரையாவர்கள் என்று அறிந்து கொள்ளவும்.

(இதுவுமது)

சாய்ந்து கால் முடக்கிக்கொண்டு சந்தடி யூடுகையைச்
சேர்ந்திட வைத்துக்கொண்டு சிக்கெனக் கால்கள் கட்டிப்
பாய்ந்திடுந் தவளைப்போலப் பரிவுட னிருப்பானுகிற்
ரேய்ந்திடு வார்கள் நோயி லென்றுதான் சொல்லுமுந்நூல். (45)

(இ-ள்) கால்களை முடக்கிக், குந்திக்கொண்டு கைகளை கால்களுக்கு இடுக்கில் சேர்த்து வைத்துக்கொண்டு, கால்களையும் இறுகச் சேர்த்து வைத்துக் கொண்டு, பாயும் தவளையைப் போலிருந்தால் அவனும் நோய் வாய்ப்படுவான்.

கமனக் குறி

நடக்கினிற் சுபாபமின்றி நடையது தாழ்ந்ததாக
வடக்குமாய் நடப்பானுகில் கலித்த கமனனுகிற்
சடத்தொரு புறமே சாய்ந்து சத்தன நடப்பானுகிற்
திடப்பட நெளித்துக்கொண்டு நடக்கினுஞ் சேர்வார் நோயில் (46)

(இ-ள்) நடக்கும்போது சாதாரணமாக நடக்காமல் தாழ்ந்த நடையுடனும் ஒருபுறம் சாய்ந்து நடந்தாலும், உடலை நெளித்துக் கொண்டு நடந்தாலும் அவன் நோய்வாய்ப்படுவான்.

சயனக் குறி

மலர்ந்துதான் கையிரண்டும் மார்பில்வைத் துறங்கலாலும்
நிலந்தனில் வீழ்ந்து கையை நெத்திவைத் துறங்கலாலும்
புலந்தரு விழி விழித்தார் போற்கிடந் துறங்கலாலு
மிலங் கிழையனையாய்! நோயில் யெய்திடுவார்கள் திண்ணம் (47)

(இ-ள்) மல்லார்ந்து படுத்துக்கொண்டு இருகைகளையும் மார்பின் மேல்வைத்து உறங்கினுலும், தரையில் படுக்கும்போது கையைத் தலைக்கு உயரமாக வைத்து உறங்கினுலும், கண்களைத் திறந்துகொண்டு தூங்கினுலும் நோய் அவர்களைச் சாரும்,

இதுவுமது

வாயினு லூதலாலும் வரிந்து பற்கடிக் கையாலுந்
தீயதோர் நெடுமூச்சிட்டுச் செத்திடும் பிரேதம் போன்றே
ஓய்விலா துறங்கலாலும் வுறுபகற் காலை மாலை
நேயமாய்த் துயிலலாலும் நிச்சயம் நோயிற் சேர்வார். (48)

(இ-ள்) தூங்கும்போது வாயிலிருந்து ஊதற்சப்தம் ஏற்பட்டாலும் (கொறடு விடுதல்), பற்களை ''நற நற'' என்று கடித்தாலும் நீண்ட பெரு மூச்சுவிட்டு, பிணம் போன்று எப்பொழுதும் உறங்குவதாலும். பகல், காலை, மாலை நேரங்களிலும் தூங்கினுலும் நிச்சயம் நோயினுல் அவதியுறுவான்.

வில்வாதிலேகியம்

நீர் பொருந்துங் கூவிளை வேர் தொக்குப்போக்கி
நிறை பத்து மூன்றுபலந் தூணி த்தண்ணீர்
சீர் பொருந்த யெட்டொன்ருய்க்காய்ந்த நீரைத்
தெளித்த தனில் ஆலைவெல்லம் பலநாலைந்து
யேர் பொருந்து மார்த்திரகச் சாறு நாழி
யிவை கலந்தாற் கற்கமதி மதுரமேலம்
பேர் பொருந்து புட்டிவில வங்கப் பட்டை
பொருந்து மார்த்திர ரகமே வாய் விளங்கம். (1)

விளங்கமே பாரங்கி மர மஞ்சள் கூகை
வெண்ணீறு கொத்துமல்லி கடகசிங்கி
களங்க மறுந் தாளீசங் கிராம்பு சாதிக்
காய் மாஞ்சி திரி கடுகு செவ்யங் கோட்டந்
துளங்குதிரி பலைமூலம் ஓம மிந்து
சொல்லும் நா கப்பூவுத் தேவதாரம்
கொளும் பருத்தி விரைப்பருப்பு வகைபலங்கால்
கொண்டு சூரணமதனைப் பாகில் தூவே. (2)

ஏர்க்கை பெறக் கிண்டியதிற் பசுவின் நெய்தே
னிசைத்திறக்கி லேகியத்தை யருந்து வீரே
லார்க்கு மரி தானகுன்மம் பித்தவாயு
வருசி வாய் நீர்வருதல் நெஞ்செரித்தல்
பார்க்குமாம லகப்பித்தங் கசந்த பித்தம்
பயித்து நான் குந்தீரும் பசியுண்டாகுந்
தீர்க்குமே விக்கலைந்துஞ் சொன்ஞேஞ் சொன்ஞேம்
வில்வாதி லேகியத்தின் செயலிதாமே. (3)

(இ-ள்) வில்வ வேரைக் கொண்டுவந்து மேல் தோலை நீக்கிவிட்டு அந்தக் கட்டையை 13 பலம் எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்திலிட்டு 4 படி தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்து ஆலை வெல்லம் 20 பலம் சேர்த்து, இஞ்சிச்சாறு ¼ படி சேர்த்துப் பாகாக்கிக் கொண்டு,

அதிமதுமரம்	ஏலக்காய்
இலவங்கப்பட்டை	இஞ்சி
வாய்விடங்கம்	சிறு தேக்கு
மரமஞ்சள்	கூகை நீர்
கொத்து மல்லி	கற்கடசிங்கி
தாளீசபத்திரி	கிராம்பு

சாதிக்காய்	சடாமாஞ்சில்
சுக்கு	மிளகு
திப்பிலி	செவ்வியம்
கோஷ்டம்	கடுக்காய்த்தோல்
தான்றித்தோல்	நெல்லிவற்றல்
ஓமம்	இந்துப்பு
சிறுநாகப் பூ	தேவதாரு
பருத்திவிதைப் பருப்பு	

இவைகளை வகைக்கு 1/4 பலம் வீதமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து, முன் செய்திருக்கும் பாகில் தூவி, விடாமல் கிண்டி பசுவின் நெய் விட்டுப் பதத்திலிறக்கவும். நன்கு ஆறிய பின்னர் தேன் விட்டுக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

குன்மம், பித்தவாயு, அருசி, வாயில் நீர் ஊறுதல், நெஞ்செரிவு, ஆமலகபித்தம் (அதாவது அம்லபித்தம்) கசந்த பித்தம் முதலான 40 வகை பித்த நோய்களும் சாந்தியாகும். பசியும் உண்டாகும். 5 வித விக்கல் களும் தீரும்

கண்டாத்ரக லேகியம்

கண்டார்த்திரக மாறுபலங் கருகா தாநெய் யிற்பொரித்துக்
கொண்டார் பருத்திவிதைப்பருப்புக் கொத்தமல்லித் திரிகடுகு
வண்டார் மலர்ப்பூச் சீரகமும் வகைநாற்கழஞ்சு துடியோமம்
தண்டாளீசந் தூயமூலஞ் சாதி லவங்கந் திரிபலையே (1)

பலமாந் திராட்ச மதுரமிந்து பாரங்கி வகையொன் ஞெருகழஞ்சு
நலமாஞ்சர்க்கரை யாறுபலம் நறுந்தேன் குடுவத் துவயம் விட்டுப்
பலமாங் கண்டார்த்திரகப் பேர் பகருமருந்து கொளக் குன்மம்
பலமாய் பித்தரோகங்கள் பீலிகை யருசி பறந்திடுமே (2)

(இ-ள்) இஞ்சியைத் தோல் நீக்கிக் கண்டங் கண்டமாக வெட்டிய துண்டுகள் 6 பலம் எடுத்துப் பசுவின் நெய்விட்டுக் கருகாமல் பொன்னிற மாகப் பொரித்துக் கொள்ளவும்.

பருத்தி விரைப் பருப்பு	கொத்தமல்லி விதை
சுக்கு	திப்பிலி
மிளகு	சிறுநாகப்பூ
சீரகம்	

இவைகள் வகைக்கு 4 கழஞ்சு (½ பலம்) எடுத்து

ஓமம்	ஏலக்காய்
தாளீசபத்திரி	திப்பிலி மூலம்
சாதிக்காய்	கிராம்பு
கடுக்காய்த்தோல்	நெல்லிவற்றல்
தான்றித்தோல்	

இவைகளும் வகைக்கு 1 பலம்

திராட்சைப் பழம்	அதிமதுரம்
இந்துப்பு	கண்டு பாரங்கி

இவைகள் வகைக்கு 1¼ வராகனெடையெடுத்துக் கல்லுரலிலிட்டு நன்ருக வஸ்திரகாயஞ் செய்து கொண்டு முன் சொன்ன வறுத்த இஞ்சித் துண்டுகளையுஞ் சேர்த்து நாட்டுச் சர்க்கரை 6 பலம் சேர்த்து நன்ருக லேகியமாக இடித்து வைத்துக் கொள்ளவும். பின்னர் சுத்தமான தேன் 2 குடவம் அதாவது ½ சேர் விட்டுக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு சுண்டைக்காயளவெடுத்துத் தினம் காலை மாலையுட் கொள்ளப் பலமான பித்தரோகங்கள், பீலிகை, அருசி முதலானவை தீரும். இதன் பெயர் 'கண்டார்திரக லேகியம்' ஆகும்.

பாண்டு காமாலைக்குக் கோமூத்ராதிலேகியம்

கோசலங் குறுணிதன்னிற் குளம் பலமொருபதிட்டு
வீசனல் காய்ந்த பாகிற் விசுவஞ் சோடச மண்டூரம்
மாசில் முப்பலமுஞ்சேர்த்து வருங்கோமூத் திராதிலேகியம்
போசனம் பண்ணப் பாண்டு காமாலை சூலைபோமே (1)

(இ–ள்) பசுவின் மூத்திரம் 1 மரக்காலுடன், வெல்லம் 10 பலம் சேர்த்து, அடுப்பின் மேலேற்றிப் பாகாக்கி 16 பலம் சுக்கு, சுத்தி செய்த கிட்டம் 3 பலம் இவைகளைப் பொடி செய்து போட்டு லேகியமாக்கிக் கொள்ளவும்.

இதில் ஒரு சுண்டைக்காயளவெடுத்துத் தினம் 2 வேளை கொடுக்கப் பாண்டு, காமாலை, சூலை, இவைகள் தீரும்

லசுன. வச்சிராதி லேகியம்

பாரினில் லசுனவச்சிர லேகியம் பகரக் கேளீர்
சார்வுறு பிரண்டையிஞ்சிச் சாறிவை வகை முந்நாழி
சீர்பெறுகண்டங்காரி செய்யதூ தளையின் சாறு
பேரிருநாழி கொண்டு பெய்துமே மருந்துகேளே (1)

மருந்துநல் வெள்ளையுள்ளி வளர்பல மிருபதிந்து
அருந்து சீரகங் கருஞ் சீரகங்காய மசமதாகம்
பொருந்திய கிராம்பரத்தை புகரறு மேலம் புட்டில்
திருந்துசா திக்காய்சாதிபத்திரி சிறிய மூலம் (2)

திரிகடு வசம்பு காந்தந் திகழ்தான்றிக் காய்நெல்லிக்காய்
விரிசவுக் காரஞ்செய்ய வெந்தயம் வகையோரெுன்று
பரிபல மூன்று நூறுபத்யம் விளைகளைந்து
சரிசமங் கல்மண் போக்கிச் சரியரைப் படியுங்கூட்டே (3)

ஏர் கொடிவேலிவேரு மிசைபுங்கம் வேரின்றேலும்
நாறர வரைத்துருட்டி நாரங்காயளவு கொண்டு
சார்வுறு வாமணக்கந் தைலம துரியுஞ் சேர்த்து
சீர்பெற முன்னஞ் சொன்ன மருந்தொடு பிசறிக்கொள்வோம் (4)

பிசறியே மருந்துஞ் ………… றனல் காயும்போது
நசைபெறு கறுப்புவெல்ல முப்பலம் நறுக்கியிட்டுச்
சுசி யரிதகிப் பிரமாணந்துய்த்திடச் சூல குன்மம்
…… …… …… …… (5)

குன்மரோகங்கள் பாண்டு காமாலை குடலில்வாதங்
கன்மரோகங்களான கணி பவம் வாந்தி வாயு
சென்மரோகங்களான அக்கினி மந்தஞ் சிலேத்ம
மின்மஹுருதரச் சூரை வீக்கமுந்தீரும் பாரே (6)

(இ-ள்) பிரண்டைச்சாறு இஞ்சிச்சாறு
இவைகள் வகைக்கு 3படி

கண்டங்கத்தரிச்சாறு	தூதுவேளைச்சாறு
இவைகள் வகைக்கு	2 படி
பூண்டு	பலம் 20
இந்துப்பு	சீரகம்
கருஞ்சீரகம்	பெருங்காயம்
ஓமம்	கிராம்பு
சிற்றரத்தை	ஏலக்காய்
சாதிக்காய்	சாதிப்பத்திரி
திப்பிலி	சுக்கு
மிளகு	வசம்பு
அயக்காந்தம்	தான்றிக்காய்த்தோல்
நெல்லிவற்றல்	சவுக்காரம்
வெந்தயம்	

இவைகளை வகைக்கு 3 பலம் வீதம் எடுத்து இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு, கொடிவேலி வேர், புங்கம் வேர் இவைகளின் நாறுகளை நீக்கி மேல் புரணியை மாத்திரம் எடுத்துக் கைபடாமல் ஒரு நாரத்தங்காயளவு அரைத்து

ஆமணக்கெண்ணெய் ½ படியும் எல்லாவற்றையும் ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கும்போது கறுப்பு வெல்லம் 3 பலம் சேர்த்துக் கெட்டியாகச் செய்து கொள்ளவும்.

இதில் ஒரு கடுக்காய் பிரமாணம் வீதம் உட்கொள்ளவும். சூலைகுன்மம், குன்மரோகங்கள், பாண்டு, காமாலை, குடல் வாதம், வாயு, வாந்தி, அக்கினிமந்தம், கபம், உதரச்சூரை, வீக்கம் முதலான ரோகங்கள் தீரும்.

நீர் அடைப்பு, நீரிழிவிற்கு வங்கபற்பம்

காரீயம்	பலம்	1	காந்தம்	பலம்	2
இந்துப்பு	பலம்	3	பெருங்காயம்	பலம்	1
வெடியுப்பு	பலம்	2	சீனக்காரம்	பலம்	½

இந்த மருந்துகளை வெவ்வெறுகப் பொடித்து வைத்துக்கொள்ளவும் ஒரு சட்டியில் ஈயத்தை உருக்கித் துத்தத்தைப் பொடி செய்து போட்டு, முருங்கைப் பட்டையும் சிதைத்துப் போட்டு, முருங்கைக் கம்புகொண்டுக் கிண்டிக் கிண்டி நன்ருக வறுக்கவும். பின்னர், காந்தம், சீனக்காரம் முதலான ஒவ்வொரு மருந்துகளையும் போட்டு வறுத்து, அதன் பிறகு முருங்கைப்பட்டை ½ பலம் நறுக்கிப் போட்டு ஒரு சாமம் வறுக்க மயில் கழுத்து வர்ணமாகப் பற்பம் கிடைக்கும்

இந்த மருந்தையொரு கலசத்திலிட்டு 4 நாட்கள் பூமியில் புதைத்து வைத்து 5 வது நாளெடுத்து 2 பணவெடை பற்பமும், வங்காளச் சீனியும் கலந்து பசு வெண்ணெயில் கொடுக்கத் தீரும் வியாதிகள் :— துர்மாங்கிஷம், நீரடைப்பு, நீர்செறுப்பு, நீரிழிவு முதலியன.

பேதிக்கு மாத்திரை

சுத்தி செய்த நேர்வாள பருப்பு	1 பலம்
இலுப்பை பூ	பலம் 2
கடுகரோகிணி	பலம் 2

இம் மூன்று மருந்துகளையும் கல்வத்திலிட்டு 2 படி மிதிபாகல் இலைச்சாறு விட்டு அரைத்துக் குன்றிப் பிரமாணம் மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி வெந்நீரில் 1 மாத்திரை கொடுக்கப் பேதியாகும். நாலு நாட்கள் அல்லது 6 நாட்கள் ஷை சாறு விட்டு அரைக்கவும்.

டங்கணாதிக் குளிகை

வெங்காரம்	பலம் 6
சுத்தி செய்த நேர்வாளம்	பலம் 3
நல்ல கெந்தகம்	பலம் 2
சுக்கு, மிளகு, திப்பிலி (மூன்றும் சேர்ந்து)	பலம் 2

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துகடலைப் பிரமாணம் உருண்டை செய்து, எலுமிச்சம்பழம் அல்லது இஞ்சிச் சாற்றில் கொடுக்கக் கெர்ப்ப விப்புருதி, மலசலமடைத்தல், உப்பிசம், உதிர வாயு இவைகள் தீரும்.

தாமிரச் செந்தூரம்

செம்பு சுத்திசெய்து ஈசலிறகுபோல் தட்டியது	பலம் 16
சுத்தி செய்த ரஸம்	,, 4
சுத்தி செய்த நாபி	,, 4
மிளகு	,, 16
சுத்தி செய்த கெந்தகம்	,, 16
புன்முருங்கைப் பட்டை	ஒரு விளாங்காயளவு

முதலில் ரஸத்தையும் கந்தகத்தையும் அரைத்துக் கஜ்ஜலி செய்துப் பின்னர் மற்ற மருந்துகளைப் போட்டு நன்ருக வெள்ளைச்சாறணை சாறு விட்டரைத்துப் பிறகு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, பிறகு முருங்கைப்பட்டை சாறு விட்டரைத்து, ஒரு புதுச் சட்டியிலிட்டு வெயிலில் நன்ருகக் காயவைக்கவும். உலர்ந்தபின் மறுபடியும் புதுச்சட்டியிலிட்டு, மேற்சட்டி மூடிச் சீலை மண் செய்து அடுப்பின் மேலேற்றி 30 நாழிகை எரிக்கச் செந்தூரமாம்.

இதில் 3 குன்றி எடையெடுத்து இஞ்சிச்சாற்றிலிடக் குன்மம், மகோதரம், சகல வாயுவுந் தீரும்.

சாறணைச் சாற்றிலிட வலிகுன்மம் தீரும்
வெற்றிலைச் சாற்றிலிடச் சத்தி குன்மந் தீரும்.

நவலோகாக்னி குமாரன்

சுத்திசெய்த ரஸம், பொன், வெள்ளி, வெள்ளீயம்,
லோகம், காரீயம், செம்பு, வெங்கலம், பித்தளை,
துத்தநாகம் இவைகளைப் பற்பம் பண்ணிச் சமபாகங்
கூட்டி எருக்கம் வேர்க் கஷாயம் விட்டரைத்து

5 நாட்கள் மத்தித்து, அதைக் காசிக்குப் பியிலிட்டடைத்துச் சீலை மண் செய்து வாலுகாயந்திரத்தில் சிறுதீயாகப் பன்னிரண்டு சாமமெரித்துச்

சாங்க சீதளமாக ஆறியபின் எடுத்துப் பொடி செய்து அனுபான பேதங்களில் குன்றியளவு கொடுக்கச் சர்வ ரோகங்களுந் தீரும்.

சிந்தாக்கினி குமாரன்

சுத்தி செய்த பாதரஸம்	நெல்லிக்காய் கெந்தகம்
பொரிக்காரம்	சுத்தி செய்த நாபி.

இவைகளைச் சமபாகங் கொண்டு, கல்வத்திலிட்டு எருக்கிலைச்சாறு விட்டு, அரைத்துச் சிறுசிறு உருண்டையாகத்திரட்டி ஒரு வச்சிர மூஷையிலிட்டுச் சீலை மண் செய்து, ஒரு சட்டியிற் கீழுமேலுஞ் செங்கற் பொடியிட்டு அந்த குப்பியைப் பதித்து உலைமூடிக் கொண்டு மூடிச் சீலை மண் செய்து குழிவெட்டி எருவடுக்கி அதில் வைத்துக் கஜபுடம் பிரமாணத்தில் வெந்து யெடுத்து, ஔஷதத்தைச் சூரணஞ் செய்து அனுபான விசேஷங்களில் சிஞ்சாப்பிரமாணம் (புளியங்கொட்டை) கொடுக்கச்சர்வரோகமுந்தீரும்.

பிராணக்கினி குமாரன்

சுத்தி செய்த ரஸம்	பச்சை நாபி
அப்பிரகம்	கெந்தகம்

இவை சமபாகங் கொண்டு, பற்பாடகச் சாறு விட்டு 3 ஜாமம் அரைத்து வச்சிர மூஷையிலிட்டு, ஒரு குழி வெட்டிக் கஜபுடமாக எருப்புடமிட்டு ஆறியெடுத்துக் கல்வத்தில் வைத்து, மீன் பித்தம் விட்டரைத்துக் குன்றிப் பிரமாண முருண்டை செய்து அனுபான விசேஷங்களில் கொடுக்கச் சர்வரோகமுந் தீரும்

கோடாசூழிக் குளிகை

சுத்திசெய்த இரதம்	சுத்திசெய்த கெந்தகம்
,, லிங்கம்	,, நாவி
,, இருவி	,, நேர்வாளம்
பொரித்த வெங்காரம்	லோகச் செந்தூரம்
சுக்கு	மிளகு
திப்பிலி	கடுக்காய் தோல்
நெல்லி வற்றல்	தான்றித்தோல்
வாயுவிடங்கம்	தாளீசபத்திரி
அதிமதுரம்	கிராம்பு
சீரகம	திப்பிலி மூலம்
சித்திரமூலவேர்	

இவைகளைச் சமமெடுத்துப் பொடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றில் சாமம் அரைத்து, துளசி, கையாந்தகரை, நொச்சி, ஆவாரை இந்நான்கிலைகளையும் இடித்துப் பிழிந்த சாறுவிட்டு 1 சாமம் அரைத்து, கண்டங்கத்திரி, வேலிப்பருத்தி, ஆடாதோடை இம்மூன்றும் சேர்த்திடித்துப் பிழிந்த சாறுவிட்டு 4 சாமங்களரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி, நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு கலசத்திலிட்டு மூடிப் பூமியில் 12 நாட்கள் புதைத்து வைத்திருந்து எடுத்துச் சுக்கு, மிளகு, திப்பிலிச் சூரணத்தில் 1 மாத்திரை சேர்த்து வெள்வெங்காயத் தைலத்தில் கொடுக்கச் சன்னிகள் தீரும். திப்பிலியும் தேனுங்கூட்டிக் கொடுக்க வாதந்தீரும். திப்பிலியும் பொரிக்காரமும் கூட்டிக் கருப்புட்டியில் (பனைவெல்லத்தில்) கொடுக்க ஈளை, இருமல், க்ஷயரோகந்தீரும். பெருங்காயங்கூட்டி ஆமணக் கெண்ணெயிற் கொடுக்க, வயிற்றில் நோய் குன்மம் தீரும். இப்படி தக்க அனுபானங்களில் சர்வ ரோகமுந்தீரும்.

சுத்தானந்த பைரவன்

சுக்கு	மிளகு
திப்பிலி	கடுக்காய்த்தோல்
தான்றித்தோல்	வசம்பு
நேர்வாளம் (சுத்தியானது)	சன்னிநாயகம்
நெய்கொட்டாம்பழம் (பூவந்தி)	கருஞ்சீரகம்
சாரணை வேர்	கார்போகவரிசி
பூண்டு	சதகுப்பை
வெளிச்சைப் பிசின்	கடுகரோகிணி

இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்து, நன்ருக இடித்துக் கல்வத்திலிட்டு வேப்பம்பழச் சாற்றிலோ அல்லது முருங்கைப்பட்டை, வேப்பம்பட்டை இரண்டுங் கஷாயம் பண்ணிக்கொண்டோ, விட்டு, நன்ருக 2 சாமங்கள் அரைத்துச் சிறு சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி அனுபான பேதங்களில் கொடுக்கச் சன்னிதோஷம், உதரதோஷம் இவைகள் தீரும்.

சன்னிபாத பைரவ மாத்திரை

பொன்னிதாரம், இரஸம் இவ்விரண்டும் சரியளவெடுத்துப் பாகலிலைச் சாறு விட்டுச் செப்புக்கிண்ணியிற்பூசி ஒரு சட்டியிற் கவிழ்த்து, மண்ணுங் கடுக்காயுங் கூட்டியரைத்துச் சீலைமண் செய்துக் கிண்ணித் தூறு தெரிய மணலிட்டு அடுப்பின்மேலேற்றித் தீயெரித்துக் கிண்ணித்தூறிலே நெல் வைத்தால் பொரியும் அந்தப் பருவத்திலே ஆறிவிட்டெடுத்துக் கிண்ணியிலேறியிருக்கிற மருந்தையெடுத்துக் கொம்புப்பாகலிலைச்சாறு விட்டு அரைத்து

உளுந்துப் பிரமாணமுருண்டை செய்து நிழலிலுலர்த்திச் சுக்கு, நாபி, கெந்தகம், பொரிக்காரம் இவைகள் வகைக்கு விராகனெடை 3; நவச்சாரம், எவச்சாரம், சத்திச்சாரம், இந்துப்பு இவை வகைக்கு வராகனெடை 1½, இவையெல்லாம் பொன்னூமத்தஞ் சாறுவிட்டரைத்துக் குகையிலிட்டுச் சீலமண்செய்து, குக்குட புடமிட்டெடுத்துக் கெண்டைமீன் பித்து, பன்றிப் பித்து, மயில் பித்து, இம்மூன்றிலும் வகைக்கு 1 ஜாமம் வீதம் மூன்று அரைப்பு அரைத்து, உளுந்துப் பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

இஞ்சிச்சாறு, தேனில் கொடுக்கச் சன்னி தோஷம், வாதம், குளிர் சுரம், சுவாசம், காசம், பிறவீச்சு, தனுர் வாதம், நடுக்கு வாதம், சிலேத்ம ரோகம், சுரவிக்ருதிகள் இவையெல்லாந் தீரும்.

திரைலோக்ய சிந்தாமணி

சுத்தமான இரஸம் பற்பம்	சுத்தமான வைரம் பற்பம்
,, பொன் ,,	,, வெள்ளி ,,
,, தாமிரம் ,,	,, உருக்குப்பொடி பற்பம்
அப்பிரக பற்பம்	இவைகளுடன்
சுத்திசெய்த கெந்தகம்	சுத்திசெய்த உத்திகம் (முத்து)
,, சங்கு	,, பவழம்
,, அரிதாரம்	,, மனோசிலை

இவைகளையொன்றுகூட்டி ஒரு கல்வத்திலிட்டுக் கொடிவேலிக் கஷாயம் விட்டு 7 நாட்கள் அரைத்து, எருக்கம்பால் விட்டு 3 நாட்கள், நொச்சிச் சாற்றில் 1 நாள், திருகுக்கள்ளிப்பாலில் ஒருநாள், இஞ்சிச்சாற்றிலொருநாள், மாதளம் பழச்சாற்றில் 7 நாட்கள் அரைத்துப் பொன்னிறமாக இருக்கும் பலகரைக் (சோழி) குள்ளே யடைத்து, வெங்காரத்தை எருக்கம்பால் விட்டரைத்துப் பலகரை வாயில்பூசி ஒரு சிறு கலசத்திற்குள்ளே வைத்து வட்டோடு போட்டு மூடிச் சீலமண்செய்து புடமிட்டெடுத்து 21 நாட்கள் கொடிவேலிக் கஷாயம் விட்டரைத்து, இஞ்சிச்சாறு விட்டு 7 நாட்கள் அரைத்துக் கஞ்சாயிலைச்சாறு விட்டு 3 நாட்கள்அரைத்து, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு 7 நாட்கள் அரைத்து, கொம்மட்டி மாதளைச் சாற்றில் 7 நாட்களரைத்து வைத்துக்கொள்ளவும்.

இதற்கு மேலிந்த மருந்திற்குச் சரியெடை இரதபற்பங்கூட்டி இரத பற்பத்திற்கு நாலிலொன்று வைக்கிராந்த பற்பம் கூட்டி, முருங்கைப்பட்டைச் சாற்றில் 7 நாட்களரைத்துப் பின்பு இதற்கு நாலிலொன்று வெங்காரம் கூட்டி, வெங்காரத்திற்குச் சரி சுத்திசெய்த நாபி கூட்டி, நாபிக்குச் சரி மிளகு, கிராம்பு கூட்டி, சாதிக்காய், சாதிப்பத்திரி, திப்பிலி இவை நாபிக்கு

நாலிலொன்று கூட்டி இஞ்சிச்சாறு விட்டரைத்து மாத்திரைகளாக உருட்டிப் பதனம் பண்ணிவைத்துக் கொள்ளவும்.

இதில் 1 மாத்திரை உட்கொள்ளப் பலமுண்டாகும். தேககாந்தி அதிகரிக்கும். வீரிய விருத்தி உண்டாகும். பசி, தாகம் உண்டாகும்.

சகல தோஷங்களும் வியாதிகளும் போகும். உடம்பு பெருக்கும், பாண்டு, வயிற்றுக்கழிச்சல், பீலிகை, மகோதரம், சோகை, சுரங்கள், கல்லடைப்பு, தாகம், பவுத்திரம், சத்தி, குன்மம், குஷ்டரோகம் முதலான பல வியாதிகளும் தீரும்.

இது உண்மையென்று நம்பி சிரமப்பட்டுச் செய்தால் உத்தமம்.

சந்திரோதய மாத்திரை

திராக்ஷைப்பழம், இலுப்பைப்பூ, அதிமதுரம், பச்சைநாபி, லிங்கம், திப்பிலி, பேரீச்சம்பழம், சந்தனம், நன்னாரிவேர், வெட்டிவேர், கோரைக் கிழங்கு, இலாமிச்சம்வேர், கோஷ்டம், சிறுநாகப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, திருமஞ்சனக்கல், இவைகளைச் சமமாக எடுத்துக் கொண்டு நுணுக்கிக்கல்வத்திலிட்டுக் கருப்பஞ் சாற்றிலொரு சாமம், நீர் வள்ளிக்கிழங்கி(தண்ணீர்விட்டான்)ல் ஒரு சாமம், அரைத்துத் துவரைப் பிரமாணம் உருண்டை செய்து, நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

ஒரு உருண்டை இஞ்சிச்சாற்றில் கொடுக்கத் தாகசுரந்தீரும்.

ஆடாதோடை புட்டவியலாக அவித்த சாற்றிற்கொடுக்கச் சன்னி வாதந்தீரும்.

அனுபான பேதங்களிற் கொடுக்கப் பித்தரோகம், உஷ்ணரோகம் இதுயெல்லாந்தீரும். கைகண்டது.

கோடாசூழிக் குளிகை

பாம்புவிஷம், சமுத்திராப்பழம், சாதிக்காய், சாதிப்பத்திரி, ரஸம், இருவி, கெந்தகம், நாபி, கௌரீபாஷாணம், வெள்ளைப்பாஷாணம், திரிகடு, திரிபலை, துத்தம், துரிசு, அரிதாரம், கருஞ்சீரகம், ஓமம், அபின், சமுத்திரச்சோகி, நிர்விஷம், இந்துப்பு, லவங்கம், லிங்கம், வெங்காரம், அதிமதுரம், அமுக்கிரா இவைகள் வகைக்கு 1 வராகனெடை.

நேர்வாளம் பால்விட்டவித்துச் சுத்தி செய்தது 30 வராகனெடை.

இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச்சாறு, தும்பைச்சாறு, நொச்சியிலைச்சாறு, துளசிச்சாறு, வெற்றிலைச்சாறு, கறுத்த

ஆட்டின் பால் இவை ஒவ்வொன்றிலும் 8 நாட்களரைத்து, உளுந்துப் பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். வியாதிக்குத் தக்கபடி அனுபானத்தில் கீழ் கண்டபடி கொடுக்கவும். குஷ்டத்திற்குக் காட்டாமணக்குப் பாலிலுரைத்துப் பூசவும். மண்டைக் குத்திற்கு (வியாதிக்கும்) குப்பைமேனிச் சாற்றிலரைத்துப் பூசவும். கபால விப்புருதிக்குப் பிரண்டைச் சாற்றிலரைத்துப் பூசவும். ஒருத்தலைவலிக்கு கச்ச நாரத்தங்காய் சாற்றில் நஸ்யம் செய்யவும். காதிற் புழுவிற்குக் கீழா நெல்லிச்சாற்றிலுரைத்து விடவும். காதில் வலிக்குச் சங்கங்குப்பிச் சாற்றில் கலந்து பிழிய, நாசிகா பீடத்திற்கு ஆட்டு மூத்திரத்தில் பிழிய, உண்ணுக்கிற்கு வெள்ளாட்டு நெய்யில் அரைத்துப் பூசவும். சிலந்திக்கு இசங்கம் பழச்சாற்றிலரைத்துச் சீலையிலூட்டிப் போடவும்.

கரப்பானுக்குச் சங்கம்பழச் சாற்றில் உள்ளுக்குக் கொடுக்கவும். ஒட்டிய புண்ணுக்குக் கோதுமை மாவில் ரொட்டி பண்ணிச் சுட்டுத் தின்னவும். மசூரிக்கு அசமதாகத்திலரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும். வரட் சூலைக்கு வெள்வெங்காயத் தைலத்தில் கொள்ளவும். பக்கசூலைக்கு கார்போகவரிசி கூட்டி அரைத்துக்கொள்ளவும். கெற்பசூலைக்குப் பிராயிலை கூட்டி யரைத்து வெந்நீரிற் கொள்ளவும். கெற்பவிப்புருதிக்குக் கோடக சாலைச் சாற்றில் கொள்ளவும். பித்தவிப்புருதிக்குக் கொன்றைப் பழச்சாற்றில் கொள்ளவும். விப்புருதிக்குக் கோமியத்தில் கொள்ளவும், வாதத்திற்கு அரசம்பட்டையோடரைத்து வெந்நீரிற் கொள்ளவும். சிலேத்ம விப்புருதிக்குச் சிறுநீரிற், சிறுகீரைச்சாற்றிற் கொள்ளவும். பித்தக்கரப்பானுக்குச் சோற்றி லிட்ட பழயநீரிற் கொள்ளவும். பூதகரப்பானுக்கு எலிமிச்சம்பழச் சாற்றில் கொள்ளவும். வாதக்கரப்பானுக்கு கழுதைவிட்டைச் சாற்றில் கொள்ளவும். சிலேத்ம கரப்பானுக்கு பிரண்டைப்பழச்சாற்றில் கொள்ளவும். சிரங்கிற்கெல்லாம் ஆடாதோடைச் சாற்றில் கொடுக்கவும். சிலேத்மத்திற்கு காணச்சாற்றில் (கொள்ளு) இப்படி அனுபான பேதங்களாக வியாதி கண்டு இம்மருந்தைக் கொடுக்கச் சர்வரோகமுந் தீரும். இம்மருந்தைச் சோம்ப லில்லாமல் செய்ய மிகவும் உத்தமம்.

மேகசஞ்சீவினி

காரீயம்	வராகனெடை	$3\frac{1}{2}$	இரதம்	வராகனெடை	$1\frac{1}{2}$
இளந்தென்னம்பூ	,,	4	குறுமபை	,,	4
ஆவாரை விரை	,,	5			

இவைகளில் ரஸத்தையும் ஈயத்தையும் உருக்கிக் கலந்து, கொள்ளவும். மீதமுள்ள மருந்துகளை இடித்து எருமை மோரில் 1 நாள் ஊறவைத்து, மறு நாள், ஈயத்தையும் கலந்து ஷெ மோர் விட்டு நன்றாகவரைத்து மாத்திரையாக

உருட்டிவைத்துக்கொள்ளவும். தக்க அனுபானங்களுடன் கொடுக்க மேக ரோகந்தீரும்.

மகாம்ருத்விகாதிக்குளிகை

திராக்ஷைப்பழம், பேரீச்சம்பழம், இலுப்பைப்பூ, அதிமதுரம், இலாமிச்சம்வேர், வெட்டிவேர், நன்னாரிவேர், செங்கழுநீர்க்கிழங்கு, கோரோசனை, கிராம்பு, கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், முத்து, பவழம், மான்கொம்பு, கோஷ்டம், சாஸ்திரவேதி, கிராம்பு, ஏலம். திப்பிலி, மண்புழு, கோரைக்கிழங்கு, அக்கிராக்காரம் இவை சமபாகங்கூட்டிக் குளிர்ந்த தண்ணீர் விட்டு ஒரு சாமம் அரைத்துக் குன்றியளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி.வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு உருண்டை முலைப்பாலில் கொடுக்க உன்மத்தம், அரோசகம், இரத்தபித்தம், தாகசுரம், அந்தரதாகம், விஷபாகம், விக்கல், நாக்குவெடிப்பு, உடல்வெடிப்பு, இரத்தப்பிரமியம் நீர்க்கட்டு முதலான ரோகங்கள் தீரும்.

லகு ம்ருத்விகாதிக் குளிகை

செம்மணத்திக்கட்டை, ஏலக்காய், சந்தனத்தூள், சுக்கு, நாறிப்புல் கதிர், திராக்ஷைப்பழம், சடாமாஞ்சி, நன்னாரிவேர், சுக்கு, லவங்கப்பட்டை, கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு, திரிபலை, பேரீச்சம்பழம், இலாமிச்சை வேர், வெட்டிவேர், அரக்கு, மெழுகு, சீரகம், கிராம்பு, லவங்கப்பத்திரி, கோஷ்டம், அதிமதுரம், கோரோசனை, வில்வப்பழம், வில்வவேர் இவைகளைச் சமமெடுத்துக்கொண்டு கருப்பஞ்சாற்றிலரைத்துக் கழஞ்சி (கழக்கோடி)ப் பிரமாணமுருண்டை செய்து வியாதிக்கேற்ற அனுபானங்களில் கொடுக்கவும்.

சாதிலிங்க மாத்திரை

பச்சைக்கற்பூரம், மான்கொம்பு, ருத்திராட்சம், வெட்டிவேர், இலாமிச்சம்வேர், அதுமதுரம், கோஷ்டம், கோரோசனை, திராட்சைப்பழம், பேரீச்சம்பழம், திப்பிலி, சந்தனம், கிராம்பு இவைகள் வகைக்கு 1 வராக னெடை, சுத்தி செய்த சாதிலிங்கம் வராகனெடை 13, சாத்திர வேதிக்காய் வராகனெடை 26.

ஆக இதையெல்லாந் தூளாக்கிக் கல்வத்திலிட்டுப் பன்னீர், கருப்பஞ் சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு இவைகளினால் 3 அரைப்பு அரைத்து இலந்தைக்கொட்டைப் பிரமாணம் உருண்டைசெய்து

வாதசுரத்திற்கு நொச்சிச்சாற்றிலிடவும்.

பித்தசுரத்திற்கு முலைப்பாலிலிடவும். சிலேத்ம சுரத்திற்குத் தூதுளம் பழமுந் தேனுங் கூட்டிக் கொடுக்கவும். சந்நிபாத ஜ்வரத்திற்கு வெள் வெங்காயத் தைலத்திற் கொடுக்கவும்.

துர்மாமிச அடைப்பிற்கு அனுபானம்

காட்டுக்கோரைக் கிழங்கு, சதாவரிக் கிழங்கு, நிலைப்பனங் கிழங்கு, நன்னாரிவேர்ப் பட்டை, பூமிச்சக்கரக் கிழங்கு, முசுமுசுக்கை வேர், நெருஞ்சி வேர், பீளை வேர், கொத்துமல்லி விதை இவைகளை நன்றாக உலர்த்தி இடித்து வைத்துக்கொள்ளவும்,

இவைகளை வகைக்கு ¼ படி பொடி கூட்டி, இந்தப் பொடி ஒரு வெருகடி (மூவிரல் கொள்ளும் அளவு)ப் பிரமாணமும், ஒரு உருண்டையும், ஒரு கழஞ்சு வெங்காளச் சீனியும் கூட்டி அத்திப்பட்டைச் சாற்றில், இளநீரில், பசுவின் பாலில், பச்சரிசிக் கழுநீரில், கரைத்து உட்கொண்டு பத்தியம் காக்கத் தீரும்.

சுராங்குசக் குளிகை

இரதம், கௌரீபாஷாணம், வெள்ளைப்பாஷாணம், லிங்கம், தாளகம், துத்தம், துருசு, கெந்தகம், மனோசிலை, நேர்வாளம், ஆக இந்த பத்து மருந்துகளையும் சுத்தி செய்துகொண்டு, சரியெடையெடுத்துக் கல்வத்தி லிட்டு இஞ்சிச்சாறு, பாகலிலைச்சாறு, விட்டு நன்றாகவரைத்துச் சிறுபயறு அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, இஞ்சிச் சாற்றி லிடச் சீதச்சுரம், தாபச்சுரம் தீரும். பத்தியம்:— பால்கஞ்சி கொடுக்கவும்.

இதற்குக் கஷாயம்

தாமரையிலையினுட்சுருள்	கோரைக்கிழங்கு
சீந்தில்தண்டு	சித்தாமுட்டிவேர்
பேராமுட்டிவேர்	நன்னாரிவேர்
பொன்மெழுகு	சடாமாஞ்சில்
மரமஞ்சள்	கோஷ்டம்
சிற்றரத்தை	தேவதாரம்
கிராம்பு	சாதிக்காய்
தான்றிக்காய்	கடுகரோகிணி
செவ்வல்லிக்கொடி	சவ்வியம்
பற்பாடகம்	சிறுதேக்கு
ஏலக்காய்	இலவங்கப்பத்திரி
அதிமதுரம்	சிறுபயற்றம்பருப்பு
சுக்கு	கடுக்காய்த்தோல்
கொத்தமல்லிவிதை	

இவைகளெல்லாம் இடித்துவைத்துக்கொண்டு. ஒரு சிரங்கை தூளுக்கு 1 சேர் தண்ணீர் விட்டு, 1/8 ஆகக் காய்ச்சி 2 வேளை உட்கொள்ளவும்.

இலகு சுரங்குசம் (வேறு)

வெள்ளைப்பாஷாணம் கௌரீபாஷாணம்

இவைகளைப் பசுவின் பாலில் சுத்திசெய்து, வெண்பாகலிலைச் சாற்றிலரைத்து உளுந்தளவு மாத்திரைகளாகச் செய்து, பசுவின் மோர் காய்ச்சி இறுத்து அதில் கொடுக்கவும்.

உப்பில்லாக் கஞ்சி கொடுக்கவும். சுரம் எல்லாம் தீரும்.

சுரங்குசம் (வேறு)

வெள்ளைப்பாஷாணத்தைச் சிறுகச்சிறுக நறுக்கி எருக்கம்பாலில் 8 நாளூறப்போட்டு, 9-வது நாளெடுத்துப் பால்போகக் கழுவி வேப்பம் பட்டைச் சாற்றில்ரைத்துக் கடுகளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வெந்நீரில் கொடுக்கவும்.

பத்தியம் :— பால் கஞ்சி, சகல சுரமும் தீரும்.

திப்பிலியாதிச் சூரணம்

மாகதி பலமாரோம மதிகந்தா ளீசமிந்து
வாகுறு மூலங்கொத்த மல்லியையவி கிராம்பு
சோகுறு விளங்குஞ்சுக்கு துய்சீர மிசிவெட்பாலை
சேகில வங்கபன்னம் வெடியுப்புச் செவ்வியஞ்சாதி. (1)

சாதிப்பத் திரிமரீசஞ் சவுக்காரம் வகைபலங்கா
லீதிள வறுப்புச்சூரண மிதிற்பாதி சீனிகூட்டி
லோதிய மூலவாயு வுடல்விரை வாதம்வாயு
யாதிதிப் பிலாதிச்சூரணம் வெருகடி யருந்துவீரே. (2)

வாயுவுப்பிசமே சன்னி வாயுவோ டுடல்நடுக்க
மாயதோர் பித்தவாயு வக்கினிமந்தங் காசந்
தீயவாஞ் சிலேத்மவாயுத் தீர்ந்திடுந் தாதுவுண்டாம்
நாயகமான கும்ப நன்முனி யுரைத்தவாறே. (3)

(இ-ள்) திப்பிலி	6 பலம்,
ஓமம்	தாளீசபத்திரி
இந்துப்பு	திப்பிலி
கொத்துமல்லிவிதை	கடுகு

கிராம்பு	வாயுவிடங்கம்
சுக்கு	சீரகம்
சதகுப்பை	வெட்பாலையரிசி
இலவங்கப்பத்திரி	வெடியுப்பு
செவ்வியம்	சாதிக்காய்
சாதிப்பத்திரி	மிளகு
சவுக்காரம்	

இவைகள் வகைக்கு 1/4 பலம் எடுத்து எல்லாவற்றையும் இளவறுப்பாக வறுத்துக்கொண்டு சூரணித்து, வஸ்திரகாயஞ்செய்து, இதில் பாதியளவு சீனி சேர்த்து வைத்துக்கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவு சூரணம் எடுத்து, உட்கொள்ள மூல வாயு, உடலில் வியர்வை, வாதம், வாயு, உப்புசம், ஜன்னி, உடல் நடுக்கம், பித்தவாயு, அக்கினிமந்தம், காசம், சிலேத்மவாயு இவைகள் தீரும். தாதுபுஷ்டி உண்டாகும். இது அகஸ்தியர் முறையாகும்,

தீப்யாதிச் சூரணம்

செய்யதீப் பியமரீசஞ் சிவம் வகைப் பலமிரண்டும்
அய்யவி யிருசுகந்தந் திரிகடு சக்கிராங்கி
வைசவுக்காரம் வெந்தை வகைக்கொருபலம் வெங்காரந்
துய்யவிங் கிவையோரொன்று தொடியத்தம் நிசிகால்சொல்லும். (1)

சொல்லொரு கழஞ்சு சுட்ட துரிசுமற் றவுங்கிராதித்
தொல்லைசூ ரணமதாக்கி வெருகடித் தேனிலுண்ண
புல்லிய கிராணி குன்மம் பொருமலக் கினிமந்தித்த
வில்லையீ துண்மைதீப்பி யாதிச்சூ ரணமென் றேமே. (2)

(இ-ள்)	ஓமம்	மிளகு
	இந்துப்பு	
	இவைகள் வகைக்கு	பலம் 2.
	கடுகு	சீரகம்
	கருஞ்சீரகம்	சுக்கு
	மிளகு	திப்பிலி
	கடுகுரோகிணி	சவுக்காரம்
	வெந்தயம்	
	இவைகள் வகைக்கு	1 பலம்
	வெண்காரம்	பெருங்காயம்
	வகைக்கு	1/2 பலம்

மஞ்சள்	$\frac{1}{4}$ பலம்
சுட்டதுருசு	$1\frac{1}{4}$ வராகனெடை

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்ருக இடித்து, வஸ்திரகாயஞ் செய்துகொண்டு மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழப்பி உட்கொள்ளவும்

கிராணி, குன்மம், பொருமல், அக்கினி மந்தம் முதலான ரோகங்கள் தீரும்.

மகா அஸ்திகர்ணிச்சூரணம்

வரிவெருகங் கிழங்குசத வச்சிரக்கழஞ்சு
வல்லிவேர் கழஞ்சுசத மமுக்கிராவே
ரறுகழஞ்சு படியரத்தை கழஞ்சிரு பத்தைந்து
ஆகதிசோ டசங்கழஞ்சு சொண்டியதிற்பாதி
பெருமரத்தின் ரேலி மிளகு திரிசுகந்தம்
பேய்ப்புடல் திரிபலை தேவதாரங்
கரியசீ ரகஞ்சீரங் கடுகுரோணி
கரந்தைகொட்டைக் கரந்தைநில வேம்புநொச்சில் (1)

நொச்சிமலை தாங்கி மஞ்சள் திராட்டையோமம்
துவலுமீ சுரமூலி மாவிலங்கு
வச்சகவீ சஞ்சிறிய மூலஞ்சந்த
மாலாடா தொடைசிறுதேக்கு வகைகழஞ்சு
அச்சமில்கை யாண்பொடியெண் ணுன்கழஞ்சு
அமைந்தவதி சூரணந் தன்னிற் சீனிசதகழஞ்சு
இச்சைபெறவே கலந்து வெருகடி தேன்னெய்யி
லிசைந்தருந்த வாள்பலங்கண்டி திற்குறைவருந்தே (2)

அருந்ததி லேகாகீகந் துயவாகீக
மானதிரியாகீகஞ் சதுராகீகம்
பொருந்துதிதி யாகீக மாசாகீகம்
பொங்குவரு சாகீகம் விஷமசீதந்
திருந்து மத்திச் சுரஞ் சோப மனலமாந்தியஞ்
சிலேத்மசயங் காசம்பாண்டு விஸர்ப்பரோகம்
வருந்த குத மூலமுதற் றீருந்தாது
வர்த்தனையா மஸ்திகர்ணிச் சூரணமிதாமே (3)

(இ-ள்)	வெருகங்கிழங்கு	100 கழஞ்சு
	பிரண்டைவேர்	100 கழஞ்சு
	அமுக்கிராக் கிழங்கு	100 கழஞ்சு

சிற்றரத்தை	25 கழஞ்சு
திப்பிலி	16 ,,
சுக்கு	8 ,,
பெருமரப்பட்டை	பேய்புடல்
மிளகு	தேவதாரம்
ஜாதிக்காய்	கடுக்காய்த்தோல்
சாதிப்பத்திரி	நெல்லிவற்றல்
ஏலக்காய்	தான்றித்தோல்
கருஞ்சீரகம்	சீரகம்
கடுகு ரோகிணி	சிவகரந்தை
கொட்டைக் கரந்தை	நிலவேம்பு
நொச்சி	கருநொச்சி
வட்டத்திருப்பி	மஞ்சள்
திராக்ஷை	ஓமம்
முதியார் கூந்தல்	மாவலிங்கம்
வெட்பாலையரிசி	திப்பிலி
சந்தனத்தூள்	ஆடாதோடை
சிறுதேக்கு	

இவைகள் வகைக்கு 1 கழஞ்சு

கையாந்தகரைத்தூள் 32 கழஞ்சு

இவைகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு,

சீனி 100 கழஞ்சு

சேர்த்து ஒன்று கலந்து, மூவிரல் கொள்ளுமளவு சூரணத்துடன் தேன் அல்லது நெய் விட்டுக் குழைத்துத் தேகபலத்திற்குத் தக்கவாறு உட்கொள்ளவும்.

ஏகாகீகக்சுரம், துவய ஆகீகச்சுரம், திரியாகீகச்சுரம், சதுராகீகச் சுரம், 15 நாட்களுக்கு ஒருமுறை வருஞ்சுரம், மாதமொரு முறை வரும் சுரம், வருடாவருடம் குறிப்பிட்ட நாளில் ஏற்படும் சுரம், விஷம சுரம், குளிர் சுரம், அஸ்தி சுரம், சோபம் (வீக்கம்) அக்கினி மந்தம், கபகாசம், பாண்டு, புண்கள், ஆஸன மூலம், முதலான பல ரோகங்கள் நீங்கும். தாதுபுஷ்டி உண்டாகும். இதன் பெயர் "அஸ்திகர்ணிச்சூரண" மாகும்.

குறிப்பு : கழஞ்சு 1¼ வராகனெடை

ஆகீக ஜ்வரம் என்பது விட்டுவிட்டு வரும் மலேரியா சுரம் போன்றது.

தஞ்சை சரசுவதி மகாலின்
ரிக்வேதப் பிரிவிலுள்ள காகிதச் சுவடிகளின்
படத் தொகுப்புக் கதை

மகாலின் வடமொழிப் பகுதியில் ரிக்வேத சம்ஹிதை என்ற பெயரில் 311 காகிதச் சுவடிகள் உள்ளன. அவற்றுள்ள 85 சுவடிகளின் முகப்புப் பக்கத்தில் அழகிய வண்ண ஓவியங்கள் சிறிய அளவில் தீட்டப் பெற்றுள்ளன. 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தீட்டப்பட்ட இவ் ஓவியங்கள் இன்றும் வண்ணமழியாமல் புதுமையாய் விளங்குகின்றன. இந்தக் காகிதங்கள் வெளி நாடுகளிலிருந்தும் தருவிக்கப் பட்டுள்ளன. இந்தியாவில் தயாரான காகிதங்களையும் உபயோகப் படுத்தி தஞ்சை அரண்மனையில் இவ்வழியா வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. சில சுவடிகளின் முகப்பில் பென்சிலால் வரைபடம் ஆரம்பம் செய்து முடிக்கப் பெறுமலும் உள்ளது. இச்சுவடிகளின் கடைசி பக்கங்கள் பல்வேறு பூக்களின் படங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவை ஒன்றுபோல் மற்றொன்று இல்லாமல் ஒவ்வொன்றும் தனித் தன்மையுடையதாய் தோன்றுவது உற்று நோக்கற்பாலது. தாவரச்சத்துக்களால் தயாரிக்கப்பட்ட மையினால் விளைந்த இச்சித்திரங்கள் இன்றும் புதுமையோடு காட்சித் தருகின்றன.

இத்தொகுப்பிலுள்ள 85 சுவடிகளின் கதையை 25 தலைப்புகளில் தந்துள்ளேன். அவற்றின் விவரங்கள் அகரவரிசையில் பொருளடக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இக்கதைகள் திருவிளையாடல் புராணம், சிவபுராணம், ஹாலாஸ்ய மாகாத்மியம், சுதபுற மகாத்மியம், புண்டரீக மகாத்மியம் போன்ற நூல்களிலிருந்து திரட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கதைத் தொகுப்பிற்கும் ஒரு சிறு குறிப்பும், சுவடிகளின் எண்ணும், படத்தில் உள்ள விவரத்தையும் அப்படியே தந்துள்ளேன். படங்களை அச்சிட்டு, அதன் கீழ் விவரம் தந்து பதிப்பிப்பது சாலவும் நன்று. வருங்காலத்துக்கு இப்பணி ஓர் முன்னோடியாக அமையும் என்பது உறுதி இச்சுவடிகளின் ஒரு பகுதி நூலகத்தின் பார்வையாளர்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. இக்குறிப்பு வாசகர்கள் அனைவரையும் அக்காட்சியை தவறாது பார்க்கத்தூண்டுவதோடு, கலைவளர்த்த மாமன்னர்களின் பெருமையையும் அறிய ஓர் அரியவாய்ப்பென்றெண்ணி வெளியிட்டுள்ளேன். இந்த ஆய்வுத் தொகுப்பு வெளிவர அனுமதி வழங்கிய கௌரவ காரியதரிசி வித்துவான் திரு அ. வடிவேலனர் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகும்.

தமிழ் அன்னை ஏற்று அருள் புரிவாளாக.

தஞ்சாவூர்,
17—2—1977

ம. சீராளன், பி. ஏ.,
துணை நூலகர்.

பொருளடக்கம்

வரிசை எண்.		படங்களின் எண்ணிக்கை
1.	அருச்சுனனுக்கு பாசுபதமளித்தல்	6
2.	இரு கடம்பவன நிகழ்ச்சிகள்	2
3.	காயத்திரி வருணனை	2
4.	சரசுவதி உருவமைப்பு	1
	சிவத்தலங்களின் பெருமை	
5.	கார்த்த வீர்யார்ச்சுனன் மகா சிவலிங்கத்தை வழிபடல்	1
6.	காவிரிப்பூம்பட்டினத்தில் அகத்தியர் சிவனை வழிபடல்	1
7.	கைலாயத்தில் சிவலிங்கத்தை பாணாசுரன் வழிபடல்	1
8.	சீர்காழியில் திருஞானசம்பந்தர் சிவனை வழிபடல்	1
9.	தஞ்சையில் பெரியநாயகி மகாசிவலிங்கத்தை வழிபடல்	2
10.	திருவாரூரில் இந்திரன், நந்தி, வியாக்ரபாதர் முதலியோர் சிவனை வழிபடல்	1
11.	வைத்தீஸ்வரன் கோவிலில் இராவணன் மகாசிவலிங்கத்தை வழிபடல்	1
12.	சிவபெருமானின் பஞ்சமுக வருணனை	5
13.	சிவ வழிபாட்டு தியான சுலோக வருணனை	2
14.	சிவன், பார்வதி, கணபதி, முருகன், வள்ளி, தெய்வயானை முதலானோர் திருக்காட்சி	10
15.	சோதி மணிமுடிக் காணல்	3
16.	தக்கன் வேள்வியை அழித்தல்	8
17.	திரிபுர சம்ஹாரம்	1
18.	தில்லையின் திருக்காட்சி	6
19.	தேவாசுரர்கள் பாற்கடலைக் கடைதல்	3
20.	பகீரதனுக்காக பூலோகத்திற்குக் கங்கையைக் கொணர்தல்	4
21.	பிரதோஷ நடனம்	2
22.	மகாவிஷ்ணு கண்மலர்கொண்டு சிவனை வழிபடல்	2
23.	மதுரையில் திருமணம் (சுந்தரபாண்டியன்—தடாதகை)	14
24.	மார்கண்டேயனுக்கு வாழ்வளித்தல்	1
25.	ரிஷி பத்தினிகளின் கர்வத்தையழித்தல்	5

I. அருச்சுனனுக்கு பாசுபதமளித்தல்

[இது சிவபுராணத்திலுள்ள ஞான சம்ஹிதையில் வருகின்ற நிகழ்ச்சி யாகும். அர்ச்சுனன் இந்திரக்கீலத்தில் தவம் செய்துகொண்டிருக்கும்போது துரியோதனனுடைய தூண்டுதலால் மூகன் என்னும் அசுரன் பன்றி உரு வெடுத்து அர்ச்சுனனைத் தாக்குகிறன். அப்போது அர்ச்சுனனுடன் சிவனும் சேர்ந்து தாக்குகிறன். பன்றி இறந்துவிடுகிறது. அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுகிறன். இக்கதை ஆறு படத்தொகுப்புகளால் விளக்கப்பட்டுள்ளது]

பன்றியை அர்ச்சுனன் ஒருபுறமிருந்து தன் அம்பால் குறிவைக்கிறன். மறுபுறம் சாதாரண வேடர்களைப்போல் சிவன், பார்வதி, சிவகணங்கள் மூவர் நின்றுகொண்டிருக்கின்றனர். சிவன் தன் அம்பால் பன்றியைக் குறிவைக்கிறன். (D. 135/B. 2345-a)

சிவபிரான், அர்ச்சுனன் இவர்கள் எய்த அம்புகளினுல் தாக்குண்டு பன்றி இறந்துவிடுகிறது. (D. 138/B. 2345-b)

சிவன், அர்ச்சுனன் இவர்களிடையே யார் எய்த அம்பினுல் பன்றி இறந்தது என்ற வாதம் தொடர்ந்து வில் யுத்தம் செய்கிறர்கள். இருவரும் சண்டைசெய்யும் காட்சியும், அருகில் வேட்டுவச்சி வேடத்தில் நிற்கும் பார்வதி, நான்கு சிவகணங்கள் ஆகியோரது காட்சியும் உருக்கமாகத் தீட்டப்பட்டுள்ளது. (D /141 B 2345-c)

விற்போரில் சிவனை வெல்லமுடியாத அர்ச்சுனன் தன் காண்டீவத்தால் வேடன் உருவத்தில் நிற்கும் சிவபெருமான் தலையைத் தாக்குகிறன். தலையை அணுகியதும் காண்டீவம் இரண்டு துண்டாகிவிடுகிறது. மறுபுறம் நின்று பார்வதியும் சிவகணங்களும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். (D. 144/B. 2345-d)

அர்ச்சுனன் தன் காண்டீவத்தாலும் தாக்க முடியாதுபோகவே மன முடைந்து சிவபிரானைத் தன் பக்கபலமாக உதவவேண்டி சிவலிங்க பூஜை செய்கிறன். அர்ச்சுனனுல் பூசைசெய்யும் வில்வம் லிங்கத்திற்கு மேலாகச் சிவன் தலையை அடைகிறது. மறுபுறம் பார்வதியும் சிவகணங்களும் நிற்கின் றனர். (D. 147/B. 2345-e)

அர்ச்சுனனுடைய பக்தியை மெச்சிய சிவபெருமான் தன்னை இன்னர் என்று காட்டிக்கொள்வதற்காகத் தெய்வீக உருவத்தில் பார்வதியுடன் விருடப வாகனத்தில் தோன்றுகிறர். அர்ச்சுனனுக்கு பாசுபதாஸ்திரத்தை நாரதர், தும்புரு, சிவகணங்கள் ஆகியோர் முன்னிலையில் அளிக்கிறர். (D. 150/B. 2345-f)

2. கடம்பவன நிகழ்ச்சி (1)

இந்திரன் விருத்திரன் என்னும் அரக்கனைக் கொன்று அழிக்கிறான். ஆனாலும் பிரம்மகத்தி தோஷம் இந்திரனைத் தொடர்கிறது. தடாகத்திலுள்ள தாமரைத்தண்டில் தஞ்சம் புகுகிறான். அப்போதும் பிரம்மகத்தி அவனை விடுவதாக இல்லை. பிரகஸ்பதி கடம்பவனத்தில் உறைகின்ற சிவலிங்கப் பெருமானை நோக்கித் தவமியற்றுமாறு அறிவுரை கூறுகிறார். இந்திரனும் கடம்பவனம் சென்று சிவனை வழிபடுகிறான். பிரம்மகத்தி தோஷம் அவனைவிட்டு விலகுகிறது. (D. 16/B. 2349–e)

கடம்பவன நிகழ்ச்சி (2)

துருவாச முனிவர் கைலாசத்திலிருந்து திரும்பி வரும்போது சொர்க்க லோகத்தில் இந்திரனைச் சந்திக்கிறார். இந்திரனுக்குத் தாமரை மலர் ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுக்கிறார். இந்திரன் அதைப்பெற்று அலட்சியமாகத் தன் ஐராவதத்தின்மேல் வைத்துவிடுகிறான். ஐராவதம் அந்த மலரைக் கீழே தள்ளி தன் பாதத்தால் மிதித்துவிடுகிறது. ஆகையால் ஐராவதம் மற்ற யானைகளைப்போல் மூர்க்கத்தனமாக பூலோகத்தில் திரியுமாறு சாபம் பெற்றுவிடுகிறது. இந்தச் சாபத்திலிருந்து விமோசனம் பெறுவதற்கு கடம்பவனத்திலுள்ள சிவலிங்க மூர்த்தியை வழிபட்டால் தீரும் என்று உணர்ந்து பின் மதுரைக் கடம்பவன நாதரை பூஜிக்கிறது. பின் ஐராவதம் தன் பழைய உருவம் எய்துகிறது. ஐராவதம் தூய வெண்ணிறத்தால் தீட்டப்பட்டு, பின் பூலோகத்திற்கு வந்த போது கருமையாகவும், சாபவிமோசனம் பெற்றபின் மீண்டும் அதே வெண்மை நிறம் அடைவதையும் படத்தில் காணலாம். (D. 19/B. 2349–f)

3. காயத்ரி வருணனை

காயத்ரி தேவியை இரண்டு ராஜரிஷிகளும், இரண்டு மன்னர்களும் மறுபுறம் நின்று வழிபடுகிறார்கள். காயத்ரி தேவியின் ஐந்து முகங்களும் ஐந்து வண்ணங்களால் தீட்டப்பட்டுள்ளன. இவ்வைந்து முகங்களும் முத்துப்போன்ற வெண்மை, பவளம்போல் சிவப்பு, தங்கம்போன்ற மஞ்சள், ஆகாசம்போன்ற நீலம் முதலிய நிறங்களாலும், உடல் தூவெண்மை நிறத்தாலும் தியான சுலோகத்திற்கொப்ப வரையப்பட்டுள்ளது. (D. 9/B. 2341–c)

மற்றொரு படத்தில் காயத்ரி தேவியின் உடல் சிகப்பு நிறத்தால் தீட்டப்பட்டு, ஆறு பக்தர்கள் வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். (D. 81/D. 2343-d)

4. சரசுவதி உருவமைப்பு

கலைமகள் வீணை மீட்டிக்கொண்டு அமர்ந்திருக்கிறாள். மறுபுறம் நான்கு மன்னர்கள் தொழுதுகொண்டிருக்கின்றனர். (D. 6/B. 2341–b)

சிவத்தலங்களின் பெருமை

[சிவ வழிபாடுசெய்து முக்தி கண்டோர் பலர். எங்கும் நிறைந்துள்ள ஈசன் பல இடங்களில் கோவில் கொண்டுள்ளார். பூலோக மாந்தர்கள் சைவ சமயக்குரவர்கள் முதலானோர் வழிபட்டு இன்புற்ற இத்தலங்களுக்கு அகத்தியர் இராவணன்போன்ற பெரியவர்களும் எழுந்தருளி வழிபட்டுள்ளனர். ஆதலால் அத்தலங்களுக்கு மகத்துவம் பெருகலாயிற்று. அத்தகு ஏழு தலங்களி சிவலிங்கத்தை அவர்கள் வழிபட்ட சித்திர விவரம் கீழே தரப்பட்டுள்ளது.]

5. கார்த்தவீர்யார்ச்சுனன் மகாசிவலிங்கத்தை வழிபடல்

கார்த்தவீர்யார்ச்சுனன் என்னும் அரசன் மகாசிவலிங்கத்தை தன் பரிவாரங்களுடன் வணங்குகிறான். கார்த்தவீர்யார்ச்சுனனுக்குப் பல கரங்கள் உண்டென்னும் ஐதீகத்திற்கிணங்க சித்திரம் தீட்டப்பட்டுள்ளது. (களவுபோன பொருட்களும் காணமல்போன பொருட்களும் கிடைப்பதற்காக இவரை வழிபடுவது வழக்கம்). (D. 287/B. 2348-d)

6. காவிரிப்பூம்பட்டினத்தில் அகத்தியர் சிவனை வழிபடல்

காவிரி கடலோடு சங்கமம் ஆகும் இடமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் எழுந்தருளியிருப்பவர் அகத்தீஸ்வரர். இங்குள்ள மகாசிவலிங்கத்தை அகத்தியர் மற்றும் முனிவர்கள் கூப்பிய கரங்களோடு புடைசூழ வழிபடுகிறார்கள். (D 292/B. 2348-e)

7. கைலாயத்தில் சிவலிங்கத்தை பாணசுரன் வழிபடல்

கைலாச பர்வதத்தில் சிவபெருமான் பார்வதி தேவியைத் தன் மடியில் வைத்துக்கொண்டு அமர்ந்திருக்கிறார். இராவணன் கைலாச பர்வதத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறான். ஒருபுறம் நின்று பாணசுரன் சிவனை வழிபடுகிறான். மறுபுறம் சிவபக்தர்களான குதிரைமுக முனிவரும், திரிபாதரும் வியாக்ரபாதரும் பதஞ்சலியும் வழிபடுகிறார்கள். (D. 299/B. 2348-g)

8. சீர்காழியில் திருஞானசம்பந்தர் சிவனை வழிபடல்

ஞானப்பாலுண்டு திளைத்தவர் திருஞானசம்பந்தர். சீர்காழியில் தோணியப்பராக எழுந்தருளியிருக்கும் மகாசிவலிங்கத்தைப் பிள்ளைப்பிராயத்தில் வழிபடுகிறார். மறுபுறம் நான்கு மகரிஷிகள் கூப்பிய கரங்களோடு வழிபடுகிறார்கள். (D. 295/B. 2348)

9. தஞ்சையில் பெரியநாயகி மகாசிவலிங்கத்தை வழிபடல்

தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் வீற்றிருக்கும் பிரகதீஸ்வரரை பிருகந்நாயகி தூப தீபங்களால் வழிபாடு செய்கிறார். அவருடன் கூட தோழி

யர்கள் வந்திருந்து ஆழ்ந்த பக்தியுடன் கரங்கூப்பி நிற்கின்றனர். (D. 211/B. 2347-b 1)

தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மகாசிவ லிங்கத்தை பிருகந்நாயகி தேவி அவர்கள் தழுவிக்கொள்ளும் காட்சி விளக்கப் பட்டுள்ளது. தோழியர்கள் மறுபுறம் நிற்கின்றனர். (D. 234/B. 2347-d)

10. திருவாரூரில் இந்திரன், நந்தி, வியாக்ரபாதர் முதலியோர் சிவனை வழிபடல்

திருவாரூர் தேர் அழகு; ஆரூரில் பிறக்க முக்தி என்றெல்லாம் புகழ்ந்து பேசப்படுவது திருவாரூர். அவ்வாலயத்தில் வீற்றிருக்கும் தியாகராஜருடன் கூடிய அம்மையை இந்திரன், நந்தி, வியாக்ரபாதர் மற்றும் முனிவர்கள் அறுவர் வழிபடுகிறார்கள். (D. 227/B, 2347-b 2)

11. வைத்தீஸ்வரன் கோவிலில் இராவணன் மகாசிவலிங்கத்தை வழிபடல்

தஞ்சை மாவட்டத்திலுள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் எழுந்தருளி யிருக்கும் மகாசிவலிங்கம் வைத்தீஸ்வரர் எனப்படுவர். இங்கு இராவணன் வழிபட்டு முக்தி பெற்றான் என்பர். இத்தலத்தில் அவன் மகாதேவரை மகிழ் விக்கும் பொருட்டு தன் தலைகளை வெட்டி யாகம் செய்தான். ஒவ்வொன்றாக ஒன்பது தலைகளை வெட்டி அர்ப்பணித்துவிட்டான். கடைசியாகப் பத்தாவது தலையை வெட்டப்போகும்போது அவனைத்தடுத்தாட்கொள்கிறார் சிவபெருமான். தெய்வீக வைத்தியராக வந்து ஒன்பது தலைகளையும் மீண்டும் இணைத்து விடுகிறார். ஆகையால் இங்கு வீற்றிருக்கும் இறையவருக்கு வைத்தீஸ்வரர் என்று பெயர் வந்தது.

மற்ற அரக்கர்கள் புடைசூழ இராவணன் பத்து தலைகளுடன் மகா சிவலிங்கத்தை வழிபடுகிறான். இங்கு தீட்டப்பட்டுள்ள அரக்கர்களின் மூக்கு மேல்நோக்கி வளைந்து அரிவாள்போன்று காட்சியளிக்கிறது. (D 275/B 2348-c)

12. சிவபெருமானின் பஞ்சமுக வருணனை

சிவபெருமானுடைய சத்யோஜாத, வாமதேவ, அகோர, தத்புருஷ, ஈசான ஆகிய பஞ்சமுக வருணனைகள் கீழ்க்கண்ட ஐந்து சித்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

சிவபிரானுடைய இவ்வுருவ வருணனைகள் சாக்தப்ரமோதம் என்னும் மந்திர சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோலவும், சங்கராச்சாரியர்

அருளிய பிரபஞ்சசாரத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோலவும் தீட்டப் பட்டுள்ளன.)

சிவன் நான்கு தூய வெண்முகங்களும் நான்கு கைகளும் பெற்று பார்வதிதேவி அருகில் நின்றுகொண்டிருக்க, மறுபுறம் நான்கு முனிவர்கள் கூப்பிய கரங்களை தலைமேல்கொண்டு நிற்பதைப் படத்தில் காணலாம். (D. 166/B. 2346-a)

சிவபெருமானுடைய வாமதேவ உருவம் நான்கு சிவந்த முகங்களும், நான்கு கைகளும், சக்திதேவி அருகிலிருத்தலும், மறுபுறம் நான்கு அடியார்கள் கூப்பிய கரங்களுடன் நிற்பதுபோலவும் தீட்டப்பட்டுள்ளது. (D. 169/B. 2346-b)

சிவபிரான் நான்கு கருநீல முகங்களுடன் எட்டு கைகளும், உமையாள் அருகில் நிற்க, மறுபுறம் நான்கு அடியார்கள் கைத்தொழும் காட்சியோடு அகோரமூர்த்தி வடிவத்தில் தீட்டப்பட்டுள்ளது. (D. 172 / B. 2346 c)

தத்புருஷ உருவத்தில் பொன்மயமாக நான்கு முகங்களும், நான்கு கைகளும் பெற்று பார்வதிதேவி அருகில் நிற்பதுபோல் காட்சியளிக்கிறார். மறுபுறம் நான்கு முடிமன்னர்கள் கைகூப்பி நிற்கின்றனர். (D. 175 / B. 2346-d)

முத்துப்போன்ற வெண்மையான ஐந்து முகங்களையும் பத்து கரங்களையும் பெற்று ஈசான உருவத்தில் சக்திதேவி அருகிருக்கும் காட்சியளிக்கிறார் சிவபெருமான். மறுபுறம் நான்கு மன்னர்கள் கூப்பிய கரங்களுடன் நிற்கின்றனர். (D. 180 / B. 2346-e)

13. சிவ வழிபாட்டு தியான சுலோக வருணனை

சம்சார சாகரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவனும் பரப்பிரம்மத்தை வழிபடவேண்டும். அவர்கள் சுற்றமுடன் சூழ்ந்திருக்க எப்படி சிவனை வழிபடுதல்வேண்டும் என்பதை சக்திபஞ்சாக்ஷரியிலுள்ள ஒரு த்யான சுலோகம் விவரிக்கிறது. அந்த விபரப்படி கீழ்க்கண்ட சித்திரம் தீட்டப் பட்டுள்ளது.

சிவபெருமான் சக்திதேவியை மடியில் அமர்த்திக்கொண்டு தாமரை மலரில் கற்பக மரத்தின் கீழ் அமர்ந்திருக்கிறார். விநாயகக் கடவுளும் முருகப்பெருமானும் இருபுறமும் நிற்கின்றனர். மகரிஷிகளும் மகேசனை வழிபடுகின்றனர். (D. 153 / B. 2345-g)

தனித்திருந்து வாழ்பவர்கள் தியானம் செய்யவேண்டிய சுலோகமும் பஞ்சாக்ஷரியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப சிவபெருமான்

பார்வதியின்றி தனியாக தாமரைமலரில் வீற்றிருக்கிறூர். விநாயகர், முருகன் ஒருவரும் அருகில் இல்லே. ஒருபுறம் மன்னர்களும், மறுபுறம் பார்வதி, மற்றும் மூன்று சிவாச்சாரியர்கள் நிற்பதுபோல் இக்காட்சி தீட்டப் பட்டுள்ளது. (D. 157 / B. 2345-h)

14. சிவன், பார்வதி, கணபதி, முருகன், வள்ளி, தெய்வயானே முதலானேர் திருக்காட்சி

விநாயகக் கடவுள் அமர்ந்திருக்கும் காட்சி சிவப்பு நிறத்தில் தீட்டப் பட்டுள்ளது. வலப்புறம் நான்கு முனிவர்கள் கரங்கூப்பி வழிபடுகின்றனர். (D. 1 / B. 2341-a)

சுந்தரேசுரவரும் மீனுட்சி அம்மையும் நடுவில் வீற்றிருக்கின்றனர். விநாயகப் பெருமான் இடபுறம் நின்றுகொண்டிருக்கிறூர். வலதுபுறம் முருகக் கடவுள் வள்ளி தெய்வயானேயுடன் நின்றுகொண்டிருக்கிறூர். (D. 2 / B. 2349-a)

பரமசிவன் பார்வதி காளே வாகனத்தில் சிவபூதகணங்கள் சூழ அமர்ந்துள்ளார். இடப்புறம் விநாயகர் மூஷிக வாகனத்திலும், வலப்புறம் சுப்ரமணியர் மயில் வாகனத்திலும் அமர்ந்துள்ளார்கள். (D. 7 / B. 2349-b)

அக்னி முன்னிலேயில் பார்வதி பரமேசுவரன் திருமணம் நடைபெறு கிறது. அப்போது பார்வதியின் பக்கத்திலிருந்து ஹிமவானும் மேனுவும் கரம் பிடித்த தம்பதிகளுக்குத் தாரைவார்க்கின்றனர். சிவபெருமான் பக்கத்தில் புரோகிதரும், விஷ்ணு, அக்னி, பிரம்மா, இந்திரனும் நிற்கின்றனர். பார்வதியின் பின்புறம் புரோகிதரும், தேவர்களும், ரிஷிகளும், மற்றும் ஹிமவான் அரண்மனேத் தோழியர்களும் குழுமியிருக்கின்றனர். D. 10 / B 2349-c)

சிவபெருமானுக்கும் பார்வதிதேவிக்கும் திருமணம் நடைபெறுகிறது. இருவரும் கரம் பிடித்தலும், அகத்தியர் அருகில் நிற்றலும், புரோகிதர், தோழியர்கள், மணவிழா காணும் மக்கள் குழுமியிருத்தலும் சித்திரிக்கப் பட்டுள்ளது. இக்காட்சி பார்வதி பரமேசுவரன் திருமணத்தின் மற்றெரு வருணனேயாகும். (D. 194 / B. 2346-h)

ஆண் பாதி பெண் பாதியாக ஒரு உருவத்தில் அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி கொடுக்கும் சிவபெருமானே குதிரைமுகத் தும்புருவும் நாரதமுனிவரும் இருபுறமும் நின்று இசை பாடிக்கொண்டிருக்கின்றனர். மறுபுறம் ஐந்து மகரிஷிகள் கரங்கூப்பி வழிபட்டுக்கொண்டுள்ளனர். (D. 12 / B. 2341-d)

அரியும் சிவனும் ஒன்று என்னும் தத்துவத்திற்கிணங்க சிவன் விஷ்ணு இவர்களின் பாகங்களைக்கொண்ட சங்கர நாராயணராகக் காட்சி தருகிறார். அருகில் சக்தியும் இலக்குமியும் இணைந்து ஒரு உருவமாகத் திகழ்கின்றனர். (D. 183/B. 2346-f)

சிவபெருமானும் சக்திதேவியும் ஒரு புறம் நிற்கின்றனர். மறுபுறம் விநாயகரும், வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணியரும் காட்சிதருகிறார். (D. 186/B. 2346-g)

பார்வதி பரமேசுவரர் காளைவாகனத்தில் அமர்ந்து தரும் காட்சி ஒரு புறமும், விநாயகரும், சுப்ரமணியரும் நிற்கும் காட்சி மறுபுறமும் தீட்டப் பட்டுள்ளது. (D. 188/B. 2346-g)

சிவபெருமான் பார்வதி தேவியைத் தன் மடியில் வைத்துக்கொண்டு அமர்ந்துள்ளார். ஒரு புறம் சுப்ரமணியர், அக்னி, இந்திரன் நின்று கொண்டிருக்கின்றனர். மறுபுறம் விநாயகர், விஷ்ணு, பிரம்மா நிற்கின்றனர். (D. 303/B. 2348-h)

15. சோதி மணிமுடிக் காணல்

சிவபுராணத்தில் வருகின்ற நிகழ்ச்சி ஒன்று மூன்று முகப்புகளில் தீட்டப்பட்டுள்ளது.

ஒருமுறை பிரம்மா தூங்கிக் கொண்டிருந்த மகாவிஷ்ணுவை பிள்ளாய்! எழுந்திரு என்று எழுப்பினார். அதனால் வெகுண்டு, விஷ்ணுவுக்கும் பிரம்மாவிற்கும் சண்டை வந்து விட்டது. இருவரும் இந்த அசம்பாவிதத்திற்கு வருந்தி பரமசிவனைத்தீர்த்து வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றனர். அப்போது சிவபெருமான் ஜோதிலிங்கமாகத்தோன்றி ஆகாசம் பூமி ஒன்றுபட நிற்கிறார். இந்த லிங்கத்தின் அடிமுடி கண்டவர் தான் பெரியவர் என்றும், தம்முள் சண்டை தவிர்ப்பதற்கு வழி என்றும் தீர்மானிக்கின்றனர். (D. 118/B. 2344-f)

விஷ்ணு பன்றி அவதாரமெடுத்து ஜோதி லிங்கத்தின் அடியைக் காணமுடியாமல் திரும்பி விடுகிறார். பிரம்மா அன்னப்பட்சியின் உருவம் பூண்டு ஜோதி மணிமுடியைக் காணப்புறப்படுகிறார். அன்னம் தேவ லோகத்தை எட்டியவுடன் ஜோதிலிங்கத்தின் தலையிலிருந்து நழுவிய தாழம்பூவைச்சந்திக்கின்றது. அன்னம் தாழம்பூவைத் தனக்காக ஒரு பொய் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறது. அதாவது தான் ஜோதி லிங்கத்தின் முடியைக் கண்டதாகவும், அதற்கு சாட்சியாகவும் கூறச் சொல்லிற்று. (D. 121/B. 2344-g)

தாழம்பூவைக் கையில் கொண்டுவந்த பிரம்மா, மகாவிஷ்ணுவிடம் வந்து தான் முடியைக்கண்டதாகவும்; போட்டியில் தான் வெற்றி கண்டதாகவும் கூறுகிறுர்- பிரம்மாவினுடைய தகுதியற்ற நடத்தையைக் கண்டு வெகுண்ட சிவபெருமான் அதிசயிக்கத் தக்க உருவமாக இருவர் முன்னிலையிலும் தோன்றினுர். விஷ்ணுவை மெச்சினுர். ஆதலால் தன்னேடு சரியாக எல்லாத் தலங்களிலும் வழிபடு மூர்த்தியாக கோவில் கொண்டு விளங்கவும் ஒப்புகிறுர். பிரம்மாவினுடைய இழி செயலால் அவரைக் கோவில்களில் வழிபட மாட்டார்கள் என்றும் தாழம்பூவை பூஜை மலராக உபயோகிக்க மாட்டார்கள் என்றும் வரமளித்து விடுகிறுர். பிரம்மா ஜோதி லிங்கத்தின் முன் தலைவணங்கி நிற்பதும், மகாவிஷ்ணு கோவில் கொண்டிருப்பதும் படத்தில் காணலாம். (D. 125/D. 2344-h)

16. தக்கன் வேள்வியை அழித்தல்

தக்கன் வேள்வியை அழித்தல் என்னும் இந்நிகழ்ச்சி சிவபுராணத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ததீசி முனிவரும் மற்ற முனிவர்களும் தக்கப்ரஜாபதி நடத்தவிருக்கும் வேள்விக்கு சிவபெருமானையும் அழைக்குமாறு அறிவுரை கூறுகிறுர்கள். விஷ்ணு, அக்னி, மற்ற கடவுள்களும் அருகில் அமர்ந்துள்ளார்கள். (D. 34/B. 2342-a)

தாக்ஷாயணி (பார்வதி தேவி) தக்கப் பிரஜாபதிமுன் தோன்றி சிவபெருமானை அழைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் தக்கன் அதை மறுத்துவிட்டு அமர்ந்திருக்கிறுர். (D. 37/B. 2342-b)

தக்கன் யாகசாலைக்கு தன்னைமட்டும் அழைக்காத காரணத்தால் சிவன் வெகுண்டு வீரபத்திரன் சொரூபமாக பூதகணங்கள் பின்தொடர வருகிறுர். தக்கன் யாகசாலையில் அமர்ந்திருக்கிறுர். மறுபுறம் விஷ்ணு, அக்னி முதலானவர்கள் நின்று கொண்டிருக்கின்றனர். (D. 40/B. 2342-c)

வீரபத்ரன் தக்கன் தலையை வெட்டி யாக குண்டத்தில் போட்டு விடுகிருன். அங்கு பிரம்மா இரண்டு குதிரைகள் பூட்டிய தேரைக் கொண்டு வந்து நிறுத்திக்கொண்டிருக்கிறுர். (D. 49/B. 2342-d)

தேரில் வீரபத்திரன் அமர்ந்து எதிரேயுள்ள மகாவிஷ்ணுவுடன் யாகசாலையில் சரமாரியாக அம்பு தொடுத்து சண்டையிட்டுக் கொண்டுள்ளார். (D. 52/B. 2342-c)

தேரோட்டியாக வந்த பிரம்மா குறுக்கிட்டு சமரசம் செய்கிறுர். விஷ்ணு, மற்ற கடவுள்களும் திருப்தி செய்யும் வகையில் சிவபெருமானைக் குறித்து வீரபத்திர ஸ்துதி செய்கிறுர்கள். (D. 55/B. 2342-f)

மகாவிஷ்ணுவினுடைய வேண்டுதலுக்கிணங்கி சிவபெருமான் பார்வதி தேவியுடன் காளைவாகனத்தில் காட்சி கொடுக்கிறார். தக்கனுடைய தலைக்குப்பதிலாக ஆட்டுத்தலை வைக்கப்படுகிறது. ஆட்டுத்தலையையுடைய தக்கனும், அவன் மனைவி, விஷ்ணு, அக்னி மற்ற தெய்வங்களும் பார்வதி பரமேசுவரனைத் துதிக்கிறார்கள். (D. 58/B. 2342-g)

சிவபெருமான் வீரபத்திரனாக தோற்றம்பூண்டு நாய் வாகனத்தில் காட்சியளிக்கிறார். நாரதரும், குதிரைமுகத் தும்புருவும் சிவபெருமானை வழுத்துகிறார்கள். (D 61/B. 2342-h)

17. திரிபுர சம்ஹாரம்

சிவபெருமானுக்கும் மூன்று அசுரர்களுக்கும் யுத்தம் நடைபெற்று; அவர்களைக்கொன்று, அவர்களுடைய புரங்களையும் எரித்ததால் திரிபுர மெரித்த விரிசடைக்கடவுள் என்று போற்றப்படுவர் சிவபெருமான். இவரைத் திரிபுர சம்ஹார மூர்த்தியாக வழிபடுகின்றனர். இம்மூன்று அசுரர்கள் மிகவும் பலம் வாய்ந்தவர்கள். தங்க நகரத்திற்கதிபதி மாயன் என்பவன்; வெள்ளி நகரத்திற்கதிபதி வித்யுத் பிரதாபன்; இரும்பு நகரத்திற் கதிபதி தாரகன். இவர்களை யுத்தத்தில் வெல்வதற்கு சிவபெருமானுக்கு சூரியன், சந்திரன் முதலானவர்கள் உதவுகின்றனர். இக்காட்சியின் வர்ணனை அழகொழுகத் தீட்டப்பட்டுள்ளது மிகவும் போற்றுதற்குரியது.

தேரில் சிவபெருமான் உட்கார்ந்து வில்லில் அம்பைத்தொடுத்து எதிர்புறம் நின்று யுத்தம் செய்ய வரும் மூன்று அசுரர்களின்மேல் குறி வைக்கிறார். இந்த யுத்தத்தில் பூமி தேராகவும் சூரிய, சந்திரர்கள் தேர்ச்சக்கரங்களாகவும், நான்கு வேதங்களும் நான்கு குதிரைகளாகவும் நான்முகக்கடவுள் பிரம்மா தேர்ப்பாகனாகவும், மேருமலை வில்லாக வளைக்கப்பட்டும், ஆதிசேஷன் என்னும் பாம்பு வில்லின் நாணாகவும், மகா விஷ்ணு அம்பாகவும், அம்பின் நுனி அக்னியாகவும் சிவனுக்குத்துணை செய்யும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. எதிர்புறம் மூன்று அசுரர்களும் சிவபிரானைத்தாக்குவதற்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

இத்திரிபுர சம்ஹார நிகழ்ச்சி எண்ணியெண்ணி இன்புற வேண்டிய தொன்றாகும். (D. 15/B. 2341-c)

18. தில்லையின் திருக்காட்சி

சிவபெருமான் திருநடனம் ஆடிக்களித்த ஸ்தலம் தில்லை. இதைப் பொன்னம்பலம் என்றும் கூறுவர். இங்கு அவர் பாதந்தூக்கி ஆடும்

King Amar Singh, the uncle of Serfoji, who was in power at that time treated the young Serfoji and the Ranees very badly. Serfoji had to face many problems in his personel life and also in the political field. With the help of Rev. Fr. Schwartz he gained the good will of the East India Company rulers. So he was removed from Tanjore and sent to Madras for nearly five years. During his stay at Madras under the superintendance of Rev. W. Fr. Geriche of the Lutheran Mission received good education. On October 1798 King Serfoji ascended the throne. He managed the situation peacefully. As a result he was able to develop this Literary Treasure House at Tanjore. He served as a connoisseur.

Several scholars from foreign nations visited the court of Serfoji and have praised his talents and administration. Bishop Heber calls him a deadly shot. Lord Valentia extols his good nature and polished manner. Further he points out that he was a typical Eastern Raja in his patronage of music and other fine arts.

---

* A Manual of the District of Tanjore by Venkasamy Rao.

* Serfoji had great regard and admiration for Sri Swathi Thirunal Maharaj of Travancore, an eminent scholar, linguistic and musician like himself. Being contemporaries they have maintained cordial relationship and exchanged scholars and musicians In token of his appreciation Maharaja Swathi Thirunal of Travancore had sent copies of his famous works bound in superior velvet and gold as present to Serfoji. Thiagaraja the famous South Indian Saint, Seer and Musician lived during his time and Serfoji loved and respected him. Maratha rulers had enthusiastic patrons of literature and art. Serfoji did the greatest and lasting service not only to his race but to all India when he embarked on a gigantic plan of increasing the wonderfulness of the Library. He spent his valuable time thus in the midst of oid mighty minds as per the words of Poet Robert Southey.

"My days among the Dead are past;
Around me I behold,
Where'ver these casual eyes are cast,
The mighty minds of old"

He took much interest and spent most of his revenue for building up an up-to-date Library in those days. For example the "Commentaries on the Life and Reign of Charles the First, King of England" By I. D' Israeli. Vol. I. has been published in London in the year 1828. Serfoji has acquired it in 1829. His autograph in all most all printed books and marginal comments in those collections are the best evidence for his erudite scholarship.

He went a pilgrimage to Benares in the year 1820 and returned to Tanjore in 1822. During this trip he bought very valuable manuscripts that were for sale, in addition to what he possessed already and ordered a host of pandits to fair copy the others that were too precious and could not bought Thus largest single collection added to the library was during his time under his fostering care. As a fitting tribute to the great pattern and scholar the library has been named as the Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library.

---

* A Report on the Modi Manuscripts in the Sarasvati Mahal Library, Tanjore by Dr. R. Shelvankar.

*The following Pandits and Poets were patronized by King Serfoji in his court :—

1. Kottaiyoor Sivakkolunthu Desikar
2. Govindachari Uthke
3. Hariswami Ghatge
4. Tammacharya
5. Kuppachari
6. Kavi Raghoba
7. Narasimha Sastri
8. Krishnaswami
9. Krishna Sastri
10. Subba Dikshita
11. Chakravarthi
12. Srinivasa
13. Venkatesa Sastri
14. Krishnachar
15. Virubhakchi Kavi
16. Ranganatha Kavi
17. Mukunthaswami
18. Rajagopala Kavi

He respected all religions and customs. He was the sincere worshipper of Lord Siva. The vibhuti tilaka in his forehead reveals his pious nature. He made the gift of a silver elephant and bull to Lord Brahadeeswara temple. He performed the Kumbhabhisheka of the big temple. Further he endowed several grants to Mosques and Churches.

He established lot of charities in Tamil Nadu and also in foreign countries. For example a title page of the book published in London under the name of Serfoji Maharaja's Charities is given below :—

†ORIENTAL TRANSLATION FUND
LONDON
INSTITUTED 1828
UNDER THE PATRONAGE
OF
HIS MOST GRACIOUS MAJESTY
THIS COPY
OF
THE TRANSLATION OF IBN BATUTA'S TRAVELS,
WAS PRINTED FOR
HIS HIGHNESS
THE RAJAH OF TANJORE.

---

* The Journal of the T. M. S. S. M. Library Vol. XV; No. 2.

† The Travels of Ibn Batuta by Rev. Samuel Lee, 1829.

There is one more evidence to be recognised by us in this context. In the year 1827, the London Royal Asiatic Society had published the booklet "The list of the Members of Royal Asiatic Society of Great Britain and Ireland. In this Society only four kings had been Honorary Members. They are as follows :—

1. His Royal Highness the Duke Oeorleans
2. His Majesty the King of Oude.
3. His Royal Highness Abhas Mirza, Prince, Royal of Persia.
4. His Highness the Rajah of Tanjore.

It is a pride to note that our Highness had the opportunity to hold the High position in those days along with the foreigners

The manuscripts and books collected on several languages in this Library is our national wealth. It becomes the duty of one and all to preserve it properly for the use of future generations. Let the glory of our land will shower light all over the world.

சரபோஜி மன்னரும் கல்வெட்டுக்களும்

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
யொன்றுநூ றுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
வங்ஙனே யழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே!

என்று கருவூர்த் தேவரால் புகழப்பெற்ற பெரிய கோயிலைக் கட்டிப் புகழ் பெற்றான் "**திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்...**" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியால் புகழ்பெற்ற இராசராசச்சோழன். அவன் பின்னர், பல சோழ மன்னர்கள் தஞ்சையை ஆண்டனர்.

சோமேசன் செயலால், சோழர் ஆட்சி மாறி, நாரணனருளால் நாயக்கர் ஆட்சி தோன்றியது. "**ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹாமண்டலேஸ்வர ராஜாதிராஜ பரமேஸ்வர ஸ்ரீ வீரப்பிரதாப, ஸ்ரீ வீர அச்சுததேவராய மஹாராயர்...**" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியால் புகழ்பெற்ற நாயக்க மன்னர்கள், பல அரிய செயல்களைச் செய்து தம் பெயரையும் புகழையும் நிலைநாட்டினர்.

நாயகன் செயலால், நாயக்கர் ஆட்சி மாறி, மகேசனருளால், மராத்தியர் ஆட்சி உதயமாயிற்று. அன்னை பவானியின் அருள் பெற்ற '**ஆதி சிவாஜி**' மன்னர்தம் உடன் பிறந்தாரான "**ஏகோஜி ராஜா**" எனப்படும் வெங்காஜி மாமன்னர் கி.பி. 1676ல் தஞ்சையில் அரியணையேறினார். அவர் தம வழிவழி அரசு நடந்து கி. பி. 1798ல சத்திரபதி 'சரபேந்திர பூபாலர்' என்று வழங்கப்பெறும் "**சரபோஜி மாமன்னர்**" பட்டமேற்றார்.

மன்னர் சரபோஜியின் கல்வித்திறனும், கலைவளர் பற்றும், பொதுப் பணிசெய்யும் பாங்கும் பிறவும் வியப்பிற்குரியது. உலகப் பிரசித்திபெற்ற '**சரசுவதி மகாலால்**' இன்றும தன் புகழை மணக்கச்செய்யும் மன்னர், தன் ஆட்சியாண்டு 6-வதில், அதாவது கி. பி. 1803ல், தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் தென்புறத் திருச்சுற்று மாளிகையில், தன் தாய்மொழியான மராத்தி மொழியில் கலவெட்டொன்றைப் பொறிக்கச்செய்தார். பொதுவாகத் தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள கல்லெல்லாம் கதைசொல்லும்;

வடிவெல்லாம் வரலாறு கூறும். அவ்வாற்றல் இக் கல்வெட்டு கூறுவது "போசலகுல வரலாறுகும்." போசலகுலம் என்பது, சரபோஜியின் 'போன்ஸ்லே வமிசம்' ஆகும்.

"போன்ஸ்லே வம்ச சரித்திரம்" என்ற பெயரால், மூலமொழியாம் மராத்திமொழியிலும், மொழிபெயர்ப்பாம் தமிழ்மொழியிலும், சுருக்கம் ஆங்கிலத்திலும், எமது சரசுவதிமகால் வெளியிட்ட இக் கல்வெட்டின் தொடக்கம் :—

"ஸ்ரீமத் போன்ஸ்லே வம்சமானது, ஆதி ஸ்ரீமந் நாராயணரிடம், ஸ்ரீஸூர்ய நாராயணர், மனு, இக்ஷ்வாகு முதலியவர்கள் மூலமாய், கிருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம இந்த மூன்று யுகங்களிலும் தோன்றிய புகழுடைய புண்ணிய புருஷர்களான அரசர்களின் பரம்பரையில் உதித்தது.

இவ்வம்சத்தின் மூலபுருஷராகிய சம்பு என்பவர் இக்கலியுகத்தில் சம்புமஹேலப் பிரதேசத்தில், மஹாராஷ்டிர தேசத்திற்கு அதிபதியாக விரம், கொடை முதலிய உயர் குணங்களால் பிரசித்திபெற்று, நீதிமுறைப்படி ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார்.

* * *

அந்த வரத்தின்படியே சம்புராஜாவின் உதர சமுத்திரத்தில் குணரத்தினக் குவியலெனக் கீர்த்தியுடன் "ஏகோஜி ராஜன் பிறந்தார்." என்று தொடங்கி;

"தற்சமயம் சரபோஜி மகாராஜா எப்பொழுதும் சிவபுராணத்தைக் கேட்டுக்கொண்டும், சிவபூஜையைச் செய்துகொண்டும், யாத்திரை செய்து கொண்டும் சரியான வழியில் காலத்தைக் கழிக்கிறார்.........சரியான மார்க்கத்தில் இராச்சிய பரிபாலனம் செய்து வருகிறார். (பக். 136)

* * *

இப்படிப்பட்ட இந்த சரித்திரம், முதல் வர்ணத்தைச் சேர்ந்தவரும் மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவரும், பகவந்த ராயரின் பௌத்திரரான விட்டல ராயரின் புத்திரரும், தற்சமயம் சோழ நாட்டின் அதிபதியான ஸ்ரீமந்த் ராஜே ஸ்ரீ மகாராஜா சத்ரபதி சரபோஜி மகாராஜா சாகேப் அவர்களின் உண்மையான ஊழியரும் காரியதரிசியுமான, காசியப கோத்திரம், ஆசுவலாயன சூத்திரம், ரிக்வேத சாகையைச் சேர்ந்த 'பாபுராவ்' என்பவரால், சாலிவாகன சகம் 1759, ருதிரோத்காரி வருஷம், மார்க்கசீர்ஷ மாதம், கிருஷ்ணபக்ஷ அமாவாசைக்குச் சரியான கி. பி. 1803 ஹூ டிசம்பர் மீ 13-உ எழுதி முடிக்கப்பட்டது" என்று முடிந்திருக்கிறது.

இது, கி பி. 1803 என்பதால், சரபோஜிமன்னர் காலத்திலேயே வெட்டப் பட்டதாகத் தெரிகிறது ஆயினும் இது குறித்து ஒருசாராருக்குக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. "**சிவபாரதம்**" என்ற நூலின் ஒப்புமையினால் இவ் வரலாறு சற்று மாறுபடுகிறது" என்றும், "வடநாட்டில் 'வெங்கோஜி' என்றழைக்கப்பட்டிருந்தும் தமிழ்நாட்டில் 'ஏகோஜி' என்பது இடைச் செருகல்" என்றும், மகாராஷ்டிரத்தில் உள்ள பூனா நகரைச் சேர்ந்த மேஜர் 'நாராயண பாலகிருஷ்ண கத்ரே' அவர்கள் கூறுகின்றார்.

மேலும், அவர், 'இக்கல்வெட்டு சிவாஜி II மன்னனால் வெட்டப்பட்டது' என்ற சிலர் கூற்றினை மறுத்துத் தன் கருத்தாக "இக் கல்வெட்டு துளஜா மன்னருடைய காலத்தில் கொஞ்சம் செய்திருக்கவேண்டும் என்று கருத இடமிருக்கிறது. ஆங்கிலேயருடைய காலத்தில் சிவாஜி II ஏற்படுத்தினார் என்பது பொருந்தாது. இக் கல்வெட்டு யார் காலத்தில் ஏற்பட்டது என்று ஐயப்பாடாகவே உள்ளது" என்று கூறுகின்றார். மேலும் இவர் சில கருத்துக் களைக் கூறி இதனை நிலைநாட்டுகின்றார். இவை ஆய்வுக்குரியன.

இக் கல்வெட்டு கூறும் செய்திகள் :— ஒரு முறையான வரலாறு, மகாராஷ்டிர வமிசத்தைப்பற்றி அறிய முடிகின்றது. சம்பு மன்னர் முதலாக ஆதி சிவாஜி ராஜா வரையிலும், அவர் தம் உடன் பிறந்தார் ஏகோஜி முதல் தன் வரையிலும் ஆன வழித்தோன்றல்களையும், அவ்வப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சுவைபடக் கூறியுள்ளார். ஏகோஜிக்கு முன் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் முழுச் செய்தியினையும் கூற வாய்ப்பில்லை போலும். இக் கல்வெட்டில் அரசனாலும், எழுத்தாளராலும், கல் தச்சராலும் சில மாறுபாடுகள் காணப்படுகின்றன.

எனினும் தன்னடக்கமாகத் தற்புகழ்ச்சியின்றி, இக் கல்வெட்டு காணப் படுவது வியப்புக்குரியது. மன்னர்கள் தங்கள் மெய்க்கீர்த்திகளைக் கூறிய பின்னரே செய்திகளைக் கூறுவர். ஒரு சிறு செயலுக்காகக் கல்வெட்டு ஏற்படுத்தினும், தமது மெய்க்கீர்த்தியே பெரும்பகுதி இடங்கொள்ளும். இம் மன்னனின் கல்வெட்டுக்களில் "**ஸ்ரீ மங்கள மூர்த்திர் ஜெயதி ஸ்ரீமத் போசலகுலமணி சரபேந்திர மகாராஜா சாயேப் அவர்கள்**" என்று ஒரு சிலவற்றில் மட்டுமே காணப்படுகின்றன. பிறவற்றில் "**ராஜ ஸ்ரீ சரபோஜி மகாராஜா**" என்றே காணப்படுகின்றன.

'மிகப்பெரிய கல்வெட்டு இது' என்றுகூடக் கூறத் தகுதிவாய்ந் துள்ளது இது. இதில் சரபோஜி மன்னர் செய்த பல அரிய செயல்கள் இடம் பெறவில்லை. இவர் பட்டத்திற்குவந்த 6-வது ஆண்டில் ஏற்பட்டதால் அக்குறை ஏற்பட்டுள்ளது. இக் கல்வெட்டில் குறிப்பிடத்தக்க சுவையான செய்தி ஒன்றுண்டு.

தஞ்சையில், மராத்திய ஆட்சி, 'ஏகோஜி' மன்னரால் ஏற்படுத்தப் பட்டபோது, அவர்தம் இளவல் சிவாஜி மன்னர் தஞ்சைக்கு வந்து, ஏகோஜி மன்னருக்குத் தெரியாமல், தஞ்சாவூர்க் கோட்டையைச் சுற்றிப் பார்த்து விட்டு. தான் வந்ததற்கு அடையாளமாகத் தன் தலைப்பாகையை ஒரு கடையில் வைத்துவிட்டு (பக். 65)த் தனது இருப்பிடம் சென்று, ஏகோஜி மன்னருக்குக் கடிதம் எழுதித் தான் வந்து தஞ்சையின் அரிய கோட்டையைப் பார்த்ததாகவும், அது கருடனைப்போன்ற உருவத்துடன் இருப்பதாகவும், தான் வந்ததற்கு அடையாளமாக வைத்த தலைப்பாகையை வாங்கி அனுப்புமாறும் தெரிவித்தார். பிற செய்திகளை ஷெ நூலில் காணலாம்.

இப் பெரியகோயிலிலுள்ள வேறு (S.I I. 420 of 1924) கல்வெட்டினால், இக் கோயில் திருச்சுற்றில் (பிரகாரத்தில்) உள்ள விநாயகர் கோயிலைச் செப்பம் செய்து, கருவறையும், அர்த்தமண்டபமும், மகாமண்டபமும், பிற மண்டபங்களும் கட்டினார் என்று தெரிகின்றது. மேலும், இதில் உள்ள பழைய விநாயகர் உருவத்தினை எடுத்துவிட்டுப் புதியதோர் விநாயகர் உருவச்சிலையினை அமைத்தார்.

இக் கோயிலின் பின் திருச்சுற்று மாளிகையில் 108 சிவலிங்கங்களை அமைத்துக் குடமுழுக்குச் செய்து. அதன் நித்திய பூசைக்காக, சென்னை, மிஸ்தர் ஹாரிங்டன் அவர்களிடம் 29-5-1802-ல் 5,000 புலிவராகன், வருடத்திற்கு 10 வராகன் விகிதத்தில் கொடுத்து, வ்வொரு ½ ஆண்டிற்கு 250 புலிவராகன், புலிவராகன் 1க்கு ரூ. 3-8-0 வீதம் ரூ. 875/- வட்டி பெற்று, அதனைத் தவறுமல் செய்ய ஏற்பாடு செய்தார்.

திருச்சுற்றுக்குச் செங்கல் தளவரிசையிட்டுள்ளார். பெருவுடையாருக்கு வெள்ளி (ரிஷப வாகனம்) விடையூர்தி செய்துவைத்தார். மேலும் முருகர் சந்நிதிக்கு முன்னுள்ள கல்யாண மண்டபம் இவர் கட்டியதாகத் தெரிகின்றது.

மற்றுமொரு குறிப்பு S. I. I. Vol. II Introduction Page 13 Footnote-ன்படி.

"The Mahrathi Inscription on the inner wall of the south enclosure which is dated in Saka 1723, Durmathi (= A. D. 1801-02) states that the Mahratha King Sarphoji Maharaja executed elaborate repairs to the shrines of Ganeasa, Subramaniar, The Goddess (Brihannayaki), Sabhapathi, Dakshinamoorthy and Chandesvara, built one or two new mandapas and renovated the prakara walls, the temple kitchen and the flooring of the courtyard" என்று கூறுகின்றது.

இவர் எடுத்த கோயில்களும், புதுக்கிய கோயில்களும், விரிவுபடுத்திய கோயில்களும், அறக்கட்டளை செய்த கோயில்களும், பிறவும் மிகப்பலவாகும். அவற்றுள் ஒன்றிரண்டு காண்போம்.

தஞ்சை அரண்மனை வாயிலுக்கு எதிரே, கீழராஜ வீதியில், அருள்மிகு '**பாண்டுரங்கன் கோயில்**' இருக்கிறது. இதனை, மன்னர் சரபோஜி, தான் பண்டரிபுரம் சென்றுவந்ததன் நினைவாகக் கட்டுவித்துள்ளார். அதன் கல்வெட்டு:—

"ஸ்ரீ மங்கள மூர்த்திர் ஜெயதி ஸ்ரீமத்போசலகுலமணி சரபேந்திர மகாராஜா சாயேப் அவர்கள், ஸ்ரீ பாண்டுரங்காலய பசனசாலா தர்மம் சொஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1740, கலியுக சகாத்தம் 4919 யிதின் செல்லாநின்ற வெகுதானிய ஸூ மாசி-மீ அபரபட்சம் சதுர்த்தசி சோமவாரம், மகாசிவராத்திரி சுபதினத்தில் இந்த தர்மம்" என்பதாகும்.

இக் கல்வெட்டு, கோயில் முன்வாசல் வலது புறத்தில் மராத்தியிலும், இடது புறத்தில் மேலே தமிழிலும், கீழே தெலுங்கிலும் (ஒரே கல்லில்) வெட்டப்பட்டுள்ளது. இதன் நாள் 1-3-1819 ஆகும். மேற்கு நோக்கியுள்ள இக்கோயிலின் பாண்டுரங்கனைப் பண்டரிபுரத்தினின்றும் கொண்டுவந்து அமைத்ததாகக் கூறுவர். பண்டரிநாதனைப் பஜனை செய்வதற்கேற்ப 4 மண்டபங்கள் அமைந்துள்ளன. திருச்சுற்று, நந்தவனம், கருவறைக் கோபுரம், முன்கோபுரம் முதலியன அழகுற அமைந்துள்ளன.

இக்கோயிலின் தெற்கே சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்தில், கீழராஜ வீதியில், கீழ்சரகில் கிழக்குநோக்கிய கோயிலொன்று, அருள்மிகு "**மணிகர்ணிகேசுவரர் கோயில்**" என்ற பெயரால் இருக்கிறது. இதற்குப் 'புதுக்கோயில்' என்ற பெயரும், இதனை ஒட்டிய சந்துக்குப் 'புதுக்கோயில் சந்து' என்ற பெயரும் இன்றும் வழங்கி வருகின்றன.

இவர், காசியாத்திரை செய்து திரும்பியபின், இது கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. இவர், காசியில் கங்கைக் கரையில் '**மணிகர்ணிகா**' என்ற படித்துறை கட்டியுள்ளார். அதன் நினைவாக இக் கோயிலெழுப்பி, மூலவருக்கு அருள்மிகு '**மணிகர்ணிகேசுவரர்**' என்ற பெயர்சூட்டி, அம்மன் சந்நிதி, பரிவார தெய்வங்களான விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர், சனீசுவரர், பைரவர், சூரியன் முதலானவர்கள் சந்நிதியும் மடைப்பள்ளி முதலியனவும் கட்டியுள்ளார். பெரிய அளவில் மூன்று கோபுரங்கள் அழகுற அமைந்துள்ளன.

மேற்கூறிய செய்திகளைக்கூறும் கல்வெட்டு காணப்படவில்லை. ஆயினும் இக் கோயிலில் பிற மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

1. 23-8-1865ல் தஞ்சாவூர் அரண்மனை அகிலாண்டபாய் அம்மாள் நடராசர் சந்நிதியைக் கட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

2. 19-12-1892ல் ஷெ அரண்மனை ஸ்ரீமன் மங்களவிலாசம் பெரிய தர்மாம்முபாயி அம்மாள், ஏஜெண்டு ஆபீஸில் ரூ. 250/- கொடுத்து, அதன் வருமானம் கொண்டு, இக் கோயிலுடையாருக்குப் பதினெட்டாம்பெருக்குக்கு ரூ. 8/-ம், அன்னபிஷேகத்துக்கு ரூ. 5/-ம் கொடுத்து, அபிஷேகம், நைவேத்தியம், சுவாமி புறப்பாடு முதலானது செய்யவேண்டும் என்று கூறுகிறது.

3. 23-4-1897ல் ஷெ அரண்மனை கோரிலட்சுமுபாயி அம்மாள், கஜானாவில் ரூ 1000/- கொடுத்து, அதன் ஆண்டு வருமானம் ரூ. 60/ ஐக் கொண்டு நித்தியபூசை, நைவேத்தியம் முதலானதுகள் செய்ய ஏற்படுத்தினதாகத் தெரிகின்றது.

தஞ்சாவூர் மேலராஜ வீதியில் அருள்மிகு '**டபீர் விஜய ராமசாமி கோயில்**' இருக்கிறது. டபீர் ராமர் என்றும் அழைக்கப் பெறுவர். இக் கோயிலின் வாயிற்படியில், மராத்தியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டொன்று காணப்படுகிறது. அதில் சரபோஜி மன்னர் கி. பி. 1805-ல் இக்கோயிலைப் புதுப்பித்துள்ளதும் இக்கோயில் பெருமாளுக்குப் பெரியதோர் தேர் செய்து கொடுத்ததும் அறியக் கிடைக்கிறது.

தஞ்சையில் 'எல்லையம்மன் கோயில் தெரு' என்று ஐயன் கடைத் தெருவையடுத்துள்ளது. இதில் கிராம தேவதை எனப்படும் அருள்மிகு '**எல்லையம்மன்**' கோயில்கொண்டுள்ளாள். இதனை 'ரேணுகாதேவி' என்று மராத்தியர்கள், தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடுவர். பழையதான இக் கோயிலை, சரபோஜி மன்னர் தனது ஆட்சியாண்டில் விரிவுபடுத்திப் புதுக்கினர். கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நர்த்தன மண்டபம், முன்கோபுரம், வாயிற்படிகள், திருச்சுற்று, அதிலுள்ள மாதங்கி அம்மன் சந்நிதி, மற்றும் நாக கன்னிகை, சண்டிகேசுவரர் முதலான பரிவார தெய்வங்களின் சந்நிதிகள், மடைப்பள்ளி, மதிற்சுவர், தளவரிசை முதலானவைகளைச் செய்து, திருப்பணி செய்துள்ளார் என்பது இக் கோயிலின் நிலைவாயிற்படி நிலைக்கல்லில் மராத்திய எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளது.

தஞ்சாவூர், வடக்கு ராஜவீதி (தற்போது தூயபேதுரு உயர்நிலைப் பள்ளியின் மேற்கு)யில் அருள்மிகு "**இரத்தினகிரீஸ்வரர்**" திருக்கோயில் உள்ளது. இக் கோயில், சரபோஜி மன்னர் காலத்தில் கட்டப்பட்டது. இதற்கு ஒரு சுவையான வரலாறுண்டு.

மன்னர் சரபோஜி, தனது காமக்கிழத்தியாம் முத்தம்பா பாயிசாகேப் அவர்களின் உயிர்ப்பலி காரணமாக ஒரத்தநாட்டில் கிடைத்த புதையல் பெரும்பொருள் கொண்டு, அவர்களது வேண்டுகோளின்படி, ஆண்டோர் சத்திரம் கட்டினார். ஒரு பெருவேள்வியும் செய்தார். இப் பெருவேள்விக்குரிய கல்வெட்டொன்று ஷெ சத்திரத்தின் வாசலில் உள்ளது. அவ் வேள்வியின் அவிர்பாகத்தினை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனை ஏற்றுக்கொள் வாருக்குப் பெரும்பொருள் அளிப்பதாக மன்னர் கூறவே, பழமானேரி அண்ணா சாஸ்திரிகள் என்பார், அதனை ஏற்று, மிகுசெல்வத்தையும் பெற்று, அப் பொருள்கொண்டு இந்த அருள்மிகு இரத்தினகிரீசுவரர் கோயிலைக் கட்டி, காசியினின்றும் இலிங்கம் கொண்டுவந்து அமைத்து வழிபடலானார். இக் கோயில் ஷெ சாஸ்திரிகளுக்கும், அவர் தம் வழித்தோன்றல்களுக்கும் சொந்தமானது.

தஞ்சைக்கு வடக்கே சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் விண்ணாற்றங் கரைக்குத் தெற்கே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அருள்மிகு **'ஆனந்தவல்லி சமேத தஞ்சபுரீசர்'** கோயில் மிகவும் தொன்மை வாய்ந்ததும் வரலாற்றுச் சிறப்புடையதும், புராண வரலாறு கொண்டதும் ஆகும். இக் கோயில் **'ஆனந்தவல்லி அம்மன் கோயில்'** என்றே வழங்கப்பெறும்.

பராசக்தியாகிய காளிதேவி, தஞ்சன், தண்டகன், தாரகன் ஆகிய அசுரர்களைக் கொன்றபின், மகரிஷிகள் ஆனந்தம் அடையும் வண்ணம் சூலத்துடன் காட்சியளித்ததால் **'ஆனந்தவல்லி'** என்றும், தஞ்சைக்குப் பெயர் கொடுத்ததால் **'தஞ்சேசர்'** என்றும் தலபுராணம் கூறும்.

இந்த ஆனந்தவல்லி அம்மன் சந்நிதிக்கு எதிரே நர்த்தனமண்டபமும் நந்திமண்டபமும் கட்டிய செய்தியை, அம் மண்டபத்தின் மேற்கு வெளிப் பகுதியில் தெற்கு நோக்கிய மராத்திக் கல்வெட்டு:

'ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா அவர்கள் ஸ்ரீ ஆனந்தவல்லி அம்மன் சந்நிதியில் நர்த்தனமண்டபம் செங்கல்லால் கட்டப்பட்ட தருமம்' என்று கூறுகிறது.

சரபோஜி மாமன்னரின் பாட்டனாரான சத்திரபதி பிரதாபசிம்ம மகாராஜா காலத்திலிருந்தே, பிரெஞ்சுக்காரருக்கும், மராத்திய மன்னர் களுக்கும் போர் நடந்து வந்தது. சரபோஜி மன்னர் காலத்தில் கி.பி. 1814ல் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சு நெப்போலியன் போனபார்த்தேக்கும் போர், வாட்டர்லூ என்ற இடத்தில் நடந்தது. அப்போரில் ஆங்கிலேயருக்கு உதவியாகப் பெரும் சேனைகளை, மன்னர் சரபோஜி உதவினார். அதனால் ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். அவ் வெற்றியைத் தன் வெற்றியாகக் கருதிப்

பட்டுக்கோட்டை வட்டம், சாளுவநாயக்கன் பட்டணத்தில் ஒரு கப்பல் துறைமுகத்தை ஏற்படுத்தி, அதில் நினைவுச்சின்னமாக ‘‘மனோரா’’ என்ற வெற்றிச் சின்னத்தை எழுப்பினார். அது கலங்கரை விளக்கமாகவும் அக்காலத்தில் பயன்பட்டது. இதன் சிறப்பு விரிப்பில் பெருகும். இதில் உள்ள கல்வெட்டு :—

‘‘இங்கிலிசு சாதியார் தங்கள் ஆயுதங்களினாலடைந்த செய சந்தோஷங்களையும் போன பாற்தெயின் தாழ்த்தபடுதலையும் நினைவு கூர்தற்காக இங்கிலீசு துரைத்தனத்தின் சிநேகிதரும் படைத்துணைவருமாகிய தஞ்சாவூர் சீர்மை மகாராராசாச சத்திரபதி சறபோசி மகாராசாவவர்கள் இந்த உப்பரிகையைக் கட்டிவைத்தார்கள், சகம் ௲௭௱௩௰௬-ல’’. என்பதாகும். இது தமிழ், ஆங்கிலம், மராத்தி, தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் உள்ளன.

இதனையடுத்த ‘மருங்கைப்பள்ளம்’ என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலில் ஒரு கல்வெட்டும், ‘பாப்பு ராஜபுரம்’ என்ற ஊரில் வைத்திய நிபந்தக் கல்வெட்டு ஒன்றும், அறந்தாங்கி சிவன்கோயிலில் ஒரு அறக் கட்டளைக் கல்வெட்டும், கும்பகோணம் இராமசாமி கோயிலில் ஒரு கல்வெட்டும் பிறவும் அங்காங்கே காணப்படுகின்றன.

மன்னர் சரபோஜி அவர்கள்தம் கல்வெட்டுக்கள் யாவும் ஒருசேர வெளிவருமாயின் வரலாற்றுக்குப் பயன்தரும்.

வாழ்க சரபோஜி மன்னர்.

மருத்துவத் துறையில் மன்னர் சரபோஜி

(புலவர் **இரா. திலகம்,** தஞ்சாவூர்.)

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமான தஞ்சையம்பதியைத் தலை நகரமாகக் கொண்டு ஆண்டு வந்த மரபினர் பலர். அவர்களுள் சோழர்களை யடுத்த நாயக்கர்களுக்குப்பின் வந்த மராட்டிய மன்னர்களே வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளனர். இம்மராட்டிய மன்னர்கள் வரிசையில், இன்றும் அழியாப்புகழ் பெற்று விளங்கும் மாமன்னர் சத்திரபதி சரபேந்திர பூபாலர் என்கின்ற சரபோஜி மன்னரேயாவர். இவர் துளஜா மகாராஜாவின் சுவீகாரப்புத்திரர் என்றும், இவர் ஆட்சிக்காலம் கி. பி. 1798 முதல் 1832 முடிய என்றும் வரலாற்றால் அறியக் கிடைக்கின்றது.

இம் மாமன்னர் சரபோஜி, உலகத்திலே அழியாப்புகழ்பெற்று எந்நாட்டவரும் கண்டு களிக்கும் வண்ணம் கலைக்கோவில் எனத்திகழும் சரசுவதிமகால், சங்கீதமகால், தன்வந்திரிமகால் போன்ற 18 மகால்களை அமைத்தார். அதில் ''தன்வந்திரிமகால்'' என்ற வைத்திய ஆராய்ச்சிக் கழகம் மன்னர் சரபோஜி வைத்தியத்துறையில் ஆற்றிய அரும்பணிகளைப் பற்றிக் கூறுகிறது.

அரசர்கள் 32 வகை ஆயுதங்களுடன் நான்கு வகைச் சேனைகளையும் காலமறிந்து பகைவர்களை வென்று உயிர்களைக் காப்பதுபோல தேவ சிகிச்சை-1, இராக்கத சிகிச்சை-1, மானிடசிகிச்சை-30 என்கிற சிகிச்சாயுதங்களையும், ஔஷதியென்கிற நால்வகைச் சேனைகளையும் கொண்டு காலமறித்து வியாதிகளென்கிற பகைவர்களை வென்றார் மன்னர் சரபோஜி. வைத்திய முறைகளை மக்கள் அறிந்து கொள்ள வைத்திய ஆராய்ச்சிக்கழகம் என்னும் தன்வந்திரிமகாலை ஏற்படுத்தி, சித்த வைத்தியம் முதலான மருத்துவங்களின் அனுபோகங்களில் சிறந்த பண்டித சிரோன்மணிகளைக் கொண்டு, தமது ராஜ குடும்பத்திற்கும், நகரவாசிகளுக்கும் உபயோகமாகும் பல விசேஷதிரவியங்களைச் செலவிட்டு மருந்துகளைக் கையாண்டு வந்த அனுபோக முறைகளை மராட்டிய மொழியில் வசன நடையிலும், தமிழ் மொழியில் செய்யுள் வடிவத்திலும் ஓலைஏட்டுப் பிரதிகளில் எழுதி வைக்கச் செய்தார். அச்சுவடிகளை இன்றும் சரசுவதிமகால் நூலகத்தில் காணலாம்.

இவர், நமது சரீரத்தில் அமையப்பெற்ற ஒவ்வொரு அங்கத்திற்கும் தனித்தனி முறையில் வைத்திய முறை கூறியுள்ளார். அவை 18 தொகுதிகளாகும். அம்முறையில் முதலில் இடம் பெறுவது ஐம்பொறிகளில் முக்கிய

மான கண்கள், காதுகள், நாக்கு, மூக்கு, இந்நான்கும் அடங்கிய சிரசேயாகும். "எண் ஜாண் உடம்புக்கு சிரசே பிரதானம்" என்னும் பழமொழியும் நம் நினைவிற்கு வருகிறது ஆகவே இந்த நான்கும் அடங்கிய சிரசுக்குச் சிகிச்சை செய்யும் முறைக்கு **சிரோரோக சிகிச்சை** என்று பெயர்.

இந்த சிரோரோக சிகிச்சையில் தனிப்பட்ட சிரோரோகங்களன்றி மூக்குநோய், வாய்நோய், உதடு, பற்களின் நோய்கள், காதுநோய்கள், தொண்டையிலேற்படும் நோய்கள முதலியவை பற்றியும், அவைகளின் குறிகுணங்களைப் பற்றியும் விளக்குகிறது. கர்ணசூலை, வாதகர்ணசூலை ரோகம், பித்தகர்ணசூலை ரோகம், கபகர்ணசூலை ரோகம், ரத்த கர்ணசூலை ரோகம், ஸந்நிபாத கர்ணசூலை ரோகம், கர்ணநாதம, கூசிகர்ணம் இது போன்ற இன்னும் பலவகை காது நோய்கள் உள்ளன.

மருந்து

காது மந்தம், வாய்வுக்கு மருள் எண்ணெய்:

மருள்வேர் (சாறு) 1 சேர், நல்லெண்ணை 1 சேர், இவைகளை ஒன்று சேர்த்து வசம்பு 1 காசு எடை, சுகக்கு 1 காசு எடை, மிளகு 1 பலம, பூண்டு 1 பலம் இவைகளை இடித்து எண்ணெய்யுடன் கலந்து சிவக்கும்படி எரித்துப் பதத்திலிறக்கிக்கொண்டு தலையில் தேய்த்துத் தினந்தோறும் ஸ்நாநம செய்து வந்தால் காதுமந்தம் வாயு முதலியவை தீரும்.

இங்ஙனமாக சிரோரோகத்தில் அடங்கிய ஒவ்வொரு வியாதிக்கும் தனித்தனியாக ஆயுர்வேத முறையில் மருத்துவம் கூறப்பட்டுள்ளது.

அடுத்து ஐம்புலன்களில் முக்கியமானது கண். அக்கண்களின் அமைப்பு, அவற்றில் உண்டாகும் வியாதிகளுக்கு மருத்துவமும் கூறுகிறது நயனரோக சிகிச்சையாகும். இந்த நயனரோக சிகிச்சையை ஆராய்ந்து பார்த்தால் கண்களுககு இத்தனை வியாதிகள உண்டு என்பதை அறியலாம். அவற்றிற்கான சிகிச்சையும் கூறபபட்டிருக்கிறது. கண் உறுப்புக்களுக்குள் சென்று மிகக் கடுமையாகப் பாதிக்கும் கண்நோய்கள் கண்கலக்கம், கண் வீக்கம், பீளைசாரல், கனத்தல், அனத்தல், கண்களில்வலி, கண்களில் சிவப்பு, இரைப்பையில் குத்துவலி, இமைகளினடியில் உருத்தல், கண் கூச்சம், பார்வைக் குறைவு முதலியன. இவ்வியாதிகளுக்கு நயனரோக சிகிச்சை என்ற நூலில மருந்துகள் கூறப்படுகின்றன. ஆயுர்வேத முறைப்படி கண்களிலேற்படும் ரோகங்கள் 94 ஆகும் என அவர் மருத்துவத்தினால் அறியப்படுகிறது.

அடுத்து இவர் வைத்திய சாத்திரத்தில் இடம்பெறுவது காச, சுவாச சிகிச்சையாகும். இவற்றில் வாத காச இலட்சணங்கள், பித்தகாசத்தின் குறிகள், கபகாசத்தின் குறிகள், சுவாசம் வருகின்றவிதம், பிரதமகம், காச ரோகம் முதலான சிகிச்சைகள் அடங்கும். இவ்வியாதிகளுக்கு இவர் சித்த வைத்திய முறைப்படி மருத்துவம் கூறுகிறது. உதாரணமாக,

இருமலுக்கு சுக்காதிக் கற்பம் :

சுக்கு திப்பிலி, கடுக்காய்த் தோல் இம்மூன்றையும் சரி எடை எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு அதில் தண்ணீர் சிறிதுவிட்டு, அக்கினியின்மேல் வைத்து, நேகவரைத்துக்கொண்டு அவ்விழுதில் ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இருமல் தீரும். இம்முறை அவர் அனுபவ ரீதியில் கண்டதேயாகும்.

குன்மரோகசிகிச்சை என்ற தொகுதியில் எட்டுவித குன்மங்களையும் அவற்றிக்கான மருத்துவத்தையும் கூறுகிறார். குன்மரோகம் என்பது வயிற்றில் உண்டாகும் வியாதிகளைப்பற்றிக் கூறுவது. வாயுகுன்மம், வாதகுன்மம், பித்த குன்மம், கபகுன்மம், சன்னிகுன்மம், எரிகுன்மம், சக்திகுன்மம், வலிகுன்மம் முதலியன.

அடுத்து நீரிழிவு சிகிச்சை என்ற தொகுதியில் நீரிழிவு. பிரமேஹம், பிரமியம். மேகம். வெட்டை என்ற பலவகை மூத்திர ரோகங்களுக்கான முறைகளும் அவற்றிற்கான சிகிச்சைகளையும் பற்றிக் கூறுகிறார். இவை பிரமேஹம் என்ற இருபது வகை ஜலரோகங்களையும், மேகநீர், மேகப்புண் முதலிய தோலைப்பற்றிய வியாதிகளையும் கூறுகிறது.

வாதரோகசிகிச்சை என்னும் தொகுதியில் மனோவியாதிகள், தேக வியாதிகளைப்பற்றிக் கூறுகிறார். மனோவியாதிகளுக்கு ரஜோகுணமும், தமோ குணமும் காரணங்களாகும் என்றும், தேக வியாதிகளுக்கு பயம் முதலியன காரணங்களாகும் என்றும் கூறுகிறார். வாத, பித்த, கபங்கள் செய்யும் வேலைகள் பற்றியும், பித்தம், கபம், வாதத்தின் ஸ்தானங்கள், வாதத்தின் வகை, பித்தத்தின் வகை, சிலேஷ்மத்தின் வகை வாத வியாதிகளின் பொதுவான சிகிச்சை முதலியன கூறுகிறார்.

உதாரணமாக **அண்டவாதத்திற்கு மருந்து :—**

வெள்ளைப்பூண்டுத்திரி, வெங்காயம், முடக்கொத்தான் கொழுந்து, கழற்சிக்கொழுந்து இவை வகைக்கு 3 பிடி தனித்தனியே வேக வைத்து 1உரி ஆமணக்கெண்ணெயிற் பிசைந்து வெயிலில் வைத்து 3 நாள் ஒரு வெருகடிப்

பிரமாணம் விதம் வெற்றிலையில் வைத்து, காலையில், சாப்பிட்டு வீக்கத்தின் மேலும் பூச அண்டவாதம் தீரும்.

ஜுரரோக சிகிச்சையில் ஜுரஉற்பத்தி, ஜுரத்தின் வகைகள், வாத, பித்த சந்திபாத ஜுரத்தின் வகைகள், லக்ஷணங்கள், பூர்வரூபம், ஜுரத்தின் குறிகள் கூறப்படுகின்றன. ஆகந்துக ஜுரவகைகள். தாதுகதஸ்வரங்களின் லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன.

பாண்டு காமாலை சிகிச்சையில் பாண்டுநோய் வரும் காரணங்கள். ஏற்படும் விதம், காமாலையின் வகைகளான வாதகாமாலை, பித்தகாமாலை, சிலேத்தும காமாலை, பித்தவாத காமாலை, மஞ்சட்காமாலை, ஊதுகாமாலை முதலிய பலவகையான காமாலைகளின் வகைகளும், அவற்றின் இலட்சணங்களும் ஆங்கில முறைப்படி குறி குணங்களும், சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

உதாரணமாக **கைகால் வீக்கத்திற்கு மருந்து** :-

ஆவாரம் பட்டை, சுக்கு இவ்விரண்டையும் சமனெடையெடுத்து 8 மடங்கு ஜலம்விட்டு, எட்டிலொன்ருகக் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிடக் கைகால் வீக்கம் தீரும்.

விஷரோக சிகிச்சையில் விஷத்தின் பொதுவான குணங்கள், ஸ்தாவர விஷ நிதானம், பாம்புக்கடியிலுள்ள பேதங்கள், விஷக்கடிக்கும், விஷமற்ற கடிகளுக்கும் உள்ள பேதங்கள், ஸர்பஉற்பத்தி, ஸர்பங்களுக்கு எதிரிகள், விஷத்தின் இருப்பிடம், ஸர்பங்களின் ஜாதிகள், விஷப்பற்களின் கடி லக்ஷணம், விஷப்பரீக்ஷை, பாம்பு கடிக்கக் காரணம், மரணலக்ஷணம், இன்னின்ன தினங்களில் கடிக்கும் பாம்புகளின் பேதமும், விஷம் இருக்கும் இடமும், நல்லபாம்பு கடித்தால் அதிலிருந்து உண்டாகும் வேகங்கள் முதலியனவும், சிலந்தி, எலி, வெறிநாய், தேள் முதலியவற்றின் விஷங்கள் பற்றியும், சிகிச்சையும், மேலும் அரளி, சேங்கொட்டை, ஊமத்தை, எட்டிக் கொட்டை, அபினி, கஞ்சா, நாபியின் முதலியவற்றின் நஞ்சு பற்றியும் கூறுகிறது.

உதாரணமாக **எலிகடிக்குச் சாறடை ரொட்டி** :

ஒரு பிடி பச்சையரிசியுடன் முற்றிய சாறடைவேர் இரண்டையும் சேர்த்துத்தண்ணீர் விட்டு ஊரவைத்து நன்ருக அரைத்து அடைதட்டிச் சாப்பிடவும். பசுவின் நெய்யில் தோய்த்து உட்கொள்ளவும், 18 வித எலிகடிகளும் 3 நாட்களில் தீரும்,

அடுத்து இவர் வைத்திய சாஸ்திரத்தில் இடம் பெறுவது விரண ரோகம், கரப்பான் ரோகம் ஆகிய சரும நோய்களாகும். இதில் இவர் முதலில் விரணசிகிச்சைக்குத் தேவையான ஆயுதங்களைப் பற்றியும், அவற்றை சுத்தமாகக் கையாள வேண்டிய முறைகள் பற்றியும் கூறுகிறார். சரும நோய்களான பிளவை, புற்றுநோய், குஷ்டம், முதலிய பல நோய் களுக்கும் குறிகளும், அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பல மேல் நாட்டு மருத்துவர்களாலும் குணப்படுத்த முடியாத சில புற்றுநோய்கள் சரபோஜி மன்னரின் வைத்திய சாஸ்திரத்தில் கண்ட முறைப்படி சிகிச்சை செய்து அதனால் அந்நோய் தீர்க்கப்பட்டன என்று சில உண்மைகளால் அறியமுடிகிறது.

அடுத்து பித்தரோக சிகிச்சை என்னும் தொகுதியில் பித்தத்தினாலுண் டாகும் பலவித நோய்கள் பற்றியும், அவற்றிற்கு பயன்பெறக்கூடிய மருந்துகள் பற்றியும் அவை கையாள வேண்டிய முறைகள் பற்றியும் கூறப் பட்டுள்ளன. சாத்திரங்களில் கூறப்படும் பித்தத்தின் வகைகளான பாசகம், ரஞ்சுகம், ஸாதகம், ஆலோசகம், ப்ராஜம் முதலிய 5 வகைகளைப் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பித்தததினால் உண்டாகும் 40 வகைப் பயித்தியங்களையும் பற்றிக்கூறுகிறது. அவைகளுக்கு சித்தவைத்திய முறைப்படி மருத்துவம் கூறப்படுகின்றது.

உதாரணமாக பயித்தியம் பிடித்தவனுக்கு நசியம்:-

வெள்ளைச் சாரணைவேர், ஈரவெங்காயம் இவை இரண்டையும் இடித்துப்பொட்டணம் கட்டிக்கொண்டு இரண்டு துளி இரண்டு மூக்கிலும் நசியம் செய்தால் பயித்தியந் தீரும். இவ்வாறு 3 நாட்கள் செய்யவும்.

அடுத்து பேதிமுறைகளும், அதிசாரசிகிச்சையும் பற்றிக்கூறப் படுகின்றது.

வாதாதிஸாரம், பித்தாதிஸாரம், கபாதிஸாரம், திரிதோஷாதிஸாரம், பயாதிஸாரம், துக்காதிஸாரம், ரத்தாதிஸாரம் என அதிஸாரம் ஏழும் விளக்கப்பட்டுள்ளன. கிரகணிரோக லக்ஷணங்கள், அதிஸாரநிதானம், கிரகணிநிதானம் முதலியனவும் கூறப்படுகின்றன. இவற்றிற்கு மருத்துவம் பெரும்பாலும் ஆயுர்வேத முறையில் அடங்குகின்றன.

அடுத்து கூறப்படுவது உளமாந்தை, க்ஷயரோக சிகிச்சையாகும். இதில் உளமாந்தைகளின் வகைகளான வாத உளமாந்தை, பித்த உளமாந்தை, கபஉளமாந்தை, தொந்த உளமாந்தை முதலியன பற்றிக்கூறப்பட்டுள்ளன. பிறகு க்ஷயரோகங்களின் வகைகளான பிர்மக்ஷய லக்ஷணம், ராஜக்ஷயம், வைசியக்ஷயம், சூத்ரக்ஷயம், பித்தக்ஷயம், வாதக்ஷயம்

சிலேத்துமக்ஷயம், வாதபித்தக்ஷயம் வாதசிலேத்துமக்ஷயம் பித்தசிலேத்தும க்ஷயம், விகாரக்ஷயம், தொந்தக்ஷயம், சாத்யக்ஷயம் முதலியன பற்றியும் க்ஷயரோகத்தின் நிதானம், குறிகள், காரணங்கள், உளமாந்தை ரோக காரணங்கள் முதலியவைகளும் கூறப்படுகின்றன.

செல்வத்துள் எல்லாம் சிறந்தது மக்கட்செல்வம் என நம் முன்னோர்கள் உரைத்தனர். அச்செல்வத்தைப் பெரும் பேறுகக் கருதிய மன்னர் சரபோஜி அதற்கென்று ஆயுர்வேதத்தில் ஒரு தனிப்பகுதியை விவரித்திருக்கிறர். அது கர்ப்பிணி பாலரோக சிகிச்சை முறைகள் என்ற பகுதியாகும்.

இதில் கர்ப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள், ருதுவின் லக்ஷணங்கள், சரியான கர்ப்பம் தரிப்பதற்காக ஸ்திரீ, புருஷர்கள் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள், கர்ப்பம் மாதந்தோறும் வளர்ச்சியடையும் விதம், கர்ப்பம் போஷிக்கப்படும் விதம் முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. மேலும் கர்ப்பிணியின் ஆகாரமும், போஷணை விதிகளும், கர்ப்பிணி செய்யக்கூடாத காரியங்களும் அதனுல் ஏற்படும் தீமைகளும், அகால பிரசவத்திற்குக் காரணங்கள், கர்ப்பம் தரித்த பின்னர் ஏற்படும் கோளாறுகளும் அதற்குச் சிகிச்சை முறையும் கூறப்பட்டுள்ளன.

இனி குழந்தைகளுக்கென்று தனிப்பட்ட முறையில் குழந்தைகள் கணச்சூட்டுக்கு மருந்துகள், மாந்த எண்ணெய், பேதி எண்ணெய், உரம் விழுந்த பிள்ளைகளுக்கு மருந்து, தோஷத்திற்கு, குழந்தைகள் புஷ்டியுடன் இருக்க, கீரி நோய்க்கு, கீரிப்பூச்சி நோய்க்கு முதலிய குழந்தைகளின் வியாதிகளுக்கு சித்தவைத்திய முறைப்படி மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

மன்னர் சரபோஜி மக்களுக்கு மட்டுமின்றி மாக்களுக்கும் வைத்திய முறைகளை சேகரித்தும், எழுதியும் வைத்துள்ளார். நமது பழைய வைத்திய நூல்கள் மிருகவைத்தியமும, பக்ஷிகளின் வைத்தியங்களையும் பற்றிக் கூறு கின்றன. இருப்பினும் மன்னர் சேகரித்து வைத்திருந்த மிருக வைத்திய, பக்ஷி வைத்திய முறைகள் பற்றிய ஏட்டுச் சுவடிகள் மிகக்குறைந்த அளவிலே தான் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து ஓரிரு வைத்திய முறைகளே கூறப் பட்டுள்ளன. முதலில் கூறப்படுவது மாட்டு வாகடம் என்னும் பசு, காளை மாடு களின் வைத்தியமாகும். இதில் மாட்டினங்களின் தேக அமைப்பும், வளர்க்கும் முறைகளும், நோய்காணும் விதங்களும் அந்நோய்களுக்கேற்ற நம் நாட்டு வைத்திய முறைகளும் கூறப்பட்டுள்ளன. பசுக்களின் மகத்துவம், மாடு களின் ஆயுள், அவைகளின் பற்கள், நல்ல தேக அமைப்புபெற்ற மாடுகள், உசிதமில்லாத தேக அமைப்புள்ள மாடுகள், அவைகளின் நிறம், சுழிகளின் தன்மை, மாடுகளைப் பராமரிக்கும் முறைகள், தீனி, குளிப்பாட்டும் விதி,

மாட்டுக்கொட்டில் அமைக்கும்விதம், சினைமாடுகள், கன்று இவைகளைப் பாதுகாக்கும்முறை முதலியனவும், பிறகு மாடுகளுக்கு வரும் நோய்களான அழல் வெக்கை நோய், உடுக்கை நோய், கருவடிநோய் போன்ற இன்னும் பலவித நோய்களுக்கு சிகிச்சை முறையும், மருந்தும் கூறப்பட்டுள்ளன. மேலும் மாடுகளை பந்தயங்களுக்கு பயிற்சிதரும் முறையும் விளக்கப் பட்டுள்ளன.

அடுத்து குதிரை வைத்தியம். இதில் குதிரைகளின் பிறப்பு வரலாறு, உபயோகங்கள், பெருமை, குணங்கள், அவைகளின் பற்களைக்கொண்டு வயதுகளை அறியும்முறை, தேகத்தின் சுப, அசுப லக்ஷணங்கள், நிறங்களின் பிரிவுகள், பஞ்சகல்யாணி, அஷ்ட கல்யாணி, முதலிய குதிரைகள் பற்றியும், குதிரைகளுக்குண்டான கிளிஞ்சல் சுழி, கொடிச்சுழி, த்ரேதாக்னி சுழி, மல்லி மொக்குச்சுழி முதலிய 10 சுழிகளின் அமைப்பும், குறிகளும் கூறப்பட்டுள்ளன. அத்துடன் குதிரைகளுக்குவரும் அண்டசாலைநோய், அரணைகடிக்கு, கமரி நோய், கத்தசூலைநோய், கவ்வைநோய், குளம்பு வெடிப்புக்கு முதலிய எண்ணற்ற பலவித நோய்களுக்கும், அவற்றிற்கான சித்தவைத்திய சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

அடுத்து பக்ஷிகளின் வைத்திய முறைகளில் கோழிவைத்தியம் கூறப் பட்டுள்ளன. கோழிகளுக்கு வரும் நோய்களான அகிலி, அம்மை, அஜீரணம, கழிச்சல் நோய், கொக்குநோய், கருப்பு உருண்டை, தலைநோய், நடுக்கல் வியாதி, பூச்சி (பேன், சளளு) உடல் பருக்க, வாந்திக்கு மருந்து போன்ற நோய்களின் தன்மையும், சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ள தோடு, சேவல் சண்டையும், சண்டைச் சேவல்களையும் பயிற்றுவிக்கும் முறைகளும், வளர்க்கும் விதங்களும் கூறப்பட்டுள்ளன.

இன்னும் அகத்தியர் 2000, போகர் நிகண்டு, சரபேந்திர வைத்திய ரத்னவளி முதலான பல வைத்திய நூல்கள் அனுபவ சித்தமான முறைகளை விளக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த வைதத்திய நூல்களிள் பிரதிகள் எமது நூலகத்தில் வெளியிட்டு, விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மன்னர் வளர்த்த வைத்திய நூலகளில் பல இன்னும் நல்ல பலனைத்தந்து பல மக்களையும் காத்து வருகின்றன. எனவே நாம் அனைவரும் அவர்தம் நூல் கொண்டு பலன்பெற்று அவர்தம் நாமம் வாழ்த்தி வாழ்வோமாக.

வாழ்க சரபோஜியின் நாமம்!

NOTABLE EVENTS IN THE LIFE OF SERFOJI MAHARAJ – *(Contd.)*

11-12—1812	Date of composition of Kumara Sambhava Champu.
1815	As a token of the Victory of the British over Napoleon, Manora was built at Sethubbava Chatram.
1818	The marriage of Shivaji Raja Sahib, son of Raja Serfoji was celebrated.
23—9—1820	Serfoji left Tanjore on his pilgrimage to the holiest of holy cities, Benares.
24—4—1822	Returned to Tanjore after Benares tour.
1825	Bhonsle Vamsa Charitam was written by Poet Venkatesa Bhattar. This was inscribed in the walls of Big temple.
30—3—1826	Robinson and Bishop Heber visited the Palace.
1827	Grand-daughter was born to Serfoji.
28—3—1829	Had interview with Bishop Heber and he admired Serfoji.
8—3—1832	Serfoji Maharaj passed away.

Compiled by:

M. SEERALAN, B. A.
(Librarian – Grade II)

சரபோஜி மன்னரும் மராத்தி இலக்கியமும்

T. R. Bheema Rao, Marathi Pandit.

தஞ்சை, பெருமைவாய்ந்த மூன்று பேரரசுகளால் ஆளப்பட்ட சிறப்புடையது. அவை சோழவம்சம், நாயக்கவம்சம், போசலவம்ச மகாராஷ்டிரர்கள்.

இவர்கள் முறையே நாட்டைச் செவ்வனே ஆட்சி புரிந்து மக்கள் நல்வாழ்விலேயே தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். இச்செய்திகளை வரலாறு மெய்ப்பிக்கிறது.

நாட்டை ஆண்ட அரசர்கள் கலைவளர்ச்சியில் ஆர்வம் கொண்டு விளங்கினர். தஞ்சையை அரசாண்ட இரண்டாவது மகாராஷ்டிர அரசரான சகஜி முதல் கடைசி அரசர் சிவாஜி ராஜா வரையில் கலைவளர்ச்சியில் ஆர்வம்கொண்டு, தங்களை அதில் ஈடுபடுத்திக்கொண்டனர். அவ்வகையில் இரண்டாம் சரபோஜி மன்னர் தம் நேரம் முழுவதையும் கலைக்காகவே செலவழித்தார். மிகப் பழமையான சரஸ்வதி பண்டாரகத்தையும் பாதுகாத்தார்.

மன்னர் சரபோஜி மன்னராக நியமிக்கப்பட்டபோது, அரசு நிர்வாகம் யாவும் அன்னிய நாட்டவர்களான ஆங்கிலேயர் வசம் சிக்கி இருந்தது. மன்னர் என்ற பெயரில் சரபோஜி அரசராக இருந்தார். அக்காலத்தில் இருந்து சூழ்நிலைக்குத் தக்கவாறு ஆங்கிலேயர் சரபோஜி மன்னருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு தஞ்சையின் அரசுரிமை யாவற்றையும் பெற்றனர். இதனால் நாட்டு நிர்வாகப் பொறுப்பிலிருந்து சரபோஜி மன்னர் விடுவிக்கப்பட்டார்.

இச்சந்தர்ப்பத்தை, சரபோஜி மன்னர் நல்லவிதமாகப் பயன்படுத்திக் கொண்டார். இவர் சிறுவயது முதற்கொண்டே டேனிஷ்பாதிரி ஸ்வாட்ஸ் அவர்களிடம் ஆங்கிலம் கற்றதனால், பொது அறிவு வளர்ந்தது. சமஸ்கிருதம், மராத்தி, தமிழ் யாவற்றையும் தக்க புலவர்களிடம் பயின்று தேர்ச்சிபெற்றார். இவர் பல மொழிகளைப் பயின்றதனால் பல அரிய விஷயங்கள் தெரிந்துகொள்ள முடிந்தது. இவருக்குப் பிற்காலத்தில் பேரும் புகழும் கிடைத்தன.

ஆட்சிப் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட சரபோஜி தாம் கற்ற பல மொழிப் புலமையை உபயோகித்து பல புலவர்களை தம வசம் வைத்துக்கொண்டு, அரிய பல இலக்கியங்கள் இயற்றக் காரணமாக விளங்கினார். மன்னர் சரபோஜியும் சங்கீதம், நாடகம், நாட்டியம், சித்திரம்

போன்ற கலைகளில் ஆர்வம்கொண்டு இத்துறையில் பல பணிகளைச்செய்து தம் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

சரபோஜி மன்னர் ஆதரவில், சமஸ்கிருதம், மராத்தி மற்றும் தமிழ் ஆகிய மொழிப் புலவர்கள் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளில் பல நூல்களை இயற்றினார்கள். அந்நூல்களில் சரபோஜி மன்னரின் குணாதிசயங்களைப் புகழ்ந்து பாடியும், தெய்வபக்தி, தர்ம சிந்தனை, மொழிப்பற்று, கலைத்திறமைப்புலவர்களை ஆதரித்துப் பொன்னும் பொருளும் கொடுத்து மொழி வித்யாசம் பார்க்காமல் ஆதரித்த தன்மை இவை யாவற்றையும் கூறியிருக்கின்றனர். புலவர்கள் தனியாக பல நூல்களை எழுதியும், சரபோஜி மன்னர் பெயரில் பல நூல்களை எழுதியும் அரங்கேற்றியும் இருக்கிறார்கள். மன்னர் சரபோஜியின் புகழ்ச்சியில் மகிழ்ந்த புலவர்கள் ''மன்னரின் நிழலில் வாழும் நாங்கள் செஞ்சோற்றுக்கடனைச் செலுத்துவதற்காக இந்நூல்களை சரபோஜி மன்னர் வேண்டுகோளின்படி இயற்றினோம்'' என்று கூறியுள்ளனர்.

மன்னர் சரபோஜி புலவர்களுக்கு கொடுத்து வந்த ஆதரவினாலும், கொடையாலும், சமஸ்கிருதம், மராத்தி, தமிழ் ஆகிய மொழியில் இலக்கியமும், வைத்திய சாஸ்திரமும், சித்திரக்கலையும் வளர்ந்தன.

இப்படைப்புக்கள் யாவும் இன்னும் புகழ்பெற்ற 'சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில்' இருந்து மன்னர் சரபோஜியின் புகழை எடுத்துக் கூறுகின்றன. இந் நூல்கள் இருக்கும் வரையில் மன்னரின் புகழ் ஓங்கி நிற்கும். பெருமை வாய்ந்த மன்னர் சரபோஜியின் காலத்திய புலவர்களைப்பற்றியும், மராத்தி நூல்களைப்பற்றியும் இங்கே காண்போம்.

மன்னர் சரபோஜியும் மராட்டிப் புலவர்களும்

1. இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் வாழ்ந்தவர்கள் :-

விருபாட்சகவி, ரங்கநாதகவி, கோவிந்தகவி, உடகே கோவிந்தாச்சாரியார், துண்டிசுதசிவா, ராமசகா முதலியவர்கள்.

இப்புலவர்கள் தம் தாய்மொழியான மராத்திமொழியில் பல இலக்கியங்களைப் படைத்தனர். இவர்களைத் தவிர கிருஷ்ண சாஸ்திரி, வெங்கடேச சாஸ்திரி, நரசிம்ம சாஸ்திரி, அப்பு தீட்சிதர், கிருஷ்ணஸ்வாமி சக்கரவர்த்தி, தம்மாசார், மன்னார் கிருஷ்ணாச்சார், ஸ்ரீனிவாசகவி, சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர், மராட்டியப்புலவர் ஹீருசாமி காட்கேயும், சமஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளில் புராணவரலாறு

ஆதாரங்களைக்கொண்டு பல இலக்கியங்களைப் படைத்தார்கள். தங்களை ஆதரித்த சரபோஜிமன்னனைப் புகழ்ந்து பாடியும் பெருமையுறச் செய்து உள்ளார்கள். இப்புலவர்களைப் பற்றியும் இவர்கள் இயற்றிய இலக்கியப் படைப்புக்களைப் பற்றியும் விவரமாகக் கீழே காண்போம்.

1. விருபாட்சகவி :—

விருபாட்சகவி சரபோஜி மன்னருக்கு மிகவும் வேண்டியவராக இருந்தும், சரஸ்வதி பண்டாரகத்தில் உள்ள சமஸ்கிருத மொழியில் காணும் பல புராண இதிகாச நூல்களின் ஆதாரத்தைக் கொண்டும் மராத்தி மொழியில் பல நூல்களை மொழி பெயர்த்துள்ளார்.

பவிஷ்யோத்திர புராணத்தை ஆதாரமாகக் கொண்டு 'அக்னீஸ்வர மகாத்மியம்', ஸ்காந்தம் சனத்குமார சம்ஹிதா - சிவரகஸ்ய ஸ்தோத்திர கண்டக்கின் ஆதாரத்தைக் கொண்டு 'ஆதிகைலாச மகாத்மியத்' தையும், பத்மபுராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு 'மாகமகாத்மியம்'; பிர்மகை வர்த்தபுராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் வரலாற்றையும், காவேரி நதியின் ஐந்து பிரிவுகளைப்பற்றி விவரித்து 'பஞ்சநத மகாத்மியம்', என்ற தலைப்பில் ஒரு நூலும் எழுதியிருக்கிறார். இவ்வாசிரியரின் இப்பஞ்சநத மகாத்மியம் நூல் நமக்கு முழுவதுமாகக் கிடைக்கவில்லை. அது ஒரு பெரும் குறையே. இவருடைய மற்றோர் அரிய படைப்பைப் பற்றி நாம் மிகவும் பெருமை கொள்ளத் தக்கதாக இருக்கிறது. அது யாதெனில் தமிழ் கூறும் நல்லுலகம், சிறப்புடன் கூறும் அறுபத்து மூன்று நாயன் மார்களின் வரலாற்றுப் பெருமை களைக் கூறும் 'சிவபக்த மகாத்மியம்', என்னும் தலைப்பில் வடமொழியில் ஹரதாஸர் என்பவர் இயற்றியதை ஆதாரமாகக் கொண்டு, 'பக்தவிலாஸம்', என்ற தலைப்பில் மராத்தி மொழியில் ஒரு நூல் இயற்றி இருக்கிறார்.

இப்புலவர் வடமொழியில் காணும் பல புராண வரலாற்றினை பாமர மொழியினரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மராத்தி மொழியில் மொழி பெயர்த்து எழுதினார். அது போற்றத் தகுந்ததே. இவையாவும் தெய்வத்தன்மை பொருந்திய வரலாறுகள் ஆகும். அதைவிடப் பெருமைப் படக்கூடியது என்று புலவர் நினைத்து, தமிழ் நாட்டில் தெய்வ பக்தியும் சமயநெறியும் கொண்டு பண்புடன் வாழ்ந்து, சைவத்தை வளர்த்த பெரியோர்களின் வரலாற்றினையும் தம் தாய்மொழியினர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மராத்தி மொழியில் மொழிபெயர்த்து எழுதியிருக்கிறார். இதனால் மொழி வேறுபாடு கொள்ளாமல் புலவர் இலக்கியப்பணி செய்தது நமக்குப் புலனாகிறது.

வீருபாட்ச கவி தாம் இயற்றிய மேலே கூறிய நூல்களைச் சரபோஜி மன்னரின் வேண்டுகோளின்படியே வடமொழியிலிருந்து மராத்தி மொழியில் மொழி பெயர்த்ததாகத் தம்நூலில் கூறுகிறார். மேலும் சரபோஜி மன்னரின் தெய்வ சிந்தனையையும், தயாள குணத்தையும், அவர் புலவர்களிடம் கொண்டுள்ள மதிப்பினையும், தான தருமங்களையும் புகழ்ந்து கூறுகிறார். மேலும் சரபோஜி மன்னர் காசி முதலான புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வந்த நிகழ்ச்சிகளையும் புகழ்ந்து கூறுகிறார். மேலும் மன்னர் சரபோஜியின் "நவவித்யா கலாநிதிசாலா" என்ற கல்விக் கூடத்தினைக் கூறிப் புகழ்கிறார். இவ்விதமாக மேலே கூறிய நூல்களைப் புலவர் கி. பி. 1826 முதல் 1828 முடிய ஆண்டுகளில் இயற்றியதாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

2. ரங்கநாதகவி :—

ரங்கநாதகவி சரஸ்வதி பண்டாரகத்தில் காணும் புராண ஆதாரங்களைக் கொண்டு மராத்தி மொழியில் நூல்களை மொழி பெயர்த்துள்ளார். அவை 'கார்திக மகாத்மியம்', 'துலா மகாத்மியம்' முதலியவையாகும்.

இவ்வாசிரியர் இவைகளைத் தவிர நாடக இலக்கியத்திற்கு அரும்பணி புரிந்திருக்கிறார். மராத்தி மொழியில் முதன் முதலில் நாடக இலக்கியம் தஞ்சை மகாராஷ்டிரர்கள் ஆட்சியில்தான் படைக்கப்பெற்றன. இதை மிகத் தெளிவாக மகாராஷ்டிரதேச தற்கால சரித்திர நூல் ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும் அப்பெருமையை முழுவதும் பெறக் கூடிய நாடக இலக்கிய கர்த்தா, தஞ்சையை அரசாண்ட முதல் மகாராஷ்டிர மன்னர் ஏகோஜியின் மூத்த மைந்தர் சகஜி மன்னரையே சாரும். சகஜிமன்னர் நாடக இலக்கியத்திற்கு நல்ல சேவை செய்து, சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு, தமிழ் மற்றும் ஹிந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புராண வரலாறுகளின் ஆதாரத்தைக்கொண்டு பல அரிய தலைப்புக்களில் நாடகங்களை இயற்றியிருக்கிறார். அவை சங்கீத சாகித்யங்களைக் கொண்டு முதன்மையாகத் திகழ்கின்றன.

சகஜியைப் பின்பற்றி அவருக்குப்பின் தஞ்சையை அரசாண்ட பிரதாபசிம்ஹ ராஜாவும் பல நாடக நூல்களை இயற்றினார்.

இவர்களை முன்னோர்களாகக்கொண்டு இரண்டாவது சரபோஜி மன்னர் பெயரில் சில நாடக நூல்கள் காணப்படுகின்றன. ஆனால் அவையாவும் மேலே கூறிய ரங்கநாத கவியின் இலக்கியப் படைப்புக்களேயாகும்.

ரங்கநாதகவி இயற்றிய கணேசவிஜயம் கணேசலீலார்ணவம் ஆகிய நாடகங்களில் அவற்றைத் தாம் இயற்றியதாகவே அந்நாடகங்களில் கூறுகிறார். இவை தவிர சரபோஜி மன்னர் பெயரில் காணும் மற்ற நாடகங்களான

சிவராத்திரி உபாக்கியானம், கங்காவிஸ்வேஸ்வர பரிணயம், மோஹினி மகேச பரிணயம், ராதாகிருஷ்ண விலாஸம் முதலிய நாடகங்களின் அமைப்பை நோக்குங்கால் மேலே கூறிய ரெங்கநாத கவியின் படைப்புக்களை ஒத்துக் காணப்படுகின்றன. ஆகையால் இந்த நாடகங்களும் ரங்கநாதகவியே இயற்றி சரபோஜி மன்னர் பெயரில் பரந்தமனத்துடன் அங்கிதம் செய்திருக்கிறார் என்பது கண்கூடு. மேலும் ரங்கநாதகவி தம் நாடகங்களில் சரபோஜி மன்னரை ஆசீர்வதித்துப் புகழ்ந்து கூறுகிறார்.

இவ்வாறாக ரங்கநாதகவி இயற்றிய நாடகங்கள் நவராத்திரி விழாவிலும், விநாயகசதுர்த்தி உற்சவ விழாவிலும், அரசர் அரண்மனை அரங்கிலும், பிருகதீஸ்வரர் கோவிலில் வசந்த உற்சவகாலத்திலும் நடத்தியிருப்பதாக நாடகக் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது.

இந்நாடகங்கள் மராத்தி மொழியில் அமைந்து இருந்தபோதிலும், அக்காலத்தில் தஞ்சையில் வாழ்ந்த மக்கள் இந்நாடகங்கள் உயர்ந்த சங்கீத அமைப்பிலும் புராண வரலாற்றைப் பின்பற்றியும் இருப்பதை உணர்ந்து நல்லவிதமாக ஆதரித்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

ஆசிரியரின் சிவராத்திரி உபாக்கியானம் கங்கா விஸ்வேஸ்வரபரிணயம், மோஹினி மகேசபரிணயம் போன்ற நாடகங்களில் சரபோஜி மன்னரை இரண்டாம் துளஜா தத்து எடுத்துக்கொண்ட விவரத்தினையும், அவர் வம்ச பரம்பரை விவரத்தையும் குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன் சரபோஜி மன்னரின் நிழலில் வாழும் நான் இந்த நாடகத்தினை இயற்றினேன் என்றும் குறிப்பிடுகிறார். இவை யாவற்றையும் நோக்குங்கால் சரபோஜி மன்னர் காலத்தில் இயற்றிய நாடகங்கள் யாவற்றிற்கும் ரங்கநாதகவியே ஆசிரியர் என்று நமக்கு நன்றாக விளங்குகிறது. இதைத் தவிர தேவேந்திர குறவஞ்சி என்னும் நாடகம் உலகத்தில் உள்ள பல கண்டங்களையும் அவற்றில் உள்ள தேசங்களையும் அத்தேசங்களில் உள்ள முக்கிய நகரங்கள், மலைகள், ஆறுகள் முதலிய பெயர்களையும் வருணித்து உலக பூகோள வரலாற்றை அறியும் வண்ணம் அமைத்து அதை ஒரு குறப்பெண் வாயிலாக பாடல் மூலமாக உணர்த்துவதாக இவ்வாசிரியர் இந்நாடகத்தினை இயற்றியிருக்கிறார். இந்த விதத்தில் மராத்திய போசலகுல மன்னர்கள் ஆதரவினால் இதுபோன்ற நல்ல இலக்கிய படைப்புகள் கவிஞர்களால் படைக்கப்பட்டன.

மேலே கூறிய நாடகங்களைத் தவிர தமிழில் நாயன்மார்களின் சரித்திரத்தில் புகழுடன் காணும் திரு நீலகண்ட நாயனார், திரு கண்ணப்ப நாயனார் இவர்கள் வரலாற்றையும் மராத்தி மொழியில் ஹரிகதா காலட்சேபம் செய்யும் வடிவத்தில் ஸ்லோகம், ஆர்யா, சாகி, திண்டி, பதம், லாவணி

போன்ற மராத்திமொழி சந்தத்தில் அமைத்து இயற்றப்பட்டிருக்கிறது. இவை யாவும் சரபோஜி மன்னர் பெயரிலேயே நம் நூல் நிலையத்தில் காணப்படுகின்றன இந்நூலின் தொடக்கத்திலும் முடிவிலும் மாத்திரம் சரபோஜி மன்னர் பெயர் குறிப்பிடப்படுகிறது. ஆனால் கதையில் காணும் பாடல்களிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ சரபோஜி மன்னர் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆகையால் இந் நூலாசிரியர் கதையை அமைத்துத் தொடக்கத்திலும் முடிவிலும் அரசரைப் புகழ்ந்து பாடி இச் சங்கீத நூல்களை இயற்றி இருக்கிறார் என்று கருதவேண்டியதாக இருக்கிறது.

மேலே கூறிய இருகதைகளைத் தவிர ஸ்காந்த புராணத்தில் காணும் கிராதார்ஜுனீயம் உமாமகேஸ்வரவிரதம் பஞ்சாட்சரி, வீபூதி சிவராத்திரி மகிமையை வருணிக்கும் கதையையும் சனிப்பிரதோஷம், பஞ்சப்பிரதோஷம் போன்ற விரதத்தின் மகிமையைக் கூறும் கதையும் இவரால் இயற்றப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக ரங்கநாதகவி சரபோஜி மன்னரின் ஆதரவிலிருந்து மன்னர் மனமறிந்து மேலே கூறிய அரிய புராண வரலாறு நூல்களை இயற்றிப் பரந்த மனத்துடன் சரபோஜி மன்னருக்கு அங்கிதம் செய்து மதிப்புடன் வாழ்ந்து தன் தாய்மொழியான மராத்தி மொழிக்கு அரிய இலக்கியப்பணி செய்திருக்கிறார் என்று அறியமுடிகிறது.

3. கோவிந்தகவி :—

கோவிந்தகவி சமஸ்கிருதத்தில் ஆக்நேய புராணத்தின் ஆதாரத்துடன் 'தனுர்மாத மகாத்மியம்' ஸ்கந்த புராணத்தின் ஆதாரத்துடன் 'வைசாக மகாத்மியம்' பிர்ம்மகைவர்த்த புராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு 'பஞ்சநத மகாத்மியம்' என்ற திருவையாற்று ஸ்தலபுராண நூலும் மொழி பெயர்த்திருக்கிறார். இந்த 'பஞ்சநத மகாத்மியம்' நூல் முழுவதுமாக நமக்கு கிடைக்கவில்லை. இப்புலவர் தம் நூல்களில் மன்னர் சரபோஜியை, 'சிறந்த சிவபக்தன் தயாள குணமுள்ளவன், தர்ம சிந்தனை கொண்டவன் புலவர்களை அன்புடன் ஆதரிக்கும் தன்மையுடையவன்' என்று புகழ்ந்து கூறியிருக்கிறார்.

4. உடகே கோவிந்தாச்சாரியார் :—

இப்புலவர் சரபோஜி மன்னருக்கு மிகவும் அன்புடையவராக இருந்து 'சிவலீலா, ஹரிலீலா', 'ராம-உமா சம்வாதம்' என்ற தலைப்புகளில் ஹரி கதை செய்யும் வடிவத்தில் (நிருபணம்) அமைத்துச் சிறு நூலாக இயற்றி இருக்கிறார். இவர் ஜோதிட சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்திருக்கிறார்.

'துவாதசபாவ' என்ற தலைப்பில் பன்னிரண்டு ராசிகளின் தன்மைகளை விவரித்துச் சிறு நூலாக அமைத்து மங்களாஷ்டகம் பாடும் பாணியில் இயற்றி இருக்கிறார். இதைத் தவிர சரபோஜி மன்னரைப் புகழ்ந்து பல பாடல்களும், மங்களாஷ்டகம் ஸ்லோகங்களும் இயற்றி இருக்கிறார்.

5. துண்டி சுத சிவா :—

சிவா, சரபோஜி மன்னர் தமிழ் நட்டில் ஸ்தல யாத்திரையாகச் சென்று வந்த விவரத்தினையும், வடநாட்டில் காசி முதலான புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வந்த விவரத்தினையும் ஒரு யாத்திரை நூலாக வருணித்து இயற்றியிருக்கிறார். இந் நூலில் சரபோஜி மன்னர் கோவிலுக்கும் புண்ணியஸ்தலத்திற்கும் சென்ற விபரமும் அவ்விடங்களில் செய்த தான தர்மங்கள், பூஜைகள் மற்றும் அப்புண்ணிய ஸ்தலங்களின் புராணவரலாறு விபரத்தினையும் சிறு குறிப்புகளுடன் தெரிவித்து மிகவும் நல்லவிதமாக இந்நூலை இயற்றி இருக்கிறார். இந்நூலின் மூலமாக புண்ணிய ஸ்தலங்களின் வரலாறுகளை தெரிந்துகொள்ள மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது.

'தீர்த்த யாத்திரை லாவணி' என்ற தலைப்பில் ஒரு நூல் காணப் படுகிறது. இந்நூல் சரபோஜியின் ஸ்தல யாத்திரையைக் குறிக்கும்படி இருக்கிறது. இந்நூல் சரபோஜி மன்னர் இயற்றியதாக குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனல் இந்நூலின் நடையும் மொழியில் காணும் தன்மையும் பார்த்தால் 'சரபேந்திர தீர்த்தாவளி' இயற்றிய துண்டிசுதசிவாவே இயற்றி மன்னர் பெயரில் அங்கிதம் செய்து இருக்கலாம் என்று எண்ணத் தோன்று கிறது. அதற்குக் காரணம் யாதெனில் இந்நூலின் ஒவ்வொரு லாவணியின் அங்கத்தின் முடிவிலும் 'சரபோஜி சொல்கிறார், மன்னருக்கு இப்புண்ணிய ஸ்தலத்தில் ஸ்நானம் செய்ய, 'தெய்வத்தினை தரிசனம் செய்ய பாக்கியம் கிடைத்தது, போன்ற வாக்கியங்களால் முடிவடைவதால் இந்த யாத்திரை லாவணி நூல் மன்னர் இயற்றியதாகக் கொள்ள முடியாமல் இருக்கிறது. மன்னரே இயற்றி இருந்தால் தம் பெயரை சந்தேகமறக் குறிப்பிட்டிருப்பார். மேலும் முதலில் கூறிய 'சரபேந்திர தீர்த்தாவளி' என்ற நூல் 'சரபோஜி மன்னர் யாத்திரைசெய்த விவரத்தினைக் கேட்டு நான் இயற்றினேன். நான் மன்னருடன் ஸ்தல யாத்திரை செய்யவில்லை' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவைகளை நோக்குங்கால் 'தீர்த்தயாத்திரை லாவணி' நூலும் திருதுண்டிசுத சிவனே இயற்றியிருக்கிறார் என்று நமக்குச் சந்தேகமறத் தெரிகிறது.

சிவா இதைத்தவிர சரபோஜிமன்னர் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் செய்த திருப்பணிகள், சிவலிங்க பிரதிஷ்டை, ஸ்ரீரங்கம், திருவானைக்கோயில் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வந்த விவரத்துடன் 'சரபேந்திர சிவதர்ம' என்ற நூலை இயற்றியிருக்கிறார்.

இவ்வாசிரியருடைய அரிய படைப்பு நாட்டிய அபிநயத்திற்கான சங்கீத சாஹித்யங்கள் ஆகும். இவை சமஸ்கிருதத்தில் காணும் அபிநய தர்ப்பணம், நிருத்யாத்யாய போன்ற நூல்களிலிருந்து ஆதாரத்துடன் இந்த நாட்டிய பிரபந்தங்களை மராத்தி மொழியில் இயற்றியிருக்கிருர். இச்சாஹித்யங்கள், தமிழ் நாட்டில் மிகவும் புகழுடன் விளங்கும் கர்நாடக சாஹித்யங்களை ஒத்து நல்லமுறையில் அமைக்கப்பட்டிருப்பதால், மகாராஷ்டிரர்கள் நாட்டிய அபிநயத்தில் ஆர்வம் கொண்டு செய்ய நினைப்பவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

6. ராமசகா :—

ராமசகா என்னும் புலவர் சரபோஜி மன்னரின் ஒரே ஆண் வாரிசான திரு சிவாஜி ராஜாவுடையதும் மற்ற ஐந்து பெண்களின் திருமண வைபவத்தையும் வருணித்து 'மங்களாஷ்டகம்', என்ற ஸ்லோக வடிவத்தில் அமைத்து ஒரு நூல் மிகவும் அருமையாக இயற்றி இருக்கிருர். இதில் மாப்பிளை வீட்டாரின் குலம், கோத்திரம் பெண்வீட்டாரின் குலம், கோத்திரம் மகாராஷ்டிர மன்னர்களின் திருமண சடங்குகளின் விவரங்கள், அதைச் செய்யும்விதம், மணமக்களின் ஆடை அணிகலங்களின் வருணனை, திருமணமண்டபத்தின் ஜோடனைகள் பற்றிய வருணனை, திருமணத்திற்கு வருகை தந்த பிரமுகர்கள்பற்றியதும், அரச குடும்பத்தினரைப்பற்றியதும் வருணனை, வைபவத்தில் முழங்கிய மங்கள வாத்தியங்களின் வருணனை முதலியவைகளை நேர்த்தியாக விவரித்து இப்பாடல்களில் கூறியுள்ளார்.

